# சத்தியத்தின் குரல்



## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

' திருமறை ஆசான் '
' கிருபையுள்ள வார்த்தை '
' வேர்டு ஆப் கிரைஸ்ட் '

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385

சத்தியத்தின் குரல் Volume - 45 THE VOICE OF TRUTH INTERNATIONAL

மலர் : 45

# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 45



## ஆசிரியர் உரை
# சபை அங்கத்தினருரிமை
# Church Membership

Louis Rushmore

காலஞ்சென்ற சகோதரர் T.Pierce Brown கீழ்க்காணும் ஆழமான, அதே நேரத்தில் வேதாகமத்தின்படி சரியான சில காரியங்களை எழுதினார். **சபை அங்கத்தினர் உரிமை என்பது இரட்சிப்பின் உட்பொருளாக இருக்கிறது என்று எழுதினார்.** சிலர் தங்கள் மனதில் இரட்சிப்பிலிருந்து சபை அங்கத்தினர் உரிமையை அகற்றி விடுகிறார்கள். ஆனால், உண்மையில் அவை இரண்டிற்குமிடையில் பிரிக்க முடியாத வேதாகம தொடர்பு இருக்கிறது. ஒருவர் சபையில் அங்கம் வகிக்காமல் இரட்சிப்பை அனுபவிக்க முடியாது. அதேபோல் ஒருவர் தன்னுடைய கடந்தகால பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வில்லையென்றால் உண்மையாக சபையில் அங்கத்தினராக முடியாது. தனிப்பட்ட நபர்கள் வேறுவிதமாக கற்பனை செய்து கொண்டாலும் சபை அங்கத்துவமும், இரட்சிப்பும் நிரந்தரமாக பிரிக்கமுடியாமல் பின்னப்பட்டிருக்கிறது.

ஒருவர் இரட்சிப்புக்குள்ளாகப் பிரவேசிப்பதற்கு என்ன செயல் முறை பின்பற்றப்பட்டதோ அதே செயல்முறைதான் ஒருவர் சபை அங்கத்துவத்துக்குள் பிரவேசிக்கவும் பின்பற்றப்படுகிறது. இதைத் தான் பரிசுத்த வேதாகமம் **அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:47** ல் தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந் தார்கள். **இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனு தினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என்று பார்க்கிறோம்.**

இரட்சிப்பு மற்றும் சபை அங்கத்துவத்துக்கு வழிநடத்தும் செயல்முறை பாவமன்னிப்புக்காக மூழ்குதல் அல்லது ஞானஸ்நானம் பெறுதலில் போய் முடிகிறது [ரோமர் 6:3-5; அப்போஸ்தலர் 2:37-41]. பொதுவாக, மார்க்கப்பிரிவினை உபதேசம் கட்டாயப்படுத்துகிறது போல் அல்லாமல் தண்ணீர் ஞானஸ்நானம் உண்மையாகவே இரட்சிக்கிறது [1பேதுரு 3:20-21]. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனித மீட்புக்கான தெய்வீகத் திட்டத்தை [மாற்கு 16:16] ல் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார். அதாவது, ஞானஸ்நானத்தோடு விசுவாசத்தை கூட்டினால் இரட்சிப்பு உண்டாகிறது.

சரீரப் பிரகாரமான ஞானஸ்நானத்திற்கு ஒத்தவாறு ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியானவர் இரட்சிக்கப்படுகிறவரை கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் சேர்க்கிறார் (I கொரிந்தியர் 12:13; எபேசியர் 1:22-23; கொலோசெயர் 1:18) அது கிறிஸ்துவின் சபையாயிருக்கிறது (ரோமர் 16:16). எனவே, இரட்சிப்பும் சபை அங்கத்துவமும் ஒரே செயல்பாட்டை உடையதாயிருக்கிறது. ஆகவே, சபை அங்கத்துவத்தை விமர்சிப்பது ஒருவருடைய இரட்சிப்பை விமர்சிப்பது போன்றதாகும். மேலும், ஒருவர் சபை அங்கத்துவத்தின் கடமைகளை செய்யத் தவறுவது (எபிரெயர் 10:25), ஒருவருடைய இரட்சிப்பை ஆபத்துக்குள்ளாக்குகிறது (எபிரெயர் 10:26-31).




ஒரு கிறிஸ்தவருடைய இரட்சிப்பின் ஆரோக்கியம் அவருடைய சபை அங்கத்துவத்தின் ஆரோக்கியத்தைப் பொறுத்தே அமையும். ஒருவர் சபை அங்கத்தினராக இருந்து கொண்டு சபைக்கடுத்த காரியங்களில் ஈடுபட்டால் அது அவருடைய ஆரோக்கியம் அல்லது இரட்சிப்பிற்கு அடையாளமாயிருக்கிறது. இருந்தபோதிலும், எண்ணற்ற புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் கிறிஸ்தவர்களைப்போல் நடந்து கொள்ள வேண்டுமென்று கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்துகிறது. முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் (எபேசியர் 5:8). கர்த்தருடைய சபையானது தனிப்பட்ட கிறிஸ்தவர்களாகவும் ஒட்டுமொத்த சபையாகவும் இரட்சிக்கப்பட்டவர்களின் சரீரமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

✝





### நிர்வாக ஆசிரியர் உரை

## ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான்

## Enoch Walked With God

*E.Z.S. Rajanayagam*

ஏனோக்கு 300 ஆண்டுகள் தேவனோடு சஞ்சரித்தான் என்று வேதாகமம் கூறுகிறது. [ஆதி.5:22] எனக்கு மிகவும் பிரமிப்பூட்டக்கூடிய வேதபகுதி இது. சரி, சஞ்சரித்தல் என்றால் என்ன? ஆங்கில வேதாகமம் சஞ்சரித்தான் என்பதற்கு பதில், **நடந்தான்** என்று சொல்லுகிறது. ஆங்கில வேதாகமத்தில் பயன் படுத்தப்பட்டுள்ள வார்த்தையைக் காட்டிலும் தமிழ் வேதாகமத்தில் உள்ள சஞ்சரித்தல் என்ற வார்த்தை பொருள் செறிந்த வார்த்தையாகக் காணப்படுகிறது. ''சஞ்சரித்தல்' என்றால், ''வாழ்தல் என நாம் பொருள் கொள்ளமுடியும். அப்படியானால், ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான் என்பதற்கு பதில், அவன் தேவனோடு வாழ்ந்தான் என்று கூறமுடியும். பரலோகத்தில் இருக்கின்ற தேவனோடு பூமியிலிருந்த ஏனோக்கு வாழ்ந்துள்ளான். இது எப்படி சாத்தியம் என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், வாழ்ந்தான் என்று வேதாகமம் கூறுகிறது. ஆகவே, அவன் வாழ்ந்துதான் உள்ளான்.

தேவனோடு வாழ்வதற்கு ஏனோக்கு என்ன செய்திருப்பான் என நினைக்கிறீர்கள்? ஆமோஸ் தீர்க்கனின் ஒரு வசனத்தை இங்கே கவனியுங்கள். இரண்டுபேர் ஒரு மனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போக முடியாது [ஆமோஸ்3:3] ஒருமித்து நடப்பதற்கே ஒருமனம் தேவையானால், ஒருமித்து வாழ்வதற்கு? நிச்சயமாக இதைவிட மேலான நிலை வேண்டும். அதாவது, தேவன் அவனுக்கு கற்பித்து, அவனிடத்தில் எதிர்பார்த்த காரியங்களைக் காட்டிலும், மிக அதிகமான செயல்பாடு உள்ளவனாக அவன் இருந்திருக்கவேண்டும். ஆகவேதான், எபிரேய ஆசிரியர், ஏனோக்கு விசுவாசத்தினாலே எடுத்துக் கொள்ளப்பட்டான் என்று கூறுகிறார். [எபி. 11:5]

**1.ஏனோக்கு நல்ல முன் மாதிரியை வைத்துச் சென்றுள்ளான்**

ஏனோக்கிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் முதல் பாடம், அம்மாமனிதன் நமக்கெல்லாம் விட்டுச் சென்றிருக்கும் முன் மாதிரியான வாழ்க்கை. பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு மனிதரும், நமக்குச் சிலவற்றைப் போதிக்கிறார்கள்.

இன்னும் ஒவ்வொரு சம்பவமும் நமக்குச் சில காரியங்களைப் போதிக்கிறது. ஒருவேளை, அந்தப் போதனைகள் நமக்கு வழிகாட்டு தலாகவோ அல்லது எச்சரிப்பாகவோ இருக்கக்கூடும். உதாரணமாக, காயீன், ஆபேல் பற்றிப் படிக்கும்போது, இரண்டு பேரிடமிருந்தும், இரண்டு வித்தியாசமான பாடங்கள் கிடைக்கிறது. ஒரு வகையில் இரண்டு பேருமே நமக்கு முன்னுதாரணமாக உள்ளனர். ஆபேல் விசுவாசத்திற்கும், காயீன் அவிசுவாசத்திற்கும் முன்னுதாரணம். (எபி.11:4)

இப்பொழுது நாம் முந்நூறு ஆண்டுகள் தேவனோடு சஞ்சரித்த மாமனிதனாகிய ஏனோக்குப் பற்றி பார்த்துக் கொண்டுள்ளோம். பரிசுத்த எழுத்துக்கள் அவன் முந்நூறு ஆண்டுகள் தேவனோடு வாழ்ந்தான் என்று சொல்லுகிறது. இவன் எந்தப் பாவமும் இல்லாமல் அந்த முந்நூறு ஆண்டுகளும் வாழ்ந்தானா அல்லது விழுந்தாலும் உடனடியாக எழுந்து, தேவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்தானா என்று நமக்கு சரிவரச் சொல்லப்படவில்லை. ஏசாயா தீர்க்கனின் கூற்றுப்படி பார்த்தால், பாவம், மனிதனையும் தேவனையும் பிரித்துவிடும். ஏனெனில், உங்கள் பாவங்கள், உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் முன்பாக பிரிவினை உண்டாக்குகிறது'' என்கிறார். (ஏசா.59:2). ஆனால், இந்த ஏனோக்கு, 300 ஆண்டுகள் வாழ்ந்து, எந்தவொரு காரியமும் தனக்கும், தேவனுக்கும் பிரிவினை உண்டாக்காமல் வாழ்ந்தவனாகவும், அப்படியே ஏதாவது நேர்ந்தாலும், அவைகளிலிருந்து தன்னை உடனடியாக விலக்கி தேவனுடனான தனது உறவைச் சீர் செய்து வாழ்பவனாகவும் இருந்துள்ளான். நாமெல்லாம் பின்பற்றுவதற்கு எவ்வளவு அருமையான முன்னுதாரணம் பாருங்கள்!

## II. ஏனோக்கு தேவனோடிருக்கும் சிலாக்கியம் பெற்றான்

இரண்டாவதாக, ஏனோக்கிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம், தன்னுடைய நீதியான வாழ்க்கைக்குப் பரிசாக அவன் என்ன பெற்றுக் கொண்டான் என்பது.

பரலோகத்திலிருந்திறங்கினவரும், பரலோகத்திலிருக்கிற வருமான மனித குமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை (யோவான் 3:13) என்று வசனம் திட்டமாகச் சொல்லுகிறபடியால், ஏனோக்கு, தன்னுடைய நீதியான வாழ்க்கைக்குப் பலனாக நீதிமான்களின் இருப்பிடமான பரதீசிலிருக்கும் ஆசீர்வாதத்தைத் தான் பெற்றிருக்க முடியும். ஆபிரகாம் போன்ற முற்பிதாக்களும், மோசேயைப் போன்ற நீதிமான்களும் இப்பொழுது பரதீசில் தான் இருக்கிறார்கள் என்றாலும், அவர்களெல்லாரைக் காட்டிலும், ஒரு வகையில், ஏனோக்கு விசேஷமானவனே. எப்படியெனில், இவர்களெல்லாரும் மரணத்தை ருசி பார்த்தவர்கள்.

ஆனால், ஏனோக்கு, மரணத்தை ருசிபாராமல் நேரிடையாக எடுத்துக் கொள்ளப்பட்டு பரதீசிக்குள் பிரவேசிக்கும் பாக்கியம் பெற்றுள்ளான். ஏனோக்கின் நீதியான வாழ்க்கைக்கான வெகுமதியைப் பாருங்கள்.

நாம் ஒவ்வொருவரும், நீதியாக வாழ்ந்தால், அந்நாளில், நியாயாதிபதியாகிய இயேசு நம்மைப் பார்த்து, பரலோகத்தில் நீயும் பிரவேசி என்று சொல்லப்படுவதற்கான வாய்ப்பு இல்லாமலில்லை. தாலந்து உவமையில், தன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டதை சிரத்தையுடன் நிறைவேற்றிய மனிதனைப் பார்த்து இவ்விதம் சொல்லப்பட்ட தாக இயேசு சொல்லியுள்ளார். **அவனுடைய எஜமான் அவனை நோக்கி: உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக் காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் ; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்** (மத்.25:27).

ஆணீவே, நம்முடைய விசுவாசத்திற்குப் பலன் உண்டு என்பதை விசுவாசித்து, ஏனோக்கு போன்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்தால் என்றென்றும் தேவனோடிருக்கும் ஆசீர்வாதம் பெறுவோம்.

### III. ஏனோக்கு போல் நாமும் வாழ வேண்டும்

மூன்றாவதாக, நாம் கற்றுக்கொள்ளவேண்டியது, ஏனோக்கு போல் நாமும் வாழ வேண்டுமென்பதுதான்.

அப்படியானால், நம்முடைய நாட்களில் நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும்? ஏனோக்கைப் போல நாம் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த வாழ்க்கை வாழ வேண்டுமானால், கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக்கொள்வது அவசியம்.(பிலி.2:5). ஏனெனில் கிறிஸ்து தன்னை எல்லாச் சந்தர்ப்பத்திலும், மரணத்தின் வாயிலிலும், பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

ஏனோக்கு, தேவனால், தான் எடுத்துக்கொள்ளப்படும் வரைக்கும், தன்னுடைய பக்தி வைராக்கியத்தில் உண்மையும் உறுதியுமுள்ள வனாகவே இருந்துள்ளான். நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் தன்மையும், அதுபோலவே, உறுதியுள்ளதாக இருக்க வேண்டும். அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்கு சொல்லும்போது அதைத்தான் எழுதுகிறார்.''**ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதா வாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக**'' (1கொரி.15:58) இன்னும் வெளி.2:10–ல்

ஆவியானவர் யோவானைக் கொண்டு, ''**... நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்**'' என்று கூறுகிறார்.

ஆகையால், கர்த்தருக்குள் அருமையானவர்களே, நாம் ஒவ்வொருவரும் பரலோகத்திற்குள், ஆம், அந்த நித்திய பாக்கியத் திற்குள் பிரவேசிப்பதற்கான காரியங்களை நம்முடைய வாழ்க்கையில் செய்வோமாக! ஏனோக்கும், நம்மைச் சுற்றிலுமிருக்கிற உலகத்தைப் போன்றதொரு பொல்லாத உலகத்திலே தான் வாழ்ந்தான். (யூதா.14,15) ஆனாலும், அவன், தன்னை கறைபடாதபடி காத்துக் கொண்டான். அவன் வாழ்ந்த அக்காலகட்டத்தில், எந்தவொரு தேவச் சட்டமும் எழுதிக் கொடுக்கப்படவில்லை. தேவனுக்குப் பிரியமாய் வாழ்வதற்கு எதைச் செய்ய வேண்டும், எதைச்செய்யக் கூடாதென்ற பிரமாணங்கள் அவனுக்கு முன்பாக இல்லை . ஆனாலும், அவன், நீதியாய் இப்பூமியில், தேவனோடு வாழ்ந்து, இப்பொழுது நித்திய வாழ்வு வாழ்ந்து கொண்டுள்ளான்.

ஆனால், கிறிஸ்துவுக்குப் பின் வாழும் நமக்கோ, தேவச் சட்டம் முழுமையான அளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவைகள் எல்லாவற்றுக்கும் போதுமானதாக உள்ளது (2தீமோ.3:16,17) எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது, என்ன பேசவேண்டும், எதைப்பேசக் கூடாது, எங்கே போகலாம், எங்கே போகக் கூடாது என்பன போன்றவைகள் மிகவும் தெளிவாக தேவனால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதுமாத்திரமல்ல, இயேசு இந்த உலகத்திற்கு வந்த நோக்கம் பற்றியும் (1தீமோ .1:15), பாவமன்னிப்பு பற்றியும் (அப்.22:16), சபை பற்றியும் (மத்.16:18), அதிலிருக்க வேண்டிய அவசியம் பற்றியும் (அப்.2:47), அதில் பிரவேசிப்பதற்கு என்ன செய்யவேண்டுமென்பது பற்றியும் (மாற்கு 16:16, அப்.2:38), இன்னும் அவருடைய வருகை (அப்.1:11, வெளி.1:7), நியாயத்தீர்ப்பு (2கொரி.5:10). இப்படி எல்லாமே மிகத்தெளிவாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், ஆவிக்குரிய வாழ்வில் நாம் எந்த ஒரு காரியத்திற்கும் தடுமாற வேண்டிய அவசியமில்லை. அப்படி யானால், நாம் எவ்வளவு தூரம் தேவனுக்கு உண்மையாக இருக்க வேண்டுமென எண்ணிப் பாருங்கள்.''**...எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங்கேட்கப்படும்...**'' என்று சொல்லப்பட்டிருக்கிறது (லூக்.12:48). ஆகையால் ஜாக்கிரதையாய் நம்முடைய வாழ்க்கையை மேற்கொள்வோமாக! ✝



# பொய்யான சமாதானம்
## False Peace

Jerry Bates

**அ**நேகருடைய இருதயங்களுக்குள் திருப்தி அலைகளை உண்டாக்கிய ஓர் அழகான வார்த்தை **சமாதானம்** எனும் வார்த்தை. இவ்வுலகில் கிட்டத்தட்ட எல்லோருமே, அவர்கள், எந்த¨ கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி மற்ற எல்லா வற்றையும் விட அதிகமாக விரும்பும் ஒன்று சமாதானமாகும். நாம் நம் சக மனிதர்களோடு சமாதானத்தை விரும்புகிறோம். ஆனால், துரதிஷ்டவசமாக பெரும்பாலான மக்களிடம் அந்த சமாதானம் இல்லை (மத்தேயு 7:13,14) இதில் சோகமான விஷயம் என்ன வென்றால், பலர் இந்த சமாதானத்தைப் பெற்றிருப்பதாக எண்ணி ஏமாற்றமடைகின்றனர். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் இருதயத்தை உடைக்கும் சில வார்த்தைகளை உச்சரித்திருக்கிறார். **பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய் கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்ப தில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே அநேக பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே,** என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

மலைப்பிரசங்கத்தின் இறுதியில் இவ்வார்த்தைகள் சொல்லப் பட்டன. இவ்வார்த்தைகள் பெரும்பாலும் விசுவாசத்தினாலே மாத்திரம் ஒருவன் இரட்சிக்கப்படுவான் என்னும் தவறான உபதேசத்தை எதிர்த்துப் போராட பலராலே பயன்படுத்தப்படுகிறது. இருந்தபோதிலும், இவ்வசனப் பகுதியில் சொல்லப்பட்ட வார்த்தைகளின் முக்கிய நோக்கம் பொய்யான சமாதானம், பொய்யான பாதுகாப்பு உணர்வு, சுய ஏமாற்றம் போன்றவற்றின் ஆபத்துக்களை குறித்து நம் கண்களைத் திறப்பதாகும்; இங்கே ஒரு பயங்கரமான எச்சரிக்கை இருக்கிறது. மிகவும் பயபக்தியுள்ளவர்களாக, தேவனுக்கு நெருக்கமாக

உள்ளவர்கள்போல் தெரிகிறவர்கள் அவருக்கு அந்நியராக மாறும் அபாயம் உள்ளது. இங்கே இயேசு இந்த ஜனங்களை எப்படி விவரிக் கிறார் என்று கவனியுங்கள்.




முதலாவது, அவர்கள் சரி யான நம்பிக்கை உடைய வர்களாகத்தான் இருந்தார் கள் என்று நினைத் தார்கள்.அந்த ஜனங்கள் இயேசுவைக் கர்த்தர் என்று தைரியமாக அறிவித்தார்கள். அப்படி அறிக்கை செய்வதில் தவறு எதுவுமில்லை. நாமெல்லாரும் கூட கிறிஸ்து இயேசுவினிடத்தில் நமக்கிருக்கிற விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் [ரோம் 10:9]. வெறும் வார்த்தைகள் ஒன்றுக்கும் உதவாது. பிசாசுகளும் கூட இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கை யிடுகின்றன [லூக்கா 4:41]. அப்போஸ்தலனாகிய பவுல் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைப் பண்ணுகிற சிலரைப் பற்றி பேசுகிறார் [தீத்து 1:16]. பலர் தங்கள் விசுவாசத்திலும், தங்கள் குடும்பத்தாருடைய விசுவாசத்திலும் நம்பிக்கை வைக்கிறார்கள், ஆனாலும் அவர்கள் இருதயத்திலிருந்து தேவனை சேவிப்பதில்லை. மேலும், இந்த ஜனங்கள் அதிகப்படியான பக்தி வைராக்கியத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் கர்த்தாவே, கர்த்தாவே என்று திரும்ப திரும்பச் சொன்னது அவர்களுடைய பக்தி வைராக்கியத்தை காட்டுகிறது. ஆனால், இருதயப் பூர்வமான கீழ்ப்படிதலும் அர்ப்பணிப்பும் இல்லாமல் வெறுமனே பக்தி வைராக்கியத்தை மட்டும் கொண்டிருப்பது வியர்த்தமாகும்.

இரண்டாவதாக, இந்த ஜனங்கள் கிறிஸ்துவின் நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்கள். இங்கே தீர்க்கதரிசனம் உரைப்பது என்பதன் பொருள் ஆவிக்குரிய செய்தியை வெளிப்படுத்து வதாகும். முதலில், இது சாத்தியமில்லை என்று நினைக்கலாம். இருந்தபோதிலும், ஒருவரால் ராஜ்யத்தில் இல்லாமலேயே சரியான செய்தியை போதிக்கவும், பிரசங்கிக்கவும் முடியும். உதாரணமாக, பிலேயாம் எண்ணாகமம் 22 ஆம் அதிகாரத்தில் சரியான வார்த்தை களைத்தான் பேசினார். ஆனால், பேதுரு இதைப்பற்றி சொல்லும்போது **பிலேயாம் அநீதத்தின் கூலியை விரும்பினதாக** சொல்கிறார் [II பேதுரு 2:15]. பவுல் சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல் மனதினாலும் கிறிஸ்துவை பிரசங்கித்தார்கள் என்று சொல்கிறார் [பிலிப்பியர் 1:15-16]. இன்றைய நாட்களிலும் பிரசங்கியார்கள் இதே

பிரச்சனையை எதிர்கொள்கிறார்கள். சத்தியத்தை பிரசங்கித்து பல ஆத்துமாக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்த பிறகு கூட நாம் இருதயத்திலிருந்து உண்மையாக அப்படிச் செய்யவில்லையென்றால் நாம் இழந்து போய்விடுவோம்.

மூன்றாவது, இந்த ஜனங்கள் பிசாசுகளைத் துரத்தினதாகவும், அநேக அற்புதங்களைச் செய்ததாகவும் சொன்னார்கள். இதற்கு மிகச் சிறந்த முன்னுதாரணம் யூதாஸ்காரியோத் தான். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எழுபது சீடர்களை ஊழியத்திற்கு வெளியே அனுப்பியப் போது அதில் யூதாஸ் காரியோத்தும் இடம் பெற்றிருந்தான். அவர்களால் பிசாசுகளை துரத்த முடிந்தது [லூக்கா 10:17]. இருந்த போதிலும், யூதாசின் இறுதி நிலையை நாமெல்லாரும் நினைவில் வைத்திருக்கிறோம். அவன் முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவை காட்டிக்கொடுத்தான். ஆனால், அவன் மனந்திரும்புவதற்குப் பதிலாக போய் தூக்கில் தொங்கினான். நாம் ஸ்கேவாவின் ஏழு குமாரர்களைப் போல யூத பேய் விரட்டிகளை குறித்துக் கூட [அப்போஸ்தலர் 19:13-16] வசனங்களில் வாசிக்கிறோம். நம் இயேசு கிறிஸ்து **கள்ளக் கிறிஸ்துக் களும், கள்ள தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கதக்கதாய் பெரிய அடை யாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்ள்** என்று எச்சரித்தார் [மத்தேயு 24:24] இன்றும் கூட தெய்வபக்திள்ளவர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்ளுகிற மக்களால் பல அற்புத அடையாளங்கள் செய்யப்படுகின்றன. இவர்களெல்லாம் தங்கள் கடந்தகால சாதனைகளையும், அற்புத அடையாளங்களையும் தேவன் தங்களோடி ருந்து தங்களை ஆசீர்வதிப்பதற்கான ஆதாரங்களாக சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால், அவர்களுடைய போதனைகள் வேத வாக்கியங்களோடு முரண்படும்போது அந்த பெரிய காரியங்களெல்லாம் அவர்களுடைய உண்மைத் தன்மைக்கு சமமாகாது.

நியாயத்தீர்ப்பு நாளில், நிறைய ஆச்சரியங்கள் இருக்கும். அந்நாளில் இவைகளை பலர் செய்வார்கள் என்று இயேசு சொன்னார். மத்தேயு [7: 21-25] வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிற மொழி நடை இந்த ஜனங்களின் சுய வஞ்சகத்தையும், பெருமையையும், சுட்டிக்காட்டுகிறது. நம் கர்த்தர் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று அவர்கள் வலியுறுத்துவது அவர்களுடைய அகங்காரத்தையே காட்டுகிறது. இங்கே இயேசு கிறிஸ்து அவர்களைப் பார்த்து **நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக் காரரே என்னைவிட்டு அகன்றுபோங்கள்** என்று சொல்வார். இவர்கள் மோசமான ஜனங்கள் அல்ல, இவர்கள் தேவனுடைய நாமத்தில் நல்ல காரியங்களைச் செய்த பக்தியுள்ள ஜனங்கள் தான், அங்கே பிரச்சனை என்னவாக இருந்தது? அவர்கள் இருதயத்தி லிருந்து தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்படியவில்லை.

தேவனுக்காக பரபரப்பாக வேலை செய்வது நல்ல காரியமாக இருந்தாலும் கூட காரியங்களை இருதயத்திலிருந்து செய்வதுதான் அவருக்கு பிரியமானதாயிருக்கும். நம் இருதயம் பக்திக் காரியங்களில் ஈடுபடுத்தப் படவில்லையென்றால், நம் செயல்பாடுகளெல்லாம் வீணாகிவிடும். தேவனுக்காக நமக்கு பக்தி வைராக்கியம் இருக்கலாம். ஆனால், நம் சத்தியத்தை சரியாகப் பின்பற்றவில்லையென்றால் அந்த பக்தி வைராக்கியமும், உற்சாகமும் ஒன்றுமில்லாமல் போய்விடும். [ரோமர் 10:1–3] வசனங்களில் பவுல் யூதர்கள் தேவனுக்காக பக்தி வைராக்கியம் உடையவர்களாக இருந்திருக்கிறார்கள் ஆனால், அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல என்று சொன்னார். மற்றவர்களை முட்டாளாக்குவது எளிது. சில வேளைகளில் நம்மை நாமே முட்டாளாக்கிக் கொள்கிறோம். இருந்தபோதிலும், தேவனே நியாயாதிபதியாயிருக்கிறார். நாம் அவரை முட்டாளாக்கவே முடியாது. அவர் நம் இருதயங்களை அறிந்திருக்கிறார் [லூக்கா 16:15]. ✝

## அழைக்கப்பட்டிருக்கிறோம்

- ❀ சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டிருக்கிறோம் (2 தெசலோனிக்கேயர் 2 :13:14)
- ❀ அந்தகாரத்திலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோம் (I பேதுரு 2;9)
- ❀ தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள் அழைக்கப்பட்டிருக்கிறோம் (I கொரிந்தியர் 1:9)
- ❀ கிறிஸ்துவின் கிருபையினாலே அழைக்கப்பட்டிருக்கிறோம் (கலாத்தியர் 1:6)
- ❀ சமாதானத்திற்க்கென்று அழைக்கப்பட்டிருக்கிறோம் (கொலோசெயர் 3:15)
- ❀ நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்டிருக்கிறோம் (I தீமோத்தேயு 6:12)

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| சபை அங்கத்தினருரிமை | Louis Rushmore | ... 1 |
| ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தான் | E.Z.S. Rajanayagam | ... 3 |
| பொய்யான சமாதானம் | Jerry Bates | ... 7 |
| இந்நாட்களில் தேவைப்படும் அன்பு | J.C. Choate | ... 13 |
| சீஷனுடைய அடையாளங்கள் என்ன? | | ... 16 |
| கர்த்தருடைய ஆலயம் | Arjunan | ... 18 |
| கர்த்தரைச் சந்திக்க ஆயத்தப்படுவோம் | P.C. Philemon Rajah | ... 22 |
| கட்டுகளில் மட்டற்ற மகிழ்ச்சியுடன் ... | Benny Martin | ... 26 |
| இன்னும் எத்தனை காலம் ... | E.Z. Selvanayagam | ... 29 |

**தேவன் – God**

| | | |
|---|---|---|
| தேவனில்லாமல் வாழ்க்கையை அனுபவித்தல்? | Danny Petrillo | ... 33 |
| சமாதானம் | Andy Robison | ... 35 |
| இயேசு நம்பிக்கையைக் கொண்டு ... | Charles Box | ... 37 |

**சாட்சியாங்கள் – Evidences**

| | | |
|---|---|---|
| பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை .... | Carl Mitchell | ... 41 |

**தேவனுடைய வார்த்தை – The Word of God**

| | | |
|---|---|---|
| வாசிக்கிறதில் ஜாக்கிரதையாயிரு | Jimmy Clark | ... 45 |
| வேதாகமம் தன்னைப் பற்றி என்ன ... | Paul Holland | ... 47 |
| வேதாகமம் உண்மையாகவே அதைப் ... | Neal Pollard | ... 49 |

**இரட்சிப்பு – Salvation**

| | | |
|---|---|---|
| தனித்துவமான நித்திய இரட்சிப்பு | Owe D. Olbricht | ... 52 |
| மனம் வருந்தாத | Dwight Foqua | ... 55 |
| எல்லா அழைப்புகளையும் விட மேலான... | Patrick Morrison | ... 58 |
| வசன ஆராய்ச்சி | Jerry Bates | ... 61 |

## சபை – The Church

| | | |
|---|---|---|
| தனித்துவம் வாய்ந்த ஊழியம் | **Bob Planket** | ... 62 |
| ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனும் | **Cliff Holmes** | ... 64 |

## செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action

| | | |
|---|---|---|
| சாஸ்திரிகள் (ஞானிகள்) இயேசுவை .... | **Sunny David** | ... 66 |
| அவருடைய கட்டளையே நமது பணி | **Darrell Surrette** | ... 69 |
| அரசாங்கமும், கிறிஸ்தவனும்: சபை .... | **Steve Higginbotham** | ... 72 |

## ஆராதனை – Worship

| | | |
|---|---|---|
| கர்த்தருக்கு நினைவுச் சின்னம் | **Gary C.Hampton** | ... 74 |
| பாடலில் தேவனை ஆராதித்தல் | **Mark T.Posey** | ... 76 |
| பொழுதுபோக்கும், உண்மையான ..... | **Basil Overton** | ... 77 |

## அனுதின கிறிஸ்துவ ஜீவியம் – Daliy Christian Living

| | | |
|---|---|---|
| உபதேசத்தைப் பற்றி வேதாகமம் ..... | Eric Obeng Asante | ... 80 |
| பூமிக்குரிய செல்வமும், புகழும் ..... | Don Myers | ... 83 |

## கிறிஸ்தவ இல்லம் – The Christian Home

| | | |
|---|---|---|
| புருஷர்களே தயவு செய்து படியுங்கள் | Samuel Mathews | ... 86 |
| மனைவிகள் | Betty Burton Choate | ... 90 |
| நாம் விளையாட்டு வீரர்களை.... | Wes Mc Adams | ... 94 |

## வேதாகம கதாபாத்திரங்கள் – Bible Characters

| | | |
|---|---|---|
| சாலொமோனுக்கு தாவீதின் கட்டளை | Therman Hodge | ... 99 |
| ஸ்தேவான் : இறுதிவரை ஓர் ..... | Brian.R. Kenyon | ... 101 |

## வேதாகம கேள்விகள் – Bible Questions

| | | |
|---|---|---|
| இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார் | Jerry A.Jenkins | ... 105 |
| கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் ..... | Kevin L.Moore | ... 107 |
| மனந்திரும்புங்கள் அல்லது ..... | Dennis Gulledge | ... 108 |



## இந்நாட்களில் தேவைப்படும் அன்பு

### The Love that we need Today

J.C. Choate

இந்நாட்களில் நாம் அதிகமாக அன்பைப் பற்றி கேள்விப்படுகிறோம். நாம் நம் சகோதர, சகோதரிகளிடத்தில் அன்பு கூர வேண்டுமென்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மை தான். இருந்தபோதிலும், அன்பைப் பற்றி பிரசங்கிக்கிறவர்கள் பெரும்பாலும் தங்களோடு ஒத்துப் போகாதவர்களிடத்தில் சண்டையிலும், கலகத்திலும் ஈடுபடுவதை நம்மால் காண முடிகிறது. அன்பைப் பற்றி அதிகமாக பேசப்பட்டாலும் கூட நடைமுறையில் அது குறைவாகவே கடைப்பிடிக்கப்படுகிறது.

அன்பைப்பற்றி பிரசங்கிக்கிறவர்களில் பெரும்பாலானோர் அன்பே சரீரப் பிரகாரமான அல்லது மாம்சீக அன்பாகத்தான் பார்க்கிறார்கள். அவர்கள் அன்பு என்றாலே அது மாம்சீக சந்தோஷங்கள் சம்மந்த மானது என்று முன் கூட்டியே தங்கள் மனதை நிரப்பியிருக்கிறார்கள். மேலும், இன்று உலகில் காணப்படும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு அன்புக்குக் கொடுக்கப்படும் அழுத்தம் தான் என்ற முடிவுக்கும் வருகிறார்கள். ஆனால், அது உண்மையல்ல. மாம்சீக அன்பு உண்மையில் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பதிலாக பிரச்சனைகளைக் கூட்டுகிறது! அப்போஸ்தலனகிய யோவான் உலகத்திலும், உலகத் திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்: ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினா லுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்திலுண்டானவைகள். உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் என்று நமக்கு நினைப்பூட்டுகிறார் [I யோவான் 2:15-17].

**அன்பைப்பற்றி உலகத்தின் விளக்கத்திற்கும், தேவனுடைய விளக்கத்திற்கும் உள்ள வித்தியாசம்**

அன்பு என்றால் என்ன? அது பாசம், நெருக்கம், நட்பு மற்றவை களைக் குறித்த அக்கறை என்று உலகம் அன்புக்கான விளக்கத்தைக் கொடுக்கிறது. ஆனால், நாம் இப்போது சகோதர சிநேகத்தை பற்றிப் பேசுகிறோம். நாம் சக மனிதர்களாக, கிறிஸ்தவர்களாக இத்தகைய அன்பைத்தான் ஒருவரிலொருவர் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய எல்லா செயல்பாடுகளுக்கும், உறவுகளுக்கும் அன்புதான் ஆதாரமாக இருக்க வேண்டும். அன்பைப் பற்றி இன்னும் சிறந்த விளக்கத்திற்கு Iகொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தை வாசியுங்கள். அதில் பவுல் அன்பு என்றால் என்ன? அது என்ன செய்யும், என்ன செய்யாது என்று மிகச்சிறந்த விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்.

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமை யில்லை; அன்புத் தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கி யமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாது, சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம். அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம். அறிவானாலும் ஒழிந்துபோம் [I கொரிந்தியர் 13:4–8].

இன்று உலகத்திற்கு அதிகமான அன்பு அவசியப்படுகிறது. இந்த அன்பு தூய்மையானதாக, உண்மையானதாக, நேர்மையானதாக இருக்க வேண்டும். இது ஆண், பெண் உறவோடும், குடும்ப உறவோடும் நின்று விடக் கூடாது. மாறாக, அன்பு நம் நண்பர்கள், அயலகத்தார், தேசம், உலகம் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் சத்துருக்களை கூட சிநேகிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அவருடைய வார்த்தைகளை கவனியுங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர் களுகககு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் [மத்தேயு 5:44].

**அன்பு எதைச் செய்வதில்லை**

உண்மையான அன்பு நம்மைச் சுற்றிலும் உள்ள பாவங்களை பார்த்துவிட்டு நம் கண்களை மூடிக்கொள்ளவும், சத்தியத்தோடு சமரசம் செய்து கொள்ளவும் நம்மைத் தூண்டாது என்பதை நாம் புரிந்து கொள்ள

வேண்டும். இந்த அன்பு நாம் நேசிக்கிறவர்கள் பாவத்திலிருந்து வெளியே வரவும். அவர்களுடைய பிரச்சனைகளை எதிர்கொள்ளவும் அவர்களுக்கு உதவும்படி நம்மை பெலப்படுத்தும். நாம் நேசிக்கிறவர் களுடைய பாவங்களை நாம் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டால் அவர்களாகவே மனந்திரும்பாத பட்சத்தில் அது அவர்களை நரகத்திற்கு அழைத்துச் செல்லும். உண்மையான அன்பானது உதவிக்காக அவர்கள் நம்மிடத்தில் வரட்டும் என்று காத்திராமல் நம்மை அவர்களிடத்தில் போகச் செய்யும். தவறு செய்கிறவர்களை திருத்துகிற காரியத்தில் நமக்கு தேவையான புரிதலையும், பொறுமையையும், நமக்குத் தரும். இன்றைய நாட்களில் பேசப்படுகிற அன்பு தேவையில்லை, நடைமுறைப்படுத்தப்படுகிற அன்புதான் தேவை. இதுதான் உலகத்தை சிறந்ததாக மாற்றி உலகிலுள்ள சட்டங்கள், இராணுவங்கள் போன்றவற்றைக் காட்டிலும் அதிக நன்மையை செய்யும்.

அன்பு என்பது பெலவீனத்தின் அடையாளமல்ல. மாறாக, பெலத்தின் அடையாளமாகும். இங்கே நாம் பார்த்துக் கொண்டிருக்கிற அன்பு தேவனாலும், அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவாலும் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் விளைவாகத்தான் நாம் தெய்வீக போதனைக்குக் கீழ்ப்படிந்து தெய்வீக சித்தத்தை நம் வாழ்வில் நடைமுறைப்படுத்துகிறோம். தேவனுக்கான நம்முடைய அன்பு நம் அயலகத்தாரையும், இவ்வுலகிலுள்ள எல்லோரையும் நேசிக்க நம்மைத் தூண்டுகிறது [மத்தேயு 22:3639]. ஏனென்றால், நாம் தேவனிடத்தில் அன்பு கூருகிறோம். நாம் ஒருவரிலொருவர் அன்பு கூருகிறவர்களாய் இருக்கிறோம்.

**இயேசுவின் மரணத்தால் நடந்தவைகள்**

- ❀ ***யூதர்களையும், புறஜாதிகளையும் ஒப்புவாக்கினார் (எபேசியர் 2:16)***
- ❀ ***பாவங்களை நிவர்த்தி செய்யும் கிருபாதார பலியானார் (I யோவான் 4:10)***
- ❀ ***புதிய பிரமாணத்தை நிலைநிறுத்தும் படியாய், பழையதை மாற்றிப்போட்டார் (எபிரெயர் 9:15 - 17: மத்தேயு 26:28).***
- ❀ ***சாத்தானின் வல்லமையை அழித்தார் ( எபிரெயர் 2:14: (I யோவான் 3:8)***
- ❀ ***மரண பயத்திலிருந்த அனைவரையும் விடுதலையாக்கினார் (எபிரெயர் 2:15)***

## சீஷனுடைய அடையாளங்கள் என்ன?
## What are the Marks of a Disciple?

ஒரு சீஷன் என்பவன் ஒரு மாணவனாக, கற்றுக்குட்டியாக, பின்பற்றுபவனாக இருக்கிறான். மேலும், ஒரு சீஷன் தன் மனம், வார்த்தைகள், செயல்பாடுகள் எல்லாவற்றிலும் தன் குருவாகிய இயேசுவைப் போலிப்பான் [ லூக்கா 6:40]. இயேசுவைப் போலிருப்பது ஒரு சீஷனுடைய சிலாக்கியமாகவும், பொறுப்பாகவும் இருக்கிறது. அப்படியென்றால், சீஷனுடைய அடையாளங்கள் என்ன?

முதலாவது, ஒரு சீஷன் கிறிஸ்துவின் வார்த்தையில் நிலைத்திருக்க வேண்டும் [ யோவான் 8:31], [ யோவான் 14:14,23], வார்த்தையில் நிலைத்திருத்தல் மூன்று காரியங்களை உள்ளடக்கிய தாகும்.

ஒருவன் வார்த்தையை ஏற்றுக்கொள்ள வேண்டும்[I தெசலோனிக்கேயர் 2;13]

வார்த்தையை ஒருவர் தியானிக்க வேண்டும் [சங்கீதம் 1:2]

ஒருவர் வார்த்தையை நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது அதின்படி செய்ய வேண்டும் [ யாக்கோபு 1:22].

இரண்டாவது, கிறிஸ்துவின் சீஷர்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் [ யோவான் 13:34,35]. ஏன் இது புதிதான கட்டளையாயிருக்கிறது?

அதன் பொருளில் புதியதாயிருக்கிறது [ யோவான் 4:20].

அதன் அளவில் புதியதாயிருக்கிறது [ மத்தேயு 5:43-45].

அதன் நோக்கத்தில் புதியதாயிருக்கிறது [யோவான் 13:35]. சீஷர்கள் ஒருவரிலொருவர் வெளிப்படுத்தும் அன்பு தான் மற்றவர்களை கிறிஸ்துவின் சீஷர்களாக்கும் கவர்ந்திழுக்கும் சக்தியாகும்.

மூன்றாவது, கிறிஸ்துவின் சீஷர்கள் கனி கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும் [யோவான் 15:5-10]. [I கொரிந்தியர் 3:6-9]. யோவான் 15 ஆம் அதிகாரத்தில் மூன்று காரியங்கள் போதிக்கப்பட்டிருக்கிறது.

ஒருவர் பிதாவின் அன்பில் நிலைத்திருக்க வேண்டும் [யோவான் 15:10].

ஒருவர் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் (யோவான் 15:14)

ஒருவர் கனி கொடுக்கிறவராக இருக்க வேண்டும் (யோவான் 15:16).

இம்மூன்றும் சீஷத்துவத்தின் முக்காலிகளாக இருந்து ஒன்றையொன்று தாங்குகின்றன.


முடிவாகக் கேள்வி என்னவென்றால், ஒரு சீஷனுடைய அடையாளங்கள் உங்களிடம் இருக்கின்றனவா? நீங்கள் இயேசுவுக்காக மற்றவர்களை சீஷராக்க இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரா? நீங்கள் உண்மையாகவே இயேசுவின் சீஷராயிருக்கிறீர்களா? ✝

பிலிப்பியர் 4:13 வசனம் பல இருதயங்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய ஓர் அருமையான வசனமாகும் என்னை பெலப்படுத்துகிறது. கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு. இவ்வசனம் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்று சொன்னால் என்னால் தண்ணீரின் மேல் நடக்க முடியும், மரித்தவர்களை உயிரோடு எழுப்ப முடியும் என்று பொருள் படாது. இவ்வசனம். அதன் பொருளின்படி பார்க்கப்பட்டால் மிகவும் அழகானது. ஏனென்றால், பவுல் சிறையிலிருந்து தான் எப்படி எல்லாச்சூழ்நிலைகளிலும் மனரம்மியமாக இருக்க கற்றுக் கொண்டதாக எழுதுகிறார். வாழ்க்கையில் எப்படிப்ட்ட பிரச்சனைகள் வந்தாலும். அவைகளை அவரால் கையாள முடிந்திருக்கிறது. கிறிஸ்து தன்னை பெலப்படுத்தினபடியால் வாழ்ந்திருக்கவும் தனக்குத் தெரியும் என்று சொல்கிறார். அதில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் என்னவென்றால், என் வாழ்க்கையில் என்னபாடுகள் வந்தாலும், கிறிஸ்துவின் மூலமாக எல்லாவற்றையும் நான் சகிப்பேன் என்பது தான்.

# கர்த்தருடைய ஆலயம்

## The House of The Lord

*Arjunan*



கர்த்தருக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்ட தாவீது அரசன் விருப்பம் கொண்டான். ஆனால், அதை, கர்த்தராகிய தேவன் விரும்பவில்லை. உன்னுடைய கர்ப்பப் பிறப்பே அதைச் செய்வான் என்றார். தாவீதின் கரம் இரத்தம் சிந்திய கரங்களாக இருந்தபடியால் அவனுக்கு ஆலயத்தைக் கட்ட கர்த்தர் அனுமதி கொடுக்கவில்லை. சிலர் கர்த்தருக்காக பல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றனர். அது பிதாவாகிய தேவனுக்குப் பிரியமானதா என்பதை பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தனக்கு வேண்டியவைகளை செய்து கொள்வதைப் போல தேவனுக்கும் செய்ய முற்படுகிறார்கள். ஆனால், தேவன் இதற்கு அனுமதி கொடுப்பதில்லை. சிலர் கர்த்தர்மேல் உள்ள அன்பினாலும், வாஞ்சையினாலும் தேவனுக்காக நாங்கள் எதையாவது செய்ய வேண்டும் என்று சொல்லி, தங்களுடைய இச்சையினால் பொன்னினாலும் வெள்ளியினாலும் ஞாபகார்த்தமாக ஒரு சொரூபத்தை பூமியிலே உள்ளவைகளுக்கு ஒப்பாக உண்டாக்கி வைக்க விரும்புகின்றனர். இப்படிச் செய்வதை தேவன் விரும்புவாரா என்பதைக் குறித்து அவர்கள் சிந்திப்பதில்லை. தேவன் மனிதனுக்காக உண்டாக்கியவைகள் மனிதனுடைய தேவைகளைச் சந்திக்கிறது. மனிதன் தேவனுக்காக உண்டாக்குபவைகள் தேவனுடைய தேவைகளைச் சந்திக்காது. அவர் மனிதனுடைய கரங்களில் யாதொன்று தேவையானது போல அவர் எதிர்பார்க்கிறவரல்ல. தாவீது தன் தேவனுக்காக ஒரு ஆலயத்தைக் கட்ட அநேக பொருட்களை சவதரித்து வைத்தான். ஆனால், அவனுடைய கர்ப்பப்பிறப்பான சாலொமோன் ஆலயத்தைக் கட்டினான்.

சாலொமோன் தன்னுடைய இஷ்டப்படி ஒரு இடத்தை தெரிந்துகொள்ளாமல் ''எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஓர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத் துவக்கினான்'' (2நாளா. 3;1). இந்த இடத்தை அந்நாட்களிலே தாவீது ஓர்னான் என்னும் ஒரு மனிதனிடம் வாங்கினான்.பொதுவாக ஜனங்கள் கோவில் கட்ட இடத்தை

தெரிந்துகொள்வது புறம்போக்கு நிலங்களையும், ஒன்றுக்கும் உதவாத நிலங்களையும், ஊருக்கு ஒதுக்குப்புறம்பாக இருக்கும் இடங்களை யுமே அதிகமாகத் தெரிந்து கொள்வார்கள். ஆனால், தாவீது அதை இலவசமாக யாரிடமும் வாங்காமல் அதை விலைகொடுத்து வாங்கினான் என்று பார்க்கிறோம். ஒரு ராஜா விலைகொடுத்து வாங்கவேண்டிய அவசியமில்லை. ஆனால், கர்த்தருடைய காரியத்தில் யாரிடமும் அநியாயமாக அதைப் பெற்றுக்கொள்ளாமல் மனப் பூர்வமாகவும் விலைக்கிரயமாகவும் அதை கொடுத்த ஓர்னான் என்னும் மனிதனிடமிருந்து பெற்றான். அன்றும், இன்றும் தேவன் யாரிடமும் கட்டாயப்படுத்தி எதையும் பெற்றுக்கொள்வதில்லை. சாலொமோன் ராஜா ''கர்த்தருக்குக் கட்டின ஆலயம் அறுபது முழ நீளமும், இருபது முழ அகலமும், முப்பது முழ உயரமுமாயிருந்தது'' (1இரா.6:2). இந்த ஆலயத்தில் என்ன இருந்தது என்ற கேள்வி அநேகருக்கு எழும்பும். யாதொரு விக்கிரகமும் அங்கே இல்லை. ''இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டபின், கர்த்தர் ஓரேபிலே அவர்களோடு உடன்படிக்கை பண்ணின போது, மோசே அந்தப் பெட்டியிலே வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் அதிலே வேறொன்றும் இருந்ததில்லை'' என 2நாளா. 5:10–ல் காண்கிறோம். சாலொமோன் கட்டின கர்த்தருடைய ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இன்றைக்கு ஒரு ஆலயம் பிரதிஷ்டை செய்யப் படுமானால் எவ்வளவு செலவு செய்யப்படும், எத்தனை நாள் அதை விழாவாக கொண்டாடு வார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், அன்றைய நாட்களில் ''ராஜாவாகிய சாலொமோன் இருபத்தீராயிரம் மாடுகளையும், லட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான்; இவ்விதமாய் ராஜாவும் சகல ஜனங்களும் தேவனுடைய ஆலயத்தைப் பிரதிஷ்டை பண்ணினார்கள். எட்டாம் நாளை விசேஷித்த ஆசரிப்பு நாளாய்க் கொண்டாடினார்கள்; ஏழுநாள் பலிபீடத்துப் பிரதிஷ்டை யையும், ஏழுநாள் பண்டிகையையும் ஆசரித்தார்கள்'' (2நாளா.7:5,9). நீங்கள் எப்போதாவது இவ்வளவு திரளான பலிசெலுத்தி ஒரு ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நிச்சயமாக கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். அதுமாத்திரமல்ல இந்த ஆலயத்தைக் கட்டி முடிக்க ஏழுவருஷம் சென்றது.

பிரதிஷ்டையின் நாளின் போது சாலொமோனின் விண்ணப்பம் என்னவென்றால்; ''உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியார் உம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தமும், உம்முடைய பலத்த கரத்தினிமித்தமும், ஓங்கிய உம்முடைய புயத்தினிமித்தமும், தூரதேசங்களிலிருந்து வந்து, இந்த ஆலயத்துக்கு நேராக நின்று விண்ணப்பம் பண்ணினால், உமது வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அதைக் கேட்டு, பூமியின் ஜனங் களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப்போல,

உம்முடைய நாமத்தை அறிந்து உமக்குப் பயப்பட்டு, நான் கட்டின இந்த ஆலயத்திற்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும் படிக்கு, அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதின்படியே தேவரீர் செய்வீராக'' என்று விண்ணப்பம் பண்ணினான் [2நாளா. 6:32, 33]. நீங்களும் நானும் விண்ணப் பம்பண்ணியிருந்தால் எப்படி விண்ணப்பம் பண்ணியிருப்போம்? சாலொமோனோ, ஜீவனுள்ள தேவனை அறியாத ஜனங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே தேவனை நோக்கி: இந்த ஆலயத்துக்கு நேராக அவர்கள் நின்று விண்ணப்பம் பண்ணினால், உமது வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அதைக் கேட்பீராக என்று மன்றாடினான். அது மாத்திரமல்ல; ''தேவன் மெய்யாக மனுஷரோடே பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?'' என்றான் [2நாளா. 6:18]. ஆம், கர்த்தருக்காக கட்டின ஆலயம் பெரியது என்றோ அல்லது தான் கட்டியபடியால் அது தன்னுடைய ஆலயம் என்றோ அவன் சொல்லிக் கொள்ளும்படியாக விரும்பவில்லை. தேவனை அறியாத புறஜாதியார் அதின்வாயிலாக ஜீவனுள்ள தேவனை அறிந்துகொள்ள வேண்டும் என்பதுவே அவனுடைய விருப்பமாக இருந்தது. அந்த மகத்துவமான தேவனை அவர்கள் கண்டுகொள்ளும்படியாக தேவாலயத்தை கட்டினான் எனக் காண்கின்றோம்.

அன்பானவர்களே, தேவன் பரலோகத்தில் வாசம் பண்ணுகிறார். அவர் பூமியிலிருந்து தம்மை நோக்கி கூப்பிடுவோரை கண்ணோக்கிப் பார்க்கிறார். அவரை நோக்கிப்பார்க்க ஒரு இடம் வேண்டும் என்பதற்காகவே சாலொமோன் ஒரு ஆலயத்தை அவருக்குக் கட்டி னான். அந்த ஆலயம் கர்த்தர் தங்குவதற்காக அல்ல. ஜனங்கள் பொதுவாக தவறாக புரிந்துகொள்ளுகிறார்கள். ஒரு ஆலயம் என்றால் அங்கேதான் கர்த்தர் இருப்பார் என்று எண்ணுகின்றனர். அப்படியல்ல. ஜீவசுவாசத்தை மனிதனுக்குக் கொடுத்த ஜீவனுள்ள கர்த்தர் அவனுள் வாழ விரும்புகிறார். ஆகையால், பவுல் பிரசங்கிக்கும் போது; ''உலக த்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை '' என்று பிரசங்கித்தார் [அப்.17:24]. வானம் எனக்கு சிங்காசனம் பூமி எனக்கு பாதப்படி எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட கோவிலைக் கட்டுவீர்கள் என்று கர்த்தர் கேட்கிறார். ஆண்டவருக்காக ஒருவரும் ஒருக்காலும் ஒரு இருப்பிடத்தைக் கட்ட முடியாது. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன்

கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்'' (1கொரி. 3:16,17). நாம் தேவனுடைய ஆலயமாக இருந்தால் எப்படியிருக்க வேண்டும்? நடமாடும் ஆலயமாகவும் எங்கும் எப்போதும் பிதாவாகிய தேவனை தொழுதுகொள்ளு கிறவர்களாகவும், அவருடைய நாமத்தை அறிவிக்கிறவர்களாகவும், அவருடைய வாசனையை வெளிப்படுத்துகிறவர்களாகவும் இருக்வேண்டும். இந்த ஆலயத்தை நாம் தவறான இடத்திற்கு கொண்டு சென்றால் நம்மில் வாசமாயிருக்கிற தேவனுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் துக்கத்தை ஏற்படுத்துகிறவர்களாக இருப்போம். ஆலயங்களை தூய்மையாக வைக்க முயற்சிக்கிற நாம் நம்மில் வாசமாயிருக்கும் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட இடம் கொடுக் கலாமா? நாம் பூமியில் காண்கிற யாவும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது. பூமியின் மீதெங்குமிருக்கிற யாவும் ஒரு நாளில் அழிந்து வெந்து உருகிப்போகும். இப்படி அழிந்து போகக் கூடிய இடத்திலும், மனிதர்கள் அவருக்காக கட்டிய இடத்திலும் தேவன் இல்லை. அவர் உங்களில் வாசமாயிருக்க விரும்புகிறார். ஆகையால், இயேசு கிறிஸ்து சொல்லும்போது; ''ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக் கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவே இருக்கிறேன் என்றார்'' (மத். 18:20). சாலொமோன் கட்டின ஆலயம் கர்த்தருடைய ஆலயம், தேவனுடைய ஆலயம் என்று அழைக்கப்பட்டது. அதைப்போல இன்று கர்த்தடைய நாமத்தினாலே கூடிவரக்கூடிய சபையார், கர்த்தருடைய சபையார் என்றும் அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினாலே கூடி வருகிறபடியால் கிறிஸ்துவின் சபையார் என்றும் தான் அழைக் கப்படுகிறார்கள். அப்படியாக கர்த்தருடைய நாமத்தினாலே கூடிவந்த சபையாரைக் குறித்து நாம் ரோமர் 16:16-ம் வசனத்தில் படிக்கிறோம். அவருடைய நாமத்தினாலே கூடி வந்து மற்றொரு நாமத்தினாலே அழைக்கப்படுவது விந்தையாக இருக்கிறது! ✝

***பிரச்சனைகள் வரும்போது, சங்கடம் சமயங்களிலும் நாம் கையைப் பிசைவதைக் காட்டிலும் எல்லாவற்றையும் தேவனுடைய கைகளில் விட்டு விட்டால் கடைசியில் தேவனுடைய கைகள் எல்லாவற்றுக்கும் மேலாக இருந்து தீர்க்கமாக விசாரிக்கிற படியால், உங்கள் கவலையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்ககள்( I பேதுரு5:7)***

# கர்த்தரைச் சந்திக்க ஆயத்தப்படுவோம்

## PrePare to Get Ready To Meet the Lord

Bro. Philemon Rajah

**க**ர்த்தரைச் சந்திக்க ஆயத்தப்படுவதை பற்றி உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு மேலாக, நம் நினைவினை ஆண்டு கொண்டிருப்பது 'கொரோனா' என்கின்ற வைரஸ், அதனால் கடவுளை பற்றிய சிந்தனை என்பது மழுங்கியிருகின்றது அல்லது மறக்கப்பட்டிருக் கின்றது. நியாயத்தீர்ப்பினை பற்றிய சிந்தனையும் நீதியுள்ள நீதிபதியாகிய கிறிஸ்துவை சந்திப்பதை பற்றிய சிந்தனையையும் நினைவுப்படுத்துவது இந்த கடின சூழ்நிலையில் மிகவும் ஏற்புடை யதாக இருக்கும் என கர்த்தருக்குள் நம்புகிறேன்.

ஆண்டவர் இந்த பூமியில் முதல் முறை வந்தபோது, அவரை சந்திக்க ஆயத்தமாயும் ஆவலாயும் இருந்த அன்னாள் என்ற விதவைத் தாயிடமிருந்து, நாம் பாடங்களை கற்று, ஆண்டவரின் இரண்டாம் வருகையில் அவரை சந்திக்க நம்மை ஆயத்தப்படுத்த முயற்சி செய்வோம். லூக்கா 2:36–38 ஆசேருடைய கோத்திரத்தாளும், பானு வேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானது முதல் ஏழு வருஷம் புருஷனோடே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளு மாயிருந்தாள். எறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனைசெய்து கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் பேசினாள்.

### 1. தேவாலயத்தைவிட்டு நீங்காமல்...

அன்னாளிடமிருந்து நாம் கற்றுக்கொள்கின்ற முதல் காரியம் அவள் தேவாலயத்தினை விட்டு நீங்காமல், அங்கே இருந்தாள் என்பது. அதாவது, அவள் கடவுளுக்கடுத்த காரியங்களில் தன்னை அதிகம் ஈடுபடுத்திக்கொண்ட பெண்மணியாக அவளை நாம் அறிய முடிகின்றது.

சபைக்கடுத்த காரியங்களில் அதாவது சபை கூடிவருகின்ற காரியங்களில் நாம் எப்படி இருக்கின்றோம்? நமது ஆர்வமும் ஈடுபாடும் எப்படி உள்ளது? யாராவது நினைவுபடுத்தி செய்கின் றோமா? நாமே தானாக ஈடுபடுகின்றோமா?

இன்றைய சூழல் பரலோக கடவுளால், நமக்குள் அந்நியோந்நியம் பக்திவிருத்தியை அதிகரிக்க உண்டாக்கப்பட்ட அவசியமான சபை கூடுகைகள், இப்பொழுது ஆன்லைன் கூடுகைகளாக இருக்கின்றது. அதனில் பழகிப்போன அநேகர், இப்படியே இருப்பது தங்களுக்கு சொகுசாக (வசதியாக) இருக்கின்றது என எண்ணுவதும், செயல்படுவதும் மிகவும் பாவமானதாகும். மேலும், அது கடவுளின் மாபெரும் நோக்கத்தினை உடைப்பதுமாகும். (எபி 10:24-28), என்பதனை நினைவில் கொள்வோம்.

## 2. இரவும் பகலும் உபவாசித்து...

உபவாசம் என்பது மக்கள் தங்கள் தவறினை ஒத்துக்கொண்டு, தங்களை திருத்தி, வருத்தி எல்லாம் வல்ல கடவுளுக்கு முன்பாக, தங்களை தாழ்மைப்படுத்தி அவரது இரக்கத்திற்காக கெஞ்சுகின்ற செயலாகவும் இருந்ததை அறிய முடிகின்றது (யோனா 3), மேலும், சில நேரங்களில் உபவாசம் என்பது தங்களுக்கு ஏற்பட்டுள்ள தீங்கிலிருந்து காப்பாற்றப்பட கடவுளின் உதவி கேட்டும் செய்வதாக இருந்துவருகின்றது (எஸ்தர் 4). சில நேரங்களில் உபவாசம் என்பது, தங்களை பரிசுத்தப்படுத்துவதற்காகவும், தாங்கள் செய்யப்போகின்ற காரியத்திற்காக தங்களை பெலப்படுத்துவதற்காகவும் இருக்கின்றது (யாத் 34, மத் 4) எல்லாவகையிலும் அது தாழ்மையின் செயலாக, வடிவமாக இருந்திருக்கின்றது.

ஆண்டவர் இயேசுவும், அப்போஸ்தலர்களும், முதலாம் நூற்றாண்டு சபையாரும், மூப்பர்களும் உபவாசித்ததை நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கின்றோம். ஆண்டவர் இயேசு உபவாசிப்பதை ஊக்கப்படுத்துகின்றார். அப்போஸ்தலர்கள் ஏன் உபவாசிக்கவில்லை என வினவியவர்களிடம், நான் போன பின்பு உபவாசிப்பார்கள் என்றார். மத்தேயு 9:15 அதற்கு இயேசு; மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா? மணவாளன் அவர் களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்பொழுது உபவாசிப்பார்கள்.

## 3. ஜெபம்பண்ணி ...

அடுத்ததாக, அன்னாளிடமிருந்து ஆயத்தத்திற்காக கற்றுக் கொள்ளுகின்ற அடுத்த பண்பு, அவள் ஜெபிக்கின்ற பெண்ணாக இருந்திருக்கின்றதினை நாம் அறிகின்றோம். இரவும் பகலும் இடைவிடாமல் ஜெபிக்கின்ற பழக்கம் அவர்களுக்கு இருந்திருக் கலாம். இடைவிடாமல் என்பது தொடர்ந்து என்பதாக இல்லாமல், தொடர்ச்சி என்பதாக இருக்கின்றது. அதாவது, எந்த நேரம் ஜெபித்துக் கொண்டே இருப்பது என்றல்ல, குறித்த நேரங்களில் தவறாமல் ஜெபிப்பதாகும்.

பேதுருவும் யோவானும் ஜெபம் செய்கின்ற நேரத்தில் ஜெபிக்க சென்றனர். (அப் 3). தானியேல் தினமும் மூன்று வேளை

ஜெபிக்கின்றதை தொடர்ச்சியாக செய்தார் (தானி5 ). நாம் ஜெபிக்கின்ற பழக்கமுடையவர்களாக இருக்கின்றோம். எப்படி ஜெபிக்கின்றோம், பொதுவாக காலை எழுந்ததும் ஜெபிக்கின்ற பழக்கம் இருக்கும், அதனை எப்படி செய்கின்றோம். தினமும் ஒரு நேரத்தினை குறித்து அதில் ஜெபிக்கின்றோமா? இல்லை 6 மணி, 7 மணி, 10 மணி என எப்பொழுது எழும்புகிறோமோ அப்பொழுது ஜெபிக்கின்றோமா?

ஜெபம் என்பது சுயத்திற்காக, சுயநலனிற்காக இருந்துவிடாதபடி எச்சரிக்கையாக இருப்போம். யோபு தன் நண்பர்களுக்காக வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவன் சிறையிருப்பைமாற்றினார் (யோபு 42). ஆண்டவர் இயேசு, நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகின்றார் (1 யோவா 2:2), பரிசுத்த ஆவியானவர் நமக்காக வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கின்றார் (ரோமர் 8:26, 27). ஆகையால் நாம் நமது ஜெபங்கள் சுயநலமற்றதாக இருப்பதில் கவனம் செலுத்துவோம். ஏனெனில் அதுவே கர்த்தருக்கு பிரியமானது. 1 தீமோ 2:1–3 நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.

**4. கர்த்தரைப்புகழ்ந்து...**

அன்னாளிடம் நாம் கற்கின்ற அடுத்த நற்பண்பு கர்த்தரைப் புகழ்வதாகும். சங்கீதக்காரன் தினமும் 7 வேளை துதிப்பதாக சொல்கின்றான். சங் 119:164 உமது நீதிநியாயங்களினிமித்தம், ஒரு நாளில் ஏழுதரம் உம்மைத் துதிக்கிறேன்.

துதிகளின் மத்தியில் வாசம் செய்கின்றவரை, கேரூபீன்கள் மற்றும் சேராபீன்களால் பரிசுத்தர் பரிசுத்தர் என போற்றப்படுகின்றவரை, நாம் தினமும் கர்த்தரை துதிக்கின்றோமா? சபைக்கூடுகைகளில் கூட பாடல் பகுதி முடிந்து செல்கின்றோமா? பாடல் நேரங்களில் எப்படி இருக்கின்றோம்? இருதயத்தின் ஆழத்திலிருந்து, பக்தியோடு துதிக்கும்படி பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகின்றது. எபே 5:17–21 ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

துதிகளின் மத்தியில் வாசம் செய்கின்றவரை, கேரூபீன்கள் மற்றும் சேராபீன்களால் பரிசுத்தர் பரிசுத்தர் என போற்றப்படுகின்றவரை, நாம் தினமும் கர்த்தரை துதிக்கின்றோமா? சபைக்கூடுகைகளில் கூட பாடல் பகுதி முடிந்து செல்கின்றோமா? பாடல் நேரங்களில் எப்படி இருக்கின்றோம்? இருதயத்தின் ஆழத்திலிருந்து, பக்தியோடு துதிக்கும்படி பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகின்றது. எபே 5:17-21 ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

**5. அவரைக்குறித்துப் பேசினாள்...**

அன்னாள் ஆண்டவரை குறித்து மற்றவர்களிடம் பேசினாள் மற்றும் அறிவித்தாள் என்பது அவளிடமிருந்து நாம் கற்கின்ற மிகச் சிறந்த பண்பாகும். நாமும் ஆண்டவரை பற்றிய நற்செய்தியை நானிலமெங்கும் பரவ செய்திட வேண்டிய பொறுப்பாளர்கள். அது நம் தலையாய கடமை. 1 கொரி 9:16, 17 சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியா திருந்தால், எனக்கு ஐயோ, நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிரான உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே.

பாவத்திலிருந்து மனுக்குலத்தினை இரட்சிக்க அது ஆகச்சிறந்த சிறப்பான வேலை ஆகும். சொல்ல ஆள் இல்லையென்றால், யாரும் கேள்விப்பட முடியாதே. ஆகையால், நற்செய்தி சொல்ல வேண்டியதின் அவசியத்தினை உணர்வோம். ரோமர் 10:13-14 ஆதலால், கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப் படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?

இறுதியாக, பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசு மீண்டும் வரப்போகின்றார். அவரை சந்திக்க நம்மை ஆயத்தப்படுத்துவோம். ஏனெனில், நமது கிரியைகளுக்கு தக்க பலனை தரும்படியாக வருகின்றார். [II கொரி 5:10]. ✝

## கட்டுகளில் மட்டற்ற மகிழ்ச்சியுடன் இருப்பது எப்படி?

# How To be Extremely Happy in the chains?

**Bro. Benny Martin**

கட்டுகள் என்பது ஒருவருக்கு விபத்து ஏற்படும்போதோ அல்லது கீழே விழுவதினால் ஏற்படும் காயத்திற்கு போடப்படும் கட்டுகளையோ குறிக்காது. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியர் ஒன்றாம் அதிகாரத்தில் பயன்படுத்தும் **கட்டுகள்** எனும் வார்த்தையைப் பற்றித்தான் இக்கட்டுரை அமையும். **என் கட்டுகளிலும் நான் சுவி சேஷத்திற்காக உத்தரவுச் சொல்லி அதை திடப்படுத்தி வருகிற திலும், நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களானதால் உங்களை என் இருதயத் தில் தரித்துக் கொண்டிருக்கிறபடியினாலே, உங்களெல்லா ரையுங்குறித்து நான் இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாயிருக்கிறது.** (பிலிப்பியர் 1:7). கட்டுகள் என்று பவுலால் பயன்படுத்தப்படும் பதம் இவ்வசனப்பகுதியில், அதாவது (பிலிப்பியர் 1:7-16). வசனங்களில் அவருடைய சிறை வாசத்தைக் குறிக்கிறது.

பவுல் கலவரத்துக்குக் காரணமாகி, கண்முடித்தனமாக கற்களை எடுத்து எறிந்ததினால் சிறையில் அடைக்கப்படவில்லை. மனம்பதறி முறை தவறி நடந்த தால் சிறையில் அடைக்கப்படவில்லை. மாறாக, மாட்சிமையான சுவிசேஷத்தை பம்பரமாக சுழன்று பரப்புரையில் ஈடுபட்ட படியால் சிறையில் அடைக்கப்பட்டார். இன்றைய நாட் களில் பெருங்குற்றங்களில் ஈடுபடுபவர்கள் கூட சிறைச்சாலைக்கு செல்லாமல் சாலையில் காலையும், மாலையும் சுதந்திரமாக சுற்றித் திரிவதை நம்மால் பார்க்க முடிகிறது. ஆனால், பவுல் சிறைச் சாலையில் இருந்துகொண்டு தான் வியர்வை சிந்தி சம்பாதித்த பிலிப்பு பட்டணத்து சபையாரைப் பற்றி அவர் சிந்தித்தது விந்தையா யிருக்கிறது. அதுமாத்திரமல்ல, பவுல் சிறையில் இருந்த கொண்டு ஐயோ, அநியாயமாக தன்னை சிறையில் அடைத்து விட்டார்களே என்று முறுமுறுமுறுக்கவுமில்லை, முணுமுணுக்க வுமில்லை. மாறாக, உபத்திரவத்தின் மத்தியிலும் மற்றவர்களை மகிழ்ச்சியா யிருக்கும்படி உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார். கர்த்த ருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் (பிலிப்பியர் 4:4), இன்று நீங்களும் நானும் சிறைச்சாலையில் ஒருவேளை கட்டப்பட்ட நிலையில் இல்லை என்று நிம்மதி பெருமூச்சுவிடலாம். ஆனால், வாழ்க்கையில் பொருளாதார பின்னடைவு, வியாதி, வேலையின்மை, வேலையில் மனஉளைச்சல், சமாதான குறைச்சல் என்று பலவிதான சங்கிலிகளால் கட்டப்

பட்டிருப்பதை யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. பவுலால் எப்படி சங்கலிகளால் கட்டப்பட்டிருந்த நிலையிலும், மகிழ்ச்சியாக இருக்க முடிந்தது? நாமும் எப்படி வாழ்க்கைப் பிரச்சனை களால் கட்டப்பட்ட நிலையிலும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்? வேத வசனங்களின் வெளிச்சத்தில் காண்போம்.

I **கடந்த காலத்தை நன்றி நிறைந்த இருதயத்தோடு திரும்பி பார்க்க வேண்டும்.**

பிலிப்பியர் ஒன்றாம் அதிகாரத்தில் பவுல் சிறைச்சாலையில் சிரமங்களுக்கு மத்தியிலும் தன்னால் எப்படி சிரிக்க முடிகிறது என்பதற்கான இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். பவுல் இந்த சிறை வாசத்தில் பிலிப்பு பட்டணத்து சபையாரோடு தனக்கிருந்த சகவாசத்தை நினைத்துப் பார்த்து ஏற்பட்ட நெகிழ்ச்சி அவரை மகிழ்ச்சி அடையச்செய்தது. பிலிப்பி சபையாரோடு தனக்கிருந்த பத்தாண்டு கால பசுமையான நினைவுகள் அவர் நெஞ்சத்தை விட்டு இன்னும் நீங்கவில்லை. இத்தனைக்கும் பிலிப்பி பட்டணத்தில் எல்லாம் அவருக்குப் பிரியமாகவே, சாதகமாகவே நடந்தது என்று சொல்லிவிட முடியாது. அப்பட்டணத்தில் அவர் சந்தி சிரிக்க நிந்திக்கப்பட்டார் இருந்தபோதிலும், அவர் நன்மையான காரியங்களை மாத்திரம் நன்றி நிறைந்த இருதயத்தோடு நினைத்துப் பார்க்கிறார் [I தெசலோனிக் கேயர் 2:2]. தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்திலிருந்தும் இனிமை யான நினைவுகளை நிறுத்துப்பார்க்கும் திறமை பவுலுக்கு மாத்திரமே உண்டு. அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைப்பட்டவர் களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் [ரோமர் 8:28]. பவுல் தவறாக, முறை தவறி, சிறையில் அடைக்கப்பட்டிருந் தாலும் கூட அதிலிருந்து விளைந்த நன்மைகளை அவர் விரும்பிப் பார்க்கிறார், திரும்பி பார்க்கிறார். அவர் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டபடியால் தான் அந்த பிலிப்பிய சிறைச்சாலை அதிகாரியை ஆதாயப்படுத்த முடிந்தது [அப்போஸ்தலர் 16:16-34]. அப்பட்டணத்தை விட்டு செல்லும்படி அவர் பலவந்தப் படுத்தப்பட்டபடியால் தான் பல இடங்களுக்குச் சென்று பவுலால் பரிசுத்த வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது.

II **தேவனிடத்தில் மிகுந்த நம்பிக்கையோடு நிகழ்காலத்தைப் பார்க்க வேண்டும்.**

இங்கே அப்போஸ்தலனாகிய பவுல், அதாவது பிலிப்பியர் ஒன்றாம் அதிகாரத்தில் அவருக்கும் பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கும் இடையே இருந்த பிரிக்க முடியாத அன்பை பதிவு செய்கிறார். மேலும், பிலிப்பு பட்டணத்து சபையாரிடத்தில் தேவன் தொடங்கின நற்கிரியை

தேவன் இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவா ரென்று நம்பி தேவனை ஸ்தோத்தரிக்கிறதாக பவுல் சொல்கிறார். பிரியமானவர்களே, தேவனிடத்தில் நம் நம்பிக்கையின் அளவு எப்படி இருக்கிறது? பல கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் நாம் பார்க்கும் போது தங்கள் அறிவு, திறமை, பணம் போன்றவைகளை நம்பி ஒரு காரியத்தில் இறங்கி, பெயரளவில் தேவன் மீது நம்பிக்கை வைத்து அந்தக்காரியம் நிறைவேறினால் தேவன் எங்களோடு இருப்ப தினால் தான் இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களெல்லாம் எங்களுக்கு கிடைக்கிறது என்று பெருமையாகச் சொல்வார்கள். நம் சூழ்நிலைகள் சூன்யமாக இருந்தாலும் கூட தேவன் மீதான நம் நம்பிக்கை முழுமை யான அளவு இருக்க வேண்டும்.

III **எதிர்காலத்தை ஜெபத்தோடு எதிர்நோக்க வேண்டும்.**

எப்பஜப் பார்த்தாலும் எதிர்காலம் நம் கையில் இல்லை. தேவன் காலத்தை தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். அதுவும் இந்த கொரோனா காலகட்டத்தில் எல்லோருடைய எதிர்காலமும் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. நாளைக்கு நடப்பது உங்க ளுக்குத்தெரியாதே; உங்கள் ஜீவன் எப்படிப் பட்டது? கொஞ்சகாலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே (யாக்கோபு 4:14). ஆனால், எதிர்காலத்தை ஜெபத்தோடு எதிர்நோக்கும் நமக்குப் இது பொருந்தாது.

பிரியமானவர்களே, நம் எதிர்கால திட்டங்களின் வெற்றிக்கு ஜெபம் முக்கியப் பங்கு வகிக்கிறது. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படா மல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத் திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப் படுத்துங்கள் (பிலிப்பியர் 4:6). நம் வாழ்க்கையில் தடைகள் பல இருந்தாலும், இடைவிடாமல் ஜெபிக்கும் போது ஜெயம் நமக்கு நிச்சயம். ✝

---

## விழித்திருங்கள்

- ❀ **ஜெபத்தில் விழித்திருங்கள் – (கொலோசெயர் 4:2)**
- ❀ **விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம் (I தெசலோனிக்கேயர் 5:6)**
- ❀ **விழித்திருந்து பிசாசை எதிர் கொள்ளுங்கள் (I பேதுரு 5:8)**
- ❀ **விழித்திருங்கள், விசுவாசத்தில் நிலைத்திருங்கள் (I கொரிந்தியர் 16:13).**

# இன்னும் எத்தனை காலம் . . .?
## Still how Long?
E.Z. செல்வநாயகம்

கிறிஸ்தவ மார்க்கத்தில் காணப்படும் குழப்பங்களுக்கு அடிப்படைக் காரணமே வேதாகமத்தைப் பகுத்துப் போதிக்காதது தான் என்றால் மிகையாகாது.

பரிசுத்த வேதாகமம் இரண்டு ஏற்பாடுகளால் ஆனது. ஒன்று பழைய ஏற்பாடு; மற்றொன்று புதிய ஏற்பாடு. ஏற்பாடு என்றால் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் என்று பொருள். அதாவது இரண்டு தரப்பினருக் கிடையே சில காரியங்களைச் செய்யும்படி பேசி முடிவு எடுத்து ஒப்பந்தம் செய்து கொள்வது ஆகும்.

பழைய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை என்பது யெகோ வாவாகிய தேவனுக்கும் இஸ்ரவேல் நாட்டாருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட தேசீய ஒப்பந்தம். (உபா 5 : 1- 3) அது இஸ்ரவேல ரல்லாதவருக்குப் பொருந்தாது.

ஆனால், புதிய உடன்படிக்கை என்பது கிறிஸ்துவுக்கும், உலகம் எங்கிலும் உள்ள (யூதர், புறஜாதியார் என்ற வேறுபாடு இன்றி) ஒவ்வொரு தனி நபருக்கும் இடையே செய்யப்பட்டிருக்கின்ற ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை, அதைத் தான் புதிய ஏற்பாடு என்கிறோம். ஏற்பாடு என்றால் என்னமோ ஏதோ என்று மலைக்க வேண்டாம்.

இந்த இரண்டு உடன்படிக்கைகளிலுமே சில நிபந்தனைகள் உண்டு. அதாவது, நீ இப்படிச் செய்தால் நான் இன்னின்னதைத் தருவேன். இதுதான் நிபந்தனை என்பது.

புதிய ஏற்பாட்டைப் பொறுத்த வரையில் அந்த நிபந்தனை என்ன? புதிய உடன்படிக்கையின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களுக்கு மட்டுமே பாவ மன்னிப்புக் கிடைக்கும் என்று புதிய உடன்படிக்கை பற்றி தீர்க்கதரிசனம் உரைத்த எரேமியா கூறுகிறார். மேலும், அவர் பழைய உடன்படிக்கையை புதிய உடன்படிக்கையோடு ஒப்பிட்டு அதிலுள்ள வித்தியாசங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்தவர்களுக்கும் பாவ மன்னிப்பு உண்டு என்றாலும் ஒருவனும் அந்த உடன்படிக்கையின் பிரமாணங்களை முழுமையாகக் கடைப்பிடிக்க இயலவில்லையா தலால் அது அருளப்படவில்லை. (அப் 13 : 39; ரோமர்3 : 20; கலா 2: 16; 3 : 10 - 12) அதாவது, பழைய உடன்படிக்கை யாருக்கும் பாவ மன்னிப்பு அளிக்கவில்லை. ஆனால், புதிய ஏற்பாடு பாவமன்னிப்பு அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. அது ஒரு வித்தியாசம் (எரே 31 : 34).

பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் வேறொரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. பழைய உடன்படிக்கையின்படி தேவனுக்கும், முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை ஆபிரகாமின் சந்ததியில் வாழ்ந்த மற்றவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆதி 17: 1–14 வரை உள்ள வசனப் பகுதியில் நான் (தேவன்) உனக்கும், உனக்குப்பின் வரும் சந்ததியாருக்கும் தேவனாய் இருப்பேன் என்று ஆபிரகாமுக்கு வாக்களித்தார். ஆகவே, ஆபிரகாமுடைய சந்ததியார் பிறக்கும் போதே தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்துக்குச் சொந்தக்காரராகி விடுகிறார்கள். அந்த ஏற்பாட்டை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்பதற்கு அடையாளமாக அவர் சந்ததியில் பிறக்கிற ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்வித்தார்கள். ஆனால், அப்படி விருத்தசேதனம் செய்விக்கப்பட்ட குழந்தைகளுக்கு அந்த உடன்படிக்கையின் ஷரத்துகளைப் புரிந்து கொள்ளும் ஞானம் இருக்க நியாயமில்லை.பின்னர் அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது யெகோவாவையும் அவருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் பற்றிப் போதிக்கப்பட்டார்கள். இது ஒரு வகையில் நம்முடைய நாட்டில் முன்னொரு காலத்தில் நடைமுறையில் இருந்த பாலிய விவாகத்தைப் (குழந்தைத் திருமணம்) போன்றது. குழந்தைகளின் விருப்பத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் பெற்றோர்கள் தங்கள் கருத்தைத் திணிப்பது, விளைவு என்ன? அவர்கள் அந்த உடன்படிக்கையை விபரம் தெரிந்து விருப்பப்பட்டு ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் ''நான் அவர்களுக்கு நாயகராக இருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே'' என்று தேவன் வருத்தப்படுகிற அளவுக்கு அவர்கள் அந்த உடன் படிக்கையை அசட்டை செய்தார்கள்.

ஆகையால், தேவன் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அந்தப் புதிய உடன்படிக்கையின்படி ''என்னுடைய (தேவன்) பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து அவர்களுடைய இருதயங்களிலே அவைகளை எழுதுவேன். நான் அவர்களின் தேவனாயிருப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும் எல்லோரும் என்னை அறிவார்கள் (எபி 8:10, 11) மேற்சொல்லப்பட்டிருக்கிற வசனங்களின் கருத்து என்ன? போதிப்பதினாலும், கற்பிப்பதினாலும் ஒரு காரியயத்தை ஒருவன் மனதிலே பதிப்பிக்க முடியும். புதிய ஏற்பாட்டின் கீழ் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுவதின் மூலம் கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கை போதிக்கப்படுகிறது. சிறியோர் முதல் பெரியோர் வரை என்னை அறிவார்கள் என்று சொல்லப்பட்டிருப்பதின் கருத்து

இதுதான். இங்கே ஒரு வித்தியாசத்தைக் கவனியுங்கள். பழைய உடன்படிக்கையின் படியும் மக்கள் போதிக்கப்பட்டார்கள். ஆனால் அதை ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்கிற சுதந்தரம் அவர் களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் புதிய உடன்படிக்கையில் அந்த சுதந்தரம் உண்டு. ஒருவன் அதை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு கீழ்ப்படியலாம் அல்லது விட்டு விடலாம். கீழ்ப்படிகிறவர்களுக்கு பாவ மன்னிப்பு உண்டு; தேவனுடைய புத்திரர்கள் ஆகும் வாய்ப்பு உண்டு; கீழ்ப்படியாதவர்களுக்கு அது இல்லை, ''நான் அவர்கள் அநியாயங் களைக் கிருபையாய் மன்னித்து, அவர்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்'' என்று கர்த்தர் சொல்லுகிறார். (எபி 8 : 12) இந்த வாக்குத் தத்தம் யாருக்கு? புதிய உடன்படிக்கையின் உபதேசங்களைக் கற்று தங்கள் இருதயங்களில் விசுவாசித்துக் கீழ்ப்படிந்தவர்களுக்கு மட்டுமே. இந்தக் கருத்தை இயேசு கிறிஸ்து தம்முடைய பெரிய கட்டளையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். 'நீங்கள் உலக மெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற்கு 16 : 15, 16) ஒருவனுக்கு விசுவாசம் எப்படி வரும்? என்பதை விளக்க அப்போஸ்தலன் பவுல் ''விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' என்கிறார் (ரோமர் 10 : 17.)

இரண்டு காரியங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவது, பழைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளுவதற்கு நாம் யூதரல்ல அதாவது ஆபிரகாமின் மாம்சீக வழித் தோன்றல்கள் அல்ல; இரண்டாவது பழைய உடன்படிக்கை மாற்றப்பட்டு புதிய உடன்படிக்கை அமுலுக்கு வந்தாயிற்று (எபி 8:13; கொலோ 2 : 14.)

இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் இன்னும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதின் மூலம், கர்த்தரே பிரயோஜனமற்றது, சரிபட்டு வரவில்லை என்று தள்ளிப்போட்ட பிரமாணத்துக்கு நீங்கள் புத்துயிர் கொடுக்கிற பாவத்தைச் செய்கிறீர்கள் என்று உணராதிருக் கிறீர்களே! அஞ்ஞானிகள் என்று நாம் வர்ணிக்கிற மக்கள் பால்ய விவாகம் நியாயமற்றது; சம்பந்தப்பட்டவர்களுடைய கருத்தைக் கேட்காமல் செய்யப்படும் காரியங்களுக்கு அவர்கள் உடன்பட வேண்டிய தில்லை என்று புரிந்து கொண்டு அதைப் புறக்கணித்துப் போட்டார்கள். ஆனால் நாமோ, வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று கூறிக் கொண்டு ஆவிக்குரிய பால்ய விவாகமான குழந்தை ஞானஸ் நானத்தை விடாப் பிடியாய்ப் பற்றிக் கொண்டு சம்பந்தப்பட்ட குழந்தை களுக்கு அநியாயம் செய்கிறோம்; தேவனுக்கும் எதிர்த்து நிற்கிறோம்.

அப்படி அவரவர்கள் இஷ்டத்துக்கு விட்டுவிட்டால் கிறிஸ்தவ மார்க்கம் அழிந்து போகும் அல்லது தேய்ந்து போகும் என்று ஒருவேளை நீங்கள் பயப்படுகிறீர்களா? கிறிஸ்தவம் கத்தி முனையிலும், கட்டாயத்திலும் வளர்க்கப்படுவதற்கு அது ஒன்றும் செத்த மார்க்கமல்ல; அது ஜீவனும் பெலனும் உள்ளது, வளரக்கூடியது. தேவனுடைய வார்த்தைகள் இருதயங்களை நொறுக்கும் சம்மட்டி, இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்தைக் காட்டிலும் கூர்மையானது, ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும் ஊனையும் உருவக் குத்தி, பிரிக்கும் வல்லமையுடையது, இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கக் கூடியது. அதை – எடுத்து உபயோகித்து சத்துருவாகிய சாத்தானை வீழ்த்தாமல், உலுத்துப் போன கொள்கைகளை, மாய ஜால வித்தைகளை, மோடி மஸ்தான் கையாளுகிற நாலாந்தர யுத்திகளைக் கையாண்டு கிறிஸ்தவத்தை வளர்க்கவும் நிலை நிறுத்தவும் முடியும் என்று நம்புகிற உங்களுக்கு ஐயோ!

இன்னும் எத்தனை காலம் தான் கிறிஸ்து நம்முடைய மதியீனத்தையும், நிர்விசாரப் போக்கையும் பொறுத்துக் கொண்டிருப்பார். நண்பர்களே! தாய்க்குலமே! வாசி, சிந்தி, விரைந்து செயல்படு! காலம் சமீபமாய் வந்து கொண்டிருக்கிறது. ✝

---

**குழந்தைகளின் விசுவாசம் விருத்தி அடைவதற்கான வழிகள்**

- **உங்கள் தனிப்பட்ட விசுவாசம் அவர்களுக்கு முன் மாதிரியாக இருக்கும்படியாக நடந்து கொள்ளுங்கள்**
- **அவர்களுக்காக நீங்கள் ஜெபிப்பதோடு அவர்களோடு சேர்ந்தும் ஜெபியுங்கள்**
- **தேவனுடைய வேலையை அவர்களோடு இணைந்து செய்யுங்கள்**
- **எல்லாவற்றிலும் உண்மையாய் நடந்து கொள்ளுங்கள்**

## தேவன்

## தேவனில்லாமல் வாழ்க்கையை அனுபவித்தல்?

# Enjoyment without God?

Danny Petrillo

**என்னைப்பார்க்கிலும் சம்பிரமாய்ச் சாப்பிடத்தக்கவன் யார்?** [பிரசங்கி 2:25] நிச்சயமாகவே மனிதர்கள் நன்றாகச் சாப்பிடுகிறார்கள். உணவை அபரிதமாக அனுபவிக்கிறார்கள். இன்றைய நாட்களில் மனிதர்கள் சிற்றின்பத்தை அதிகமாக விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள், சொல்லப்போனால் முன்பெப்போதும் இல்லாத செல்வத்தின் கனியை புசித்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் இங்கே சாலொமோனின் கருத்து என்ன?

முதலாவது, தேவனில்லாமல் வாழ்க்கையின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பது என்பது சாத்தியமில்லாதது. சிலர் நல்ல ஆகாரத்தோடு மது அருந்துவது தான் **நல்ல வாழ்க்கை** என்று நினைக்கிறார்கள். ஆனால், உண்மையில் அது ஆழமற்றதும் வெறுமையான வாழ்க்கையுமாயிருக்கிறது. ஏன் அப்படி? ஏனென்றால், ஒருவர் தன் வாழ்க்கையை அனுபவிப்பது தன்னுடைய திறமையினாலும், முயற்சியினாலும்தான் சாத்தியம் என்று எண்ணுகிறார். ஆகவே, அங்கே நன்றியறிதல் இல்லை. தேவன் ஆசீர்வாதங்களை நீதிமான்கள் மீதும் அநீதிமான்கள்மீதும் அனுப்பவில்லையென்றால் நாம் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை ஏற்றுக்கொள்ள மறுப்பது நன்றியில்லாமை ஆகும்.

இரண்டாவது, ஒருவருடைய ஆசீர்வாதத்தில் தேவனுடைய கரம் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வது அது சிறிய ஆசீர்வாதமாக இருந்தாலும் மகிழ்ச்சியை பல மடங்காக்குகிறது. நாம் மகிழ்ச்சி யாயிருப்பதற்கு பெரிய மாளிகைகள், சொகுசு கார், ஆடம்பரமான ஆடைகள், போன்றவைகள் எல்லாம் தேவை இல்லை. உண்ணவும், **உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்** என்று பவுல் கூறுகிறார் [I தீமோத்தேயு 6:8] மேலும், அவர் நான் எந்நிலையிலும் மனரம்மியமாக இருக்க கற்றுக்கொண்டேன் என்றும் எழுதியிருக்கிறார். ஒருவர் இதை எப்படி வெற்றிகரமாக செய்ய முடியும்? இதற்கான திறவுகோல் **என்னைப் பெலப் படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு** [பிலிப்பியர் 4:12-13]. கணிசமான செல்வத்தினால்

ஆசீர்வதிக்கப்பட்டிருந்த சாலொமோன் ஒருவர் தான் விரும்பியதையெல்லாம் பெற்றுக்கொண்டாலும் கூட எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது என்று சொல்கிறார் (பிரசங்கி 2:1-11). ஏன் அப்படி சாலொமோன் சொல்கிறார் ஏனென்றால் நிலையான மகிழ்ச்சி உலகப் பிரகாரமான காரியங்களில் இல்லை என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

ஒருவர் தன் வாழ்வில் தேவனைப் பெற்றிருப்பது **எல்லாப்புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை அவருக்குக் கொடுக்கிறது** (பிலிப்பியர் 4:6). மேலும், அது தேவனுடைய அருமையான ஆசீர்வாதங்களை அனுபவிக்க அவருக்கு வாய்ப்பைக் கொடுக்கிறது. எனவே, நம் கேள்விக்கான பதில் என்ன? தேவனில்லாமல் ஒருவர் வாழ்க்கையை அனுபவிக்க முடியுமா? இல்லை உண்மையாக அனுபவிக்க முடியாது. தேவன் நம் வாழ்க்கையில் இருந்தால்தான் வாழ்க்கையில் எல்லாவற்றையும் நாம் முழுமையாக அனுபவிக்க முடியும். ✝

## விழுந்து போவதற்கான சில காரணங்கள்

| | | |
|---|---|---|
| சாத்தான் | – | லூக்கா 22:31 |
| கள்ளப்போதகர்கள் | – | அப்போஸ்தலர் 20: 29, 30 |
| வசனத்தைப் புரட்டுதல் | – | II தீமோத்தேயு 4:3-4 |
| உபத்திரவம் | – | மத்தேயு 13:21 |
| கீழ்ப்படியாமை | – | எபிரெயர் 3:1819 |
| உலக ஆசை | – | II தீமோத்தேயு 4:10 |
| மாம்ச வாழ்க்கை | – | ரோமர் 8:13 |

# தேவன்
## சமாதானம்
## Peace

Andy Robison

**ந**ம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் பிறந்தபோது தேவதூதர்கள் **உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்** (லூக்கா 2:14).

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு எழுநூறு வருடங்களுக்கு முன்பாகவே, அவர் **சமாதானப் பிரபுவாக** அழைக்கப்படுவார் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது (ஏசாயா 9:6). அப்போஸ்தலனாகிய பவுலும் கூட **அவரே நம்முடைய சமாதானக் காரணராகி** என்று எழுதினார் (எபேசியர் 2:14). வேதவாக்கியங்களை மேலோட்டமாகப் படித்தால் கூட இயேசுவின் நாமத்திற்கும், சமாதானத்திற்கும் இடையே உள்ள சம்மந்தம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். இருந்தபோதிலும் கிறிஸ்து **நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களா? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்க வந்தேன்** என்று சொன்னார் (லூக்கா 12:51). இயேசு சொன்ன வார்த்தைகளை மத்தேயு இவ்விதமாக பதிவு செய்கிறார். **பூமியின் மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள்: சமாதானத்தையல்ல, பட்டத்தையே அனுப்ப வந்தேன்** (மத்தேயு 10:34).

கிறிஸ்துவால் எப்படி ஒரே நேரத்தில் சமாதானத்தின் அதிபதியாகவும், பிரிவினையின் காரணமாகவும் இருக்க முடியும். இன்று உலகில் பலர் கிறிஸ்தவம் உட்பட எல்லா மதங்களையும் வன்முறைக்கான சித்தாந்த காளங்களாக குற்றஞ்சாட்டி எதிர்க்கிறார்கள். இது உண்மையாக இருக்க முடியுமா? கீழ்க்காணும் கருத்துக்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

### கிறிஸ்து தேவனோடு சமாதானத்தை கொண்டு வருகிறார்

கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுபவர்கள் அவர்கள் பாவத்தை ஜெயித்தபடியால் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். தவறு செய்வது ஒரு மனிதனுடைய ஆத்துமாவை அடித்து நொறுக்குகிறது. சமுதாயங்களில் ஆரம்பத்திலிருந்த சில வகையான மீட்புக்காக சில வகையான கடவுள்கள் நாடப்பட்டிருக்கின்றன. ஒழுக்க நெறிகள் தலைகீழாக தடம் புரண்டன, மனிதர்கள் எந்த வகையிலாவது மன்னிப்பை நாடி இருக்கிறார்கள். (மீகா 6:6-8) வசனங்களில்

மீகா மனிதர்கள் தங்கள் பாவங்களுக்காக எத்தனை மிருகங்களை பலியாக செலுத்த வேண்டும் என்று குற்ற உணர்வுள்ள மனிதர்களைக் கேட்கிறார்.



கிறிஸ்து தேவ பக்தியற்ற முறைகளிலிருந்து விடுதலையைக் கொடுத்தார். அவர் நியாய பிரமாண பலிமுறைகளிலிருந்து விடுதலையைக் கொடுத்தார். மேலும், கிறிஸ்து ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார் (எபிரெயர் 5:9). ரோமர் 5:1 ல் இடம் பெற்றுள்ள வாக்கியம் மிகவும் ஆறுதலை அளிக்கிறது. **இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.** தங்கள் எல்லா கவலைகளையும் தேவன் மீது வைத்து விடும் கிறிஸ்தவர்கள் எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை அனுபவிக்கிறார்கள் (பிலிப்பியர் 4:7).

**கிறிஸ்து மனிதர்களுக்கிடையில் சமாதானத்தைக் கொண்டு வருகிறார்**

யூதர்களும், புறஜாதிகளும் அதாவது எல்லா இன மற்றும் வகுப்புகளைச் சார்ந்தவர்களும் கிறிஸ்துவின் சபையில் ஒன்றாகக் கொண்டுவரப்படுகிறார்கள் (எபேசியர் 2:1417). எல்லாரும் **கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள்** (கலாத்தியர் 3:28). உண்மையாகவே, சுவிசேஷமானது எல்லா தேசத்தாரும், இனத்தாரும், சமூகப் பொருளாதார பின்னணியை சார்ந்தவர்களும் தேவனுடைய ராஜ்யத்தில் ஒன்றாயிருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கர்கள், ரஷ்யர்கள், ஈராக்கியர்கள், சீனர்கள் எல்லோருமே தேவனுடைய குடும்பத்தில் சகோதர, சகோதரராயிருக்கிறார்கள். சபை ஒன்றாகக் கூடும்போது இனம், செல்வம், தேசம் போன்றவைகள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மேற்கொள்ளப்படும்.

**கிறிஸ்துவின் சட்டத்திட்டங்கள் அதிக சமாதானத்தைக் கொண்டு வருகிறது**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களல்லாதவர்கள் மத்தியில் கூட, கிறிஸ்துவின் பிரமாணங்கள் பின்பற்றப்பட்டால் அங்கே அதிக சமாதானம் உண்டாகும். அவர் சத்துருக்களிடத்தில் கூட தன்னலமற்ற தியாகப் பூர்வமான அன்பை காட்டும்படி போதித்தார் (மத்தேயு 7:12). இந்த இரண்டு விதிகளும் அதிகப்படியான சமாதானத்தைக் கொண்டு வரும்.

**தேவன்**

# இயேசு நம்பிக்கையைக் கொண்டு வருகிறார்

## *Jesus Brings Hope out of Tragedy*

Charles Box

**ந**ம் உலகம் சோகச் சம்பவங்களால் நிறைந்திருக்கிறது. மக்கள் வெள்ளப்பெருக்கு, தீ, சூறாவளி மற்றும் விபத்துக்களால் காயப்படுத்தப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள். பூகம்பங்களும், புயல்களும், தங்கள் அழிக்கும் சக்தியுடன் வந்து புரட்டிப் போடுகின்றன. கொடிய நோய்கள் வந்து பலி எண்ணிக்கையை உயர்த்துகின்றன. இருந்தபோதிலும், இத்தகைய சோகச் சம்பவங் களிலிருந்து கூட இயேசுவால் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்.

### ஒரு குழந்தை வியாதியாயிருந்தது



ஒரு குழந்தை நோய்வாய்ப்பட்டாலோ அல்லது மரித்துப் போனாலோ அது நமக்கு மிகுந்த சோக த்தை ஏற்படுத்தும். ஒரு பன்னிரெண்டு வயது சிறுமி நோயினால் கடுமையாக பாதிக்கப் பட்டிருந்தாள். மாற்கு 5:22–23 வசனங்கள் அச்சிறுமியின் தந்தை எப்படி இயேசுகிறிஸ்துவை அணுகினார். என்று வெளிப்படுத்துகின்றன. **அப்பொழுது ஜெப ஆலயத் தலைவர்களில் ஒருவனாகிய யவீரு என்பவன் வந்து அவரைக் கண்டவுடனே அவர் பாதத்திலே விழுந்து : என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர்வந்து அவள்மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக் கொண்டான்.** நோய்வாய்ப்பட்ட குழந்தையினால் உண்டான சோகம் அந்த ஜெப ஆலயத் தலைவனை தரையிலே விழச் செய்தது. யவீருவின் நிலையில் இருந்த பெரும்பாலானோர் இயேசு கிறிஸ்துவை எதிர்த்தார்கள். இந்த ஜெப ஆலயத் தலைவனும் கூட

இயேசுவை எதிர்த்திருக்கலாம். ஆனால், அவன் இயேசுவினிடத்தில் உதவிக்காக நம்பிக்கையாக வந்தபோது அவைகளெல்லாம் மறந்து போனது. யவீரு இயேசுவின் பாதத்தில் விழுந்து உதவிக்காக நம்பிக்கையாக வந்தபோது அவைகளெல்லாம் மறந்து போனது. யவீரு இயேசுவின் பாதத்தில் விழுந்து உதவிக்காக கெஞ்சினபோது அவன் தன் எல்லாப் பெருமையையும் வெறுமையாக்கினான். நம்மில் பெரும் பாலானோர் நம் வாழ்க்கையை நாமே நடத்த விரும்புவோம். ஆனால் நம் நம்பிக்கையும், உதவியும் இயேசுகிறிஸ்துவில் தான் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளத் தாழ்மையாயிருப்போம். யவீரு இதை கற்றுக் கொண்டார். இதை கற்றுக்கொண்டு தன் மகளின் ஆரோக்கியத்தை மீட்டெடுத்தார்.

## ஒரு பெண்ணின் கடைசி நம்பிக்கை

யவீருவோடு இயேசு சென்றபோது, கூட்டத்திலிருந்து ஒரு பெண் வந்து அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்

அவர் அவனோடே கூடப்போனார், திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்று அவரை நெருக்கினார்கள். அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவை களையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது, இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி, ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய உதிரத்தின் ஊரல் நின்று போயிற்று: அந்த வேதனை நீங்கி ஆரோ க்கியமடைந்த அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள் (மாற்கு 5:24−29)

அந்த ஏழை ஸ்திரீ பன்னிரெண்டு வருடங்கள் கஷ்டப் பட்டிருக்கிறாள். அவள் மருத்துவர்களிடத்தில் தனக்கு உண்டான எல்லா பணத்தையும் செலவழித்து இருந்தாலும் கூட அவளுடைய நிலைமை மோசமாகத்தான் போனது. மருத்துவர்கள் நோயை சுகமாக்க எவ்வளவோ முயற்சித்தாலும் கூட அவர்களுக்கு வெற்றி கிடைக்க வில்லை. கடைசி கட்டத்தில் தான் அவள் இயேசுவினிடத்தில் வந்தாள். இன்னும் கூட பலர் இதே விதமாக செய்கிறார்கள் அல்லவா? அவர்கள் எல்லாவற்றையும் முயற்சித்துப் பார்த்துவிட்டு, கடைசியாக இயேசுவை முயற்சிக்கிறார்கள். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இக்கட்டான நேரத்தில் ஏற்ற சகாயராக இருக்கிறார்.

### அந்த ஸ்திரீ சுகமாக்கப்பட்டாள்

**இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி, ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து; அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய உதிரத்தின் ஊரல் நின்று போயிற்று: அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள். உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி, என் வஸ்திரத்தைத் தொட்டது யார் என்று கேட்டார்** (மாற்கு 5:27–30).

யாரோ ஒருவவர் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்தால் தான் பெரிய காரியங்களை செய்து முடிக்க முடியும்.

இது இயேசு கிறிஸ்துவுக்கும் உண்மையாயிருக்கிறது. நமக்கும் நம் வேலைக்கும் உண்மையாயிருக்கிறது. இயேசு கிறிஸ்து ஒரு வரலாற்று நாயகராக இருப்பதற்கான காரணம் மற்றவர்களுக்கு சேவை செய்ய தம்மைத் தாமே முழுமையாக ஒப்புக் கொடுத்தார். இயேசு தம்மைத் தொட்ட ஸ்திரீ யார் என்பதை அறிவார் என்று சீஷர்களால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. பெரும்பாலும் நாமும் சீஷர்களைப்போல் ஜனங்களுக்கு சேவை செய்ய சிலரால் செய்யப் பட்டிருக்கிற தியாகத்தையும் பற்றி நமக்கு எந்த புரிதலும் இல்லை. இவ்வசனத்திலிருந்து நாம் மாபெரும் பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியும். தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடுங்கி அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையை யெல்லாம் அவருக்குச் சொன்னாள். அதன் விளைவு அழகாக இருந்தது. அவர் அவளைப் பார்த்து: மகளே உன் விசுவாசம். உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார் (மாற்கு 5:34).

### நம்பிக்கையின்மையிலிருந்து நம்பிக்கைக்கு

உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகிறீர் (மாற்கு 5:35). போன்ற நம்பிக்கையற்ற வார்த்தைகள் வரும். ஆயினும், இயேசு நம்பிக்கை இல்லாமல் இல்லை **பயப்படாதே விசுவாசமுள்ளவனாயிரு** என்று சொன்னார் (மாற்கு 5:36). அங்கே அழுது புலம்பினவர்களுடைய நம்பிக்கையின் மைக்கும், இயேசுவின் நம்பிக்கைக்கும் உள்ள வித்தியாசத்தை

நம்மால் காணமுடியும். இயேசு தம்மைப் பார்த்து நகைத்தவர்களை தம்முடைய மென்மையான அதே நேரத்தில் வல்லமையான வார்த்தைகளால் மௌனமாக்கினார். **பிள்ளையின் கையை பிடித்து: தலித்தாகூமி என்றார்; அதற்கு, சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று அர்த்தமாம். உடனே சிறுபெண் எழுந்து நடந்தாள்; அவள் பன்னிரண்டு வயதுள்ளவளாயிருந்தாள். அவர்கள் ஆச்சரியப்பட்டு பிரமித்தார்கள்** (மாற்கு 5:41– 42).

மாற்கு 5:21–43 வசனங்களிலிருந்து நாம் இவைகளை கற்றுக்கொள்வோம்.

1. மக்கள் இவ்வாழ்க்கையில் பல சோகங்களை சந்திக்கிறார்கள்
2. வியாதியும் நோயும் வயதானவர்களுக்கும், வாலிபர்களுக்கும் வரும்.
3. ஜனங்கள் துன்பப்படும்போது இயேசு உண்மையாகவே அக்கறைப்படுகிறார்.
4. இயேசுவால் நம்பிக்கையின்மையை நம்பிக்கையாக மாற்ற முடியும்.
5. கிறிஸ்தவத்தை பரிகாசம் செய்பவர்கள் மௌனமாக்கப் படுவார்கள்.
6. நம்முடைய ஒரே வழி இயேசுதான்
7. நம் வாழ்வை ஆட்சி செய்ய கிறிஸ்துவை நாம் அனுமதித்தால் இந்த வாழ்க்கையும், இனி வரும் வாழ்க்கையும் நம்முடையதாகும் (ரோமர் 6:1–6;) அப்போஸ்தலர் 3:36–41; யோவான் 10:10).

✝

---

## தேவன் தரும் வாய்ப்புகளை இழந்து போவதற்கான காரணங்கள்

**அறியாமை :** *3:17*, I *கொரிந்தியர் 2:8*

**வஞ்சனை :** *யாக்கோபு 1:22; கலாத்தியர் 6:7*

**அவிசுவாசம் :** *எபிரெயர் 3:19; யோவான் 3:18*

**உதாசினம் :** *எபிரெயர் 2:3,4 ; எபிரெயர் 12:25*

**உலக சிநேகம் :** *யாக்கோபு 4:4 ; யோவான் 17:14*


**சாட்சியங்கள்**

# பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள்!

## Parents, Protect your Children !

Carl Mitchell

**ச**ங்கீதம் 85:10 ல் மிக அழகாக கவிதை நடையில் **நீதியும், சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்** என்று எழுதப்பட்டிருப்பதை நம்மால் வாசிக்க முடியும். இங்கே சொல்லப்பட்டிருக்கிற கருத்து இவ்வசனத்தில் இடம் பெற்றிருக்கிற இரண்டு நற்பண்புகளுமே ஒன்றொடொன்று கைகோர்த்து செல்கின்றன என்பதாயிருக்கிறது. இது தேவனுடைய வார்த்தையின் தன்மை என்று நான் நம்புகிறேன். நீதி, சமாதானம் எனும் நற்பண்புகளுக்கிடையே இருக்கும் ஒற்றுமைகளைப் பாருங்கள். ஒரு பண்பு மற்றொரு பண்புக்கு வழிநடத்துகிறதை கவனியுங்கள்.



இது தீமைக்கும் – பொருந்துகிறதாயிருக்காது, இன்றைய நாட்களில் நாம் அப்படியே புதுமைவாதமும், நவநாகரீக கொள்கையும் முத்தமிடுகின்றன என்று பொருத்திப் பார்க்க முடியும்.

சாத்தானால், தூண்டப்பட்ட தத்துவஞானங்கள் நம்மை சுற்றி எங்குமுள்ளன. அவைகள் ஒன்றாகவே பயணிக்கின்றன. எல்லாமே ஒரே தகவலைக் கொண்டிராவிட்டாலும் கூட அடிப்படை விஷயமாக சத்தியம் இல்லாமல் இருக்கும். அவர்களுடைய தத்துவங்களில் தேவனை விட ஒரு தனிமனிதனை உயர்த்தும் போக்கு இருக்கும். மேலும், பரிசுத்த வேத எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டிருக்கிற நியாயத்தீர்ப்பைப் பற்றி பரிகாசமுமிருக்கும்.

பெற்றோர்கள் குழந்தைகளை குறிவைத்துக் கெடுக்கும் சக்தி வாய்ந்த சாத்தானின் ஆயுதங்களைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். திரைப்படங்கள், தொலைக்காட்சி, பிரபல பத்திரிக்கைகள் இன்னும் அசிங்கத்தையும், ஆபாசத்தையும் உள்ளடக்கிய ஏராளமான புத்தகங்கள் குழந்தைகளை குறிவைக்கின்றன.

இந்த நவநாகரீக கொள்ளைக்காரர்கள் மௌனமாகத்தானே இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைத்தால் ஒரு புத்தகக் கடைக்குப் போய் பாருங்கள். அங்கே தேவதூதர்களிடமிருந்து வந்த செய்தி, தியானம் மயக்க அல்லது போதை மருந்துகளின் நன்மைகள், ஜோதிட சக்திகள், பூமித்தாய், மறு அவதாரம் போன்ற புத்தகங்கள் நிரம்பி கிடப்பதை நம்மால் காண முடியும். இந்த புதுமை கொள்கை அல்லது இயக்கம் சமதாயத்தின் மீது கொண்டிருக்கும் எதிர்மறையான தாக்கத்தைக் குறித்து நல்ல தகவல்களை அலசிப்பாருங்கள்.

இந்தப் புதுமைவாதக் கொள்கைகளும், தத்துவஞானங்களும் கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு அம்சங்கள் மூலமாக பரப்பப்படுகின்றன. அவர்கள் அதிகமாக பயன்படுத்தி பிரபலமாக்கிய வார்த்தைகள் நம் கல்வி முறையில் ஊடுருவிவிட்டன. பள்ளிக் கூடங்களில் தேவன், வேதாகமம் அல்லது கிறிஸ்தவ விசுவாசம் சம்மந்தமான எந்த வார்த்தைகளுமே இடம் பெறக்கூடாது என்று கூக் குரல் இடும் இந்த நாட்களில் இந்த புதுமைவாதிகளின் கொள்கை களும், தத்துவங்களும் தாராளமாய் இடம் பிடித்திருப்பது நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

உலகப்பிரகாமான காரியங்களை ஊக்குவிக்கும் இந்த கலாச்சாரத் திலிருந்து தங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்க பெற்றோர்களால் என்ன செய்ய முடியும்? முதலாவது, நற்கிரியைகளில் ஈடுபடும் போது தேவன் நம் முயற்சிகளை ஆசீர்வதிப்பார் என்கிற நம்பிக்கையில் நலிவடைந்து விடக்கூடாது. இரண்டாவது, நான் பதிவு செய்த கருத்துக்களை கற்பனை என்று எண்ணிவிட வேண்டாம். நம் கலாச்சாரம் புதுமைவாதக் கொள்கைகளின் தாக்கத்தினால், அசுர வேகத்தில் மாறியிருக்கிறது. அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

- ஆய்வு நடத்தப்பட்ட பெரியவர்களில் 25% புதுயுக கடவுள் நம்பிக்கை உண்டு என்றும் அக்கடவுள் கலாச்சார ரீதியாக வளர்ச்சி அடைந்த மதங்கள் மூலமாக தன்னை வெளிப்படுத்துவார் என்றும் நம்புகிறார்கள்.

- 11% மக்கள் கடவுளை உணர்வின் உச்ச நிலையை அடைந்த ஒருவராகத்தான் பார்க்கிறார்கள்.

- 3% மக்கள் ஒவ்வொருவருக்குள்ளும் கடவுள் இருக்கிறார் என்று நம்புகிறார்கள்.

- 8% மக்கள் வருங்காலத்தை ஜோதிடம் முலமாக காண முடியும் என்று நம்புகிறார்கள்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்களில் பயிற்றுவிக்க வேண்டும். இயேசுவை இப்பூமிக்கு அனுப்ப தேவனுடைய திட்டம், அவருடைய மானிட அவதாரம், வாழ்க்கை, போதனை, பாவ நிவாரண பலி, மற்றும் அவருடைய உயிர்த்தெழுதல் போன்ற காரியங்களில் அவர்களை பயிற்றுவிக்க வேண்டும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை , நியாயத்தீர்ப்பு, பரலோகம் மற்றும் நரகம் போன்றவற்றைக் குறித்து அதிகமாகப் போதிக்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் மனமாற்றச் சம்பவத்தை தங்கள் பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக சாத்தானோடு வாழ்வா – சாவா போராட்டத்தில் இருக்கிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஞாயிறு பள்ளி, விடுமுறை வேதாகம வகுப்பு, கோடை கால முகாம் போன்றவற்றை மாத்திரம் நாம் சார்ந்திருக்க முடியாது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் ஆத்துமாக்களை பிள்ளைகளை உண்டாக்கினவரும், அவர்களோடு நித்திய நித்தியமாக வாழ விரும்புகிறவருமாகிய தேவனுக்கு நேராக திருப்ப வேண்டும் ✝

## கிறிஸ்துவை தரித்துக் கொள்பவர்

- மேலானவைகளை நாடுகிறவராக இருக்கிறார் ( கொலோ 3:1,2)
- தேவனைப் பற்றியும், தன் வாழ்க்கை மீதான தேவனுடைய சித்தத்தையும் நன்றாக அறிந்திருக்கிறார் ( யோவான் 17:3).
- மற்றவர்களின் பாரத்தைச் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறார் ( கலாத்தியர் 6:2)
- ஆவியின் கனிகளை பிரயாசப்பட்டுக் கொடுக்கிறார் (கலாத்தியர் 5:22,26)
- வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடத்தைக் கொடுக்கிறார் (மத்தேயு 6:33)
- இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் இருக்கிறார் ( ரோமர் 12:2).

# சபையும் ராஜ்ஜியமும் ஒன்றுதான்

இப்போது!
ராஜ்ஜியத்தின் I ராஜா கொரிந்தியர் 15:24–25 மற்றும் சபைக்கு தலையாயிருக்கிறார் கொலோ 1:18

கி.பி.65
சபை/ராஜ்ஜியம் இப்போது இருக்கிறதுI தீமோத்தேயு 3:15; கொலோ 1:13

கி.பி.96
ராஜ்ஜியத்தில் யோவான் (வெளிப்படுத்தின விசேஷம் 1:13)

கி.பி.45 ராஜ்ஜியத்தில் புற ஜாதிகள்
ஏசாயா 62:2; அப்போஸ்தலர் 10–11

கி.பி.40 சபை விரிவடைகிறது
ஏசாயா2:3; அப்போஸ்தலர் 1:8, 8:1

கி.பி.33 சபை பலத்தோடே வந்தது
அப்போஸ்தலர் 1:8, 8:1 – 4

கி.பி.33 சபை தொடங்கப்
பட்டது அப்போஸ்தலர் 2:4, 47

கி.பி.33 நான்காவது ராஜ்யம்
தானியேல் 2:31–45

கி.பி.33 கிறிஸ்து உயர்த்தப்பட்டார்
அப்போஸ்தலர் 2:33

கி.பி.33 எருசலேமிலே
ஏசாயா 2:2–3;லூக்கா 24:47

கி.பி.33 கடைசி நாட்கள்
அப்போஸ்தலர் 2:4, 47

கி.பி.33 அதற்காக காத்திருந்தார்கள்
மாற்கு 15:43

கி.பி.33 ராஜ்ஜியம் வரும்
லூக்கா 22:18

கி.மு.760 கடைசி நாட்கள்
ஏசாயா 2:2–3 யோவேல் 2:20

கி.பி.600 அந்த இராஜாக்கள்
தானியேல் 2 :44

கி.பி.555 பழங்கால நாட்கள்
தானியேல் 7:13,14

கி.பி.30 சமீபமாயிருக்கிறது
மத்தேயு 3:2; 4:17

கி.பி 31 அதற்காக ஜெபித்தார்கள்
மத்தேயு 6:9–10

கி.பி.32 சபை
பலத்தோடே வரவிருந்தது மாற்கு 9:1

கி.பி.32 சபையை கட்டுவேன்
மத்தேயு 16:18

ராஜ்ஜியத்தின் கிறிஸ்துவின் சிலுவையும்
சபையின் கிறிஸ்துவின் சிலுவையும்
ஒன்றுதான்

## தேவனுடைய வார்த்தை
## வாசிக்கிறதில் ஜாக்கிரதையாயிரு
## Give Attention to Reading

Jimmy Clark

**நா**ன் வருமளவும் வாசிக்கிறதிலும், புத்திசொல்லுகிறதிலும், உபதேசத்திலும், ஜாக்கிரதையாயிரு [I தீமோத்தேயு 4:13]. இந்தச் சிறிய புத்திமதி ஆழ்ந்து சிந்திக்கத்தக்க, சுவாரஸ்யமான ஒன்றாக இருக்கிறது. இங்கே பவுல் எதை வாசிக்க வேண்டும் என்று குறிப்பாகச் சொல்லவில்லை. இருந்த போதிலும் வேதவாக்கியங்களை வாசிக்கிற திலும், புத்தி சொல்லுகிறதிலும், உபதேசத்திலும் கவனமாக இருக்க வேண்டுமென்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்ல, இங்கே வாசித்தல் என்பது புத்தி சொல்லுதல் மற்றும் உபதேசம், வேதாகமத்தோடு சம்மந்தப்படுத்தி வாசித்தலைப் பற்றி சில காரியங்களை ஆழ்ந்து சிந்திப்போம்.

**எழுதப்பட்ட தகவல் மிகவும் பிரயோஜனமுள்ளது:**

வாசிக்கிறதில் கவனமாயிரு என்று புத்தி சொல்லுவதில் தேவனுடைய சித்தம் எழுத்து வடிவில் இருக்கிறதென்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின மற்றொரு நிருபத்தில் வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியைஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத் தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயாஜனமுள்ளவை களாயிருக்கிறது என்று எழுதுகிறார் [II தீமோத்தேயு 3:16-17]. மேலும், பவுல் எபேசிய சகோதரர்களுக்கு எழுதும் போது இவ்விதமாக எழுதுகிறார். இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாக எழுதியிருக்கிறேன், அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம். [எபேசியர் 3:45].

நாம் மொர்தெதாகாயின் வாழ்க்கையைப் பார்க்கும் போது எழுதப்பட்ட வார்த்தைகள் பிரயோஜனமுள்ளது என்பதை நிச்சயித்துக் கொள்ள முடியும். அந்த ராத்திரியிலே ராஜாவுக்கு நித்திரை வராத படியனால், காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற நடபடி புத்தகத்தை கொண்டு வரச்சொன்னான்; அது ராஜசமுகத்தில் வாசிக்கப்பட்டது. அப்பொழுது வாசற்காவலாளரில் இராஜாவின் இரண்டு பிரதானி களாகிய பிக்தானாவும், தேரேசும், ராஜாவாகிய அகாஸ்வேருவின்

மேல், கைபோடப்பார்த்த செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று எழுதியிருக்கிறது வாசிக்கப்பட்டது (எஸ்தர் 6:1,2).

**எழுதப்பட்ட தகவல் நிரூபிக்கப்படக்கூடியது.**

• வார்த்தைகள் காகிதத்திலோ அல்லது அது போன்ற பொருள் களிலோ எழுதப்படும் போது ஏதாவது பிரச்சனைகள் வந்தால் அதை மறுபடியும் புரட்டிப் பார்த்து உறுதி செய்து கொள்ள முடியும். உதாரணமாக, செருபாபேலின் நாட்களில் சமாரியர்கள் எருசலேமிலே தேவாலயத்தை திரும்பக் கட்டுவதற்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார்கள். அர்தசஷ்டா ராஜாவுடைய உத்தரவின் பேரில் தேவாலயப் பணிகள் நிறுத்தப்பட்ட பிறகு (எஸ்றா 4:23) தீர்க்க தரிசிகளான ஆகாயும், சகரியாவும் தேவாலயப் பணியைத் தொடரும் படி யூதர்களுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். (எஸ்றா 5:1), ஆனால், அங்கே தேவாலயப் பணியை தொடரவிடாதபடி பெரும் எதிர்ப்பு கிளம்பியது ( எஸ்றா 5:35). தேவாலயத்தை மறுபடியும் கட்டி எழுப்ப கோரேஸ் ராஜா பிறப்பித்த உத்தரவை குறித்த சந்தேகம் வந்த போது அங்கே ஒரு சுருள் அகப்பட்டது. அதாவது, ராஜா பிறப்பித்த ஒரு ஆணையை உள்ளடக்கிய கடிதம் சிக்கியது (எஸ்றா6:23) அந்த உத்தரவின் விவரமாவது தேவனுடைய ஆலயத்தின் வேலைகளை அவர்கள் செய்யட்டும். யூதருடைய அதிபதியும், யூதரின் மூப்பரும் தேவனுடைய ஆலயத்தை அதன் ஸ்தானத்திலே கட்டக்கடவர்கள் (எஸ்றா 6:7). சத்தியத்தை எல்லாரும் காணும்படி எழுதப்பட்ட தகவல் ஆதாரத்தைக் கொடுத்தது. அதே போல் தேவகாரியங்கள் நிமித்தமாக மனிதர்கள் விடும் எல்லா சவால்களுக்கும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து தீர்வு காண வேண்டும் ( அப்போஸ்தலர்17:11).

**எழுதப்பட்ட தகவல் வல்லமையுள்ளது.**

• தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும், உள்ள தாயும், இருபுறமும் கருக்குள்ளதாயும் எந்தப்பட்டயத்திலும் கருதக்குள்ள ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவாக்குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவு களையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரெயர் 4:12) அப்போஸ்தலனாகிய பேதுரு **நான் சென்ற போன பின்பு இவைகளை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக் கொள்ள ஏது வுண்டாயிருக்கும்படி பிரயத்தனம் பண்ணுவேன்** என்று சொல்கிறார் (II பேதுரு 1:15). இயேசு கிறிஸ்து பிசாசின் சோதனையில் எதிர்த்து நிற்க எழுதப்பட்ட வார்த்தைகளைத் தான் பயன்படுத்தினார் ( மத்தேயு 4:4) என்றென்றும் நிற்கிற தேவனுடைய வார்த்தையின் வல்லமையை பிசாசு அறிந்திருக்கிறான் ( I பேதுரு 1:23). தேவ னுடைய வார்த்தை துக்கமான இருதயத்தைத் தேற்றும் (I தெச லோனிக்கேயர் 4:18). தேவன் தம்முடைய வார்த்தை என்னச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அதைச் செய்யும் (ஏசாயா 55:11).

## தேவனுடைய வார்த்தை

# வேதாகமம் தன்னைப் பற்றி என்ன போதிக்கிறது - அதன் முடிவு

# What The Bible Teaches About Itself - Its Finality

Paul Holland

பவுலின் இரண்டாவது நற்செய்திப் பயணத்தில் பவுலும், சீலாவும் தெசலோனிக்கே பட்டணத்திலிருந்து பெரேயா பட்டணத்துக்கு வந்தார்கள் (அப்போஸ்தலர் 17) தெசலோனிக்கேயர் பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வு நாட்களில் வேத வாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்தி ருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து திருஷ்டாந்தப்படுத்தினான் (அப்போஸ்தலர் 17:2-3). யூதர்கள் வேதாகமத்தில் (நம் பழைய ஏற்பாட்டில்) தேறினவர்கள் என்பதை பவுல் அறிந்திருந்தபடியால் இயேசுதான் அவர்களுடைய இரட்சகர் என்று அவர்களுக்கு தெளிவு படுத்த வேண்டியது அவசியமாயிருந்தது.

பவுல் தெசலோனிக்கே பட்டணத்தில் யூதர்கள் மத்தியிலும் , புறஜாதியார் மத்தியிலும் வெற்றிகரமான ஊழியத்தைத்தான் செய்தார். ஆனால், யூதர்கள் ஒரு குழுவாக பவுல்மீது பொறாமைகொண்டு பவுலையும், சீலாவையும் தெசலோனிக்கே பட்டணத்தைவிட்டு விரட்டிவிட்டார்கள் (அந்த வெறிகொண்ட யூதர்களுடைய செயல் பாடுகள் வேத வசனங்களின் ஆதாரங்களின்படியுமல்ல, காரணங் காரியங்களின்படியுமல்ல). இப்போது பவுலும், சீலாவும் பெரேயாவுக்கு வந்து விட்டார்கள்.

லூக்கா எழுதும் போது தெசலோனிக்கேயாவிலிருந்த யூதர்களைப் பார்க்கிலும் பெரேயாவிலிருந்த யூதர்கள் நற்குணசாலிகளா யிருந்தார்கள் என்று எழுதுகிறார். இங்கே நற்குணசாலிகளாக இருந்தார்கள் என்னும் வாக்கியம். ஒன்றை கற்றுக் கொண்டு அதை நியாயமாக மதிப்பீடு செய்யும் விருப்பம் என்னும் பொருள்படுகிறது. பவுல் என்ன காரியத்தைத் தான் பெரோயாவிலும் செய்திருப்பார் என்று யூகிக்கிறேன். ஆனால், பெரோயாவில் உள்ள யூதர்கள் தங்கள் வேதாக மத்தைத் திறக்க மனதுள்ளவர்களாயிருந்தார்கள். அந்த பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள் (அப்போஸ்தலர் 17:11).

பிரசங்கியார்களாக, நம்முடைய பிராந்திய சபைகளில் அங்கத் தினர்கள் நற்குணசாலிகளாக இருக்க வேண்டுமென்றால் நாம் போதிக்

கிறவர்கள் உண்மையா என்று வேதவாக்கியங்களை அவர்கள் ஆராய்ந்து பார்க்கும் படி அவர்களை அனுமதித்து, பயிற்றுவித்து உற்சாகப்படுத்த வேண்டும். வேறு விதமாகச் சொன்னால் , நம் செய்திகளிலிருந்து அங்கத்தினர்கள் குறிப்பு எடுக்க முடியாத அளவுக்கு வேகமாக பேசக்கூடாது. சபை அங்கத்தினர்கள் குறிப்பு எடுக்க முடியாத அளவுக்கு வேகமாகப் பேசக்கூடாது. சபை அங்கத்தினர்கள் நம் பிரசங்கத்தோடு வராதபடிக்கு அதிகப்படியான வசனங்களை மேற்கோள்காட்டக்கூடாது. நீங்கள் பிரசங்கிக்கும் போது அந்த வசனப்பகுதியை அவர்கள் திறந்து அவர்களாகவே வாசிக்க அனுமதியுங்கள்.

ஏன் அப்படி? ஏனென்றால், யூதர்களும் பவுலும் விளக்கியிருக்கிற படி எந்தஒரு ஆவிக்குரிய பாடத்திற்கும் தீர்வாக இறுதி வார்த்தையாக தேவனுடைய வார்த்தையே இருக்கும் என்று வேதாகமம் போதிக்கிறது. Kevin De Young என்னும் வேத வல்லுநர் தன்னுடைய புத்தகத்தில் பெரோயா பட்டணத்தார் வேத வாக்கியங்களுக்கு முழுமையாக கீழ்ப்படிந்தமையால் அவர்களால் நற்குணசாலிகளாக இருந்திருக்க முடிந்தது என்று எழுதுகிறார். அவர்கள் வேத ஆதார மிருந்தால் நவமான காரியங்களைக் கூட ஏற்றுக் கொண்டிருப்பார்கள். வேத ஆதாரமிருந்தால் முரண்பாடாகத் தோன்றுகிறதையும் கூட நம்பியிருப்பார்கள். பெரோயா பட்டணத்தார்கள் வேத வாக்கியங்களை அப்படியே பின்பற்றினபடியால் தங்கள் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவைப் பின்பற்ற அவர்கள் முன்வந்தார்கள்.

இன்றைய நாட்களில் தங்களைக் கிறஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் மத்தியில் ஒற்றுமையின்மையும், பிணக்கும் கணிச மான அளவில் காணப்படுகிறது. கிறிஸ்தவ உலகம் கத்தோலிக்கர், ஆர்தோடக்ஸ் சபைகள், தாராள கொள்கையை கடைபிடிக்கும் ப்ராடஸ்டன்ட் பிரிவினர் என்று எத்தனையோ மார்க்கப்பிரிவினை வட்டத்தார் இருக்கின்றனர். அதன் பிறகு, புதிய ஏற்பாட்டு உபதேசத்தை மாத்திரம் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கிடையே காணப்படும் அடிப்படை வித்தியாசம், அவர் களுடைய விசுவாசம் அணுகுமுறை மற்றும் வேத வாக்கியங்களின் இறுதித் தீர்ப்பு உங்கள் அதிகாரம் எங்கே இருக்கிறது? போப்பி னிடத்தில் இருக்கிறதா? முற்பிதாக்களிடத்தில் இருக்கிறதா? நவீன கலாச்சாரத்தினிடத்தில் இருக்கிறதா? அல்லது இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு தான் உங்கள் அதிகாரமாயிருக்கிறதா?

நம் முழு அதிகாரமும் தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது. நாம் அதை எப்படிக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியும்? அதோடு கூட்டுவதோ, குறைப்பதோ கூடாது! கிறிஸ்துவின் வசனமே நம்மெல்லோரையும் நியாயந்தீர்க்கும் [யோவான் 12:48]. அதுவே இறுதியானது!

## தேவனுடைய வார்த்தை

# வேதாகமம் உண்மையாகவே அதைப் போதிக்கிறதா?

# Does the Bible Really Teach That?

Neal Pollard

**வே**தத்தில் இடம் பெறாத சில வாக்கியங்களை பிரசங்கங்களிலும், ஆவிக்குரிய கூட்டங்களிலும் இன்னும் அன்றாட வாழ்விலும் பலர் பயன்படுத்துவதைப் பார்த்து மனதுக்குள் சிரித்த அனுபவம் அநேகமாக நம்மில் பலருக்கு உண்டு. பல வாக்கியங்கள் வேதாகமத்தில் ஏதோ ஒரு வசனத்தைப் போல் இருக்கும் அல்லது வேதாகமத்தில் இருப்பதாக நாம் நினைப்போம். ஆனால், உண்மையில் அது வேதாகமத்தில் இருக்காது. உதாரணமாக, **உன் மனசாட்சியே உன் வழிகாட்டியாக இருக்கட்டும். அறிக்கை செய்வதே ஆத்துமாவுக்கு நல்லது. தேவன் நமக்கு புரியாத விதங்களில் எல்லாம் கிரியை செய்கிறார்** போன்ற வாக்கியங்களையெல்லாம் நாம் அடிக்கடி கேட்டிருப்போம். இது நல்ல நகைச்சுவையாக இருந்தாலும் கூட வேதத்தில் இடம் பெறாத ஒரு காரியத்தை மேம்படுத்த நினைக்கும் ஒரு போதகர் அல்லது பிரசங்கியாரிடமிருந்து நம் இதயமும், மனதும், பாதுகாக்கப்படவில்லையென்றால் அது நகைச்சுவை அல்ல. சிலர் இந்தக் காரியங்களைத்தான் தேவன் ஏற்றுக்கொள்வார். இவைகள் தேவனுக்குப் பிரியமானவைகள் என்று தம்பட்டம் அடித்து மற்றவர்களை ஏற்றுக் கொள்ளச் சொல்வார்கள். இன்னும் சிலர் வேதாகமம் கட்டுப்படுத்தாத காரியத்தை செய்ய வேண்டுமென்று உறுதியாகச் சொல்வார்கள்.

எப்படிப் பார்த்தாலும் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுவதைக் குறித்து அவர் நம்மிடம் கணக்குக் கேட்பார். வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட காரியத்தைக் குறித்து நாம் இவ்விதமாகத் தான் உணர வேண்டும், சிந்திக்க வேண்டும் என்று ஒரு பிரசங்கியாரோ அல்லது போதகரோ, நம் மீது ஆதிக்கம் செலுத்த நாம் அனுமதித்தால் நம்மையும், நம் ஆத்துமாக்களையும் வஞ்சித்துக் கொள்கிறோம். எல்லோரையும் நாம் அவநம்பிக்கையோடு சந்தேகப் பார்வையோடு பார்க்க வேண்டுமென்று சொல்லவில்லை. மாறாக, நாம் பெரோய பட்டணத்து கிறிஸ்தவர்களைப் போல இருக்க வேண்டுமென்று உற்சாகப்படுத்துகிறேன். **அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்** (அப்போஸ்தலர் 17:11). இவ்வசனத்தை நீங்கள் பலமுறை வாசித்திருப்பீர்கள். ஆனால், உண்மையாகவே பரிசுத்த ஆவியானவர் இவர்களைப்பற்றி என்ன சொல்கிறார்?

**அவர்கள் நற்குணசாலிகளாயிருந்தார்கள்**

அவர்கள் நற்குணசாலிகளாயிருந்தார்கள் என்று நாம் பார்க்கிறோம். எல்லாமே அங்கே ஆரம்பமாகிறது என்பதை கவனிப் போம். அவர்களைப் பற்றி சிறப்பாக சொல்லப்பட்ட காரியங்களை யெல்லாம் அவர்களுடைய மனநிலையிலிருந்தே ஆரம்பமாகிறது. இயேசு கிறிஸ்து நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்களை மெச்சியிருக் கிறார் (மத்தேயு 5:6). இந்த ஜனங்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ள ஏற்கனவே தங்கள் மனதை தயார்படுத்தியிருந்தார்கள். இதைவிட ஒருவரை அதிகமாக எப்படிப் புகழ முடியும்?

**அவர்கள் ஆர்வமுடையவர்களாயிருந்தார்கள்**

ஆர்வத்திற்கு எதிர்ப்பதமாக ஆர்வமின்மை, உற்சாகமின்மை, அக்கறையின்மை போன்ற பதங்களை நாம் எடுத்துக்கொள்ள முடியும். இந்தப் பெரேயா பட்டணத்தார் ஆசீர்வத்தோடே தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வேதாகமம் பக்கத்திற்குப் பக்கம் இரட்சிப்பின் செய்தியை பரிசளிக்கின்றன. நம் உற்சாகத்திற்கு.

**அவர்கள் ஆராய்ந்து பார்க்கிறவர்களாயிருந்தார்கள்**

இந்தப் பெரேயா பட்டணத்தார் தங்களுக்குச் சொல்லப்பட்டவை களை அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தங்களுக்கு அறிவிக்கப்பட்டவைகளைக் குறித்து ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு வரலாற்றின் மிகச் சிறந்த கிறிஸ்தவர்களின் போதனைகளை கேட்கும் வாய்ப்பு கிடைத்திருந்த போதிலும் பவுலும், சீலாவும் சொன்ன காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள். தங்களை தேவனுடைய ஊழியக்காரர் என்று சொல்லிக் கொள்ளுகிற ஒவ்வொருவரும் இவ்விதமான சோதனைக் குட்படுத்தப்பட வேண்டும்.

**அவர்கள் அன்றாட கிறிஸ்தவர்களாயிருந்தார்கள்**

இந்தப் பெரேயா பட்டணத்தார் அடுத்த வேத பாட வகுப்பு அல்லது பிரசங்கத்திற்காக காத்திருக்கவில்லை. அவர்கள் தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறவர்களாயிருந்தார்கள். நம் வாழ்க்கையில் சில காரியங்களை தினமும் செய்ய நாம் உந்தப் படுகிறோம் அல்லவா? சாப்பிடுவது, தூங்குவது, பல்துலக்குவது முகநுலைப் பயன்படுத்துவது போன்றவைகள். நாம் தொடர்ச்சியாக தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறதை வாசிப்பதன் மூலமாக, ஆராய்ந்து பார்ப்பதன் மூலமாகத்தான் தேவனோடு நெருக்கமான உறவை வைத்துக் கொள்ள முடியும்.

ஒரு கட்டளை தேவனிடத்திலிருந்து வந்ததா அல்லது மனித னிடமிருந்து வந்ததா என்பது நமக்கு எப்படித் தெரியும்? சில விநோதமான, புதுமையான உபதேசங்கள் சரியானதா அல்லது தவறானதா என்பது நமக்கு எப்படித் தெரியும்? யாரோ ஒருவர் இவைகளை பகுத்துப்பார்த்து உங்களுக்கு விடையளிக்க அனுமதி க்கவோ அதில் திருப்திப்பட்டுக் கொள்ளவோ பெரேயா பட்டணத் தாரைப் போல் இருங்கள்.

நாம் குழந்தைகளாயிராமல்,மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிற தற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தை கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படிச் செய்தார் [ எபேசியர் 4:14,15]. ✝

---

## ஒரு நிமிடம் ஒதுக்கலாமே

- *இன்று நீங்கள் காண்கின்ற புதியவரிடம் சபைக்கு வாரும் என்று சொல்லி சில வார்த்தைகளைப் பேசுவதற்கு*
- *வியாதியாயிருக்கிற ஒருவருக்கு அல்லது குடும்ப அங்கத்தினரை இழந்து போன ஒருவருக்கு ஆறுதல் கடிதம் எழுத*
- *மழலை மொழியில் ஒரு குழந்தை உங்களிடம் எதைச் சொல்ல முயற்சிக்கிறதோ அதை கவனிக்க*
- *பிரச்சனைகளை மறந்து மற்றவர்களைப் பற்றி நமக்குத் தெரிந்த நல்ல காரியங்களைப் பரப்ப*
- *தாழ்வு மனப்பான்மை உடைய ஒருவரையோ அல்லது கவலை மற்றும் சோர்வாகக் காணப்படுகிற ஒருவரையோ உற்சாகப்படுத்த*

## இரட்சிப்பு

# தனித்துவமான நித்திய இரட்சிப்பு

## Unique Eternal Salvation

Owen D. Olbricht

**நா**ன் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்; நான் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறேன், நான் இழந்து போகவே முடியாது; நான் ஆலயத்துக்கு போவதில்லை என இவைகள் தான் ஒரு வாலிபனின் பதில்களயாயிருந்தன. நான் அவனை அமெரிக்காவிலுள்ள டென்னிஸி பகுதியில் நடைபெற்ற ஒரு முகாமில் கிறிஸ்துவின் சபையில் பேசினபோது பிரசங்கத்தை கேட்க வரும்படி அழைப்பு விடுத்த போது அவனிடமிருந்து வந்த பதில்கள். அந்த வாலிபன் தான் இரட்சிக்கப்பட்டு விட்டதாகவும். தன்னால் இழந்து போகவே முடியாது என்றும் உறுதியாக எண்ணினான்.

**ஏன் அவன் அப்படி விசுவாசித்தான்.**

அவன் ஒரு முறை இரட்சிக்கப்பட்டவன் எப்போதுமே இரட்சிக்கப் பட்டிருக்கிறான் என்னும் போதனையை பலமுறை பிரசங்கிக்கக் கேட்டிருக்கலாம். இத்தகைய தவறான போதனையை போதிப்பவர்கள் (யோவான் 10:28) போன்ற வசனங்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். அவ்வசனம் என்னச் சொல்கிறது? நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதில்லை. இது உண்மைதான். ஆனால், இங்கே அவர் கையிலிருந்து யாரும் பறிக்க முடியாது என்று தான் சொன்னார்.

பவுல் (ரோமர் 8:35,39) வசனங்களில் பல மோசமான காரியங்கள் கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று சொல்கிறார். இதுவும் உண்மைதான். ஆனால், பவுல் தேவனுடைய அன்பிலிருந்து நம்மை நாமே பிரித்துக் கொண்டு போக முடியாது என்று எழுதவில்லையே.

யூதா கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது **தேவனுடைய அன்பிலே உங்களை காத்துக்கொண்டு** என்று எழுதுகிறார் (யூதா 21) இதன் பொருள் நாம் தேவனுடைய அன்பிலே நிலைத்திருக்க ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும் என்று தான் பொருள்படுகிறது. இயேசுகிறிஸ்து யோவான் 15:1 ல் நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள் என்று சொன்னார்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய அன்பு நிபந்தனைக்குட்பட்டது என்று போதித்தார். நாம் அவருடைய கற்பனைகளை கைக்கொண்டால் அவருடைய அன்பில் நிலைத் திருப்போம்.

துன்மார்க்கமும், வீம்புக்காரரும் தேவனால் வெறுக்கப் படுகிறார்கள் (சங்கீதம் 5:5;115), இனி அவர்களை தேவன் நேசிக்கமாட்டார் ( ஓசியா 9:15). நாம் எப்படி வாழைப் பழத்தை விரும்புகிறோம். ஆனால், அழுகிய பழங்களை விரும்புகிறதில்லை. அதேபோல், தேவனும் எல்லோரையும் நேசிக்கிறார். ஆனால், அவருடைய சித்தத்தை செய்யாத கெட்டுப்போனவர்களை அல்ல (மத்தேயு 7:21).

### இயேசுவின் கிளைகள்

இயேசு கிறிஸ்து தாம் திராட்சைச் செடி என்றும், அவரைப் பின்பற்றுபவர்கள் கொடிகள் என்றும் போதித்தார் (யோவான் 15:5). நமக்கு ஆவிக்குரிய ஜீவியம் வேண்டுமென்றால், அதில் கனி கொடுக்க வேண்டுமென்றால் நாம் செடியாகிய கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்க வேண்டும். என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் (பிதா) அறுத்துப் போடுகிறார் ( யோவான் 15:2). ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப் பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்( யோவான் 15:6).

இயேசு கிறிஸ்து திராட்சைச் செடியாயிருக்கிறார். அவருக்குள் தான் நித்திய ஜீவன் இருக்கிறது (I யோவான் 5:11). அவருக்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும் (ரோமர் 6:4; கலாத்தியர் 3:2627). அவருக்குள் நிலைத்திருந்து கனி கொடுக்க வேண்டும். ஒருவன் கிறிஸ்துவில் இருந்து கொண்டு கனி கொடுக்கவில்லையென்றால், பிதாவானவர் அவரை எடுத்துப்போடுகிறார். அதன் பொருள் பிதா அக்கொடியை அறுத்துப் போடுகிறார் (யோவான் 15:2). கிறிஸ்துவு க்குள் இருக்கும் ஒருவன் அவரில் நிலைத்திராவிட்டால் அவன் வெளியே எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்( யோவான் 15:6).

அதாவது அந்தக் கொடி (நபர்) செடியிலிருந்து (இயேசு) துண்டிக்கப்பட்டு வேறு விதமாகச் சொன்னால் நித்திய ஜீவனிலிருந்து துண்டிக்கப்பட்டு அதன் விளைவாக உலர்ந்து, அக்கினியிலே போடப்பட்டு எறிந்துபோவான்.

## இயேசு கிறிஸ்துவில் நித்திய ஜீவன்

நாம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, அவருக்குள் தொடர்ந்து நிலைத்திருந்தால் நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறோம் (I யோவான் 5:11). நாம் அவருக்குள் நிலைத்திருந்து கனி கொடுக்கவில்லையென்றால், நாம் அக்கினியிலே போடப்பட்டு எரிக்கப்படுவோம். ஒருமுறை இரட்சிக்கப்படுவது எப்போதும் இரட்சிக்கப்பட்ட நிலையில் இருப்பது என்பது நாம் கிறிஸ்துவுக்குள் நினைத்திருந்து தொடர்ச்சியாக கீழ்ப்படிந்தால் மட்டுமே சாத்தியமாகும் (யோவான் 15:9,10).

✝

---



அப்போஸ்தலனாகிய பவுல் I தீமோத்தேயு 2:1,2 வசனங்களில் இவ்விதமாக சொன்னார். நான் பிரதானமாய் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்.

கிறிஸ்தவர்கள் அரசாங்க அதிகாரிகளுக்காக ஜெபிப்பதன் மூலமாக அவர்களுக்கு மரியாதையைக் காட்ட வேண்டும். ஆட்சி செய்யும் தலைவர்கள் கிறிஸ்தவப் பண்புகளை வெளிப்படுத்தா விட்டாலும் கூட கிறிஸ்தவர்கள் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். ஏன் அப்படி? தேவனுடைய பராமரிப்பினால் வழி நடத்தப்படும் நல்ல தலைவர்கள் கலகமில்லாத, அமைதலுள்ள ஜீவியத்திற்கு முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். நாம் எல்லாப் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் சுதந்திரமாக இப்பூமியில் வாழ அதிகாரமுள்ள யாவருக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

# இரட்சிப்பு
## மனம் வருந்தாத
## Impenitence

**Dwight Fuqua**

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் புறஜாதியாருக்கு சுவிசேஷத்தி ற்கான தேவைகளைப் பற்றி பேசும் போது உணர்வில்லாத இருதயம் பற்றி பேசினார் (ரோமர் 1:21,28). புறஜாதிகளுக்கு சுவிசேஷத்திற்கான தேவையைப் பற்றி மறுபடியும் பவுல் பேசும் போது வருந்தாத அல்லது துக்கப்படாத இருதயத்தைப் பற்றி பேசுகிறார். உன் மனக் கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறாயே (ரோமர் 2:5).

இந்த வருந்தாத மனம் அல்லது துக்கப்படாத மனம் போன்ற வார்த்தைகளுக்கு கிரேக்க மொழியில் (amenanoetos) என்று அழைக்கப்படுகிறது இது மனமாற்றமில்லாமல் என்று பொருள்படும். வேறுவிதமாகச் சொன்னால், இதன் பொருள் ஒருவர் தன் பாவத்தைக் குறித்து வருத்தப்படாத நிலை என்பதாகும். இதற்குக் கடுமையான விளைவுகள் உண்டு. ஏனென்றால், மனந்திரும்புதலுக்கு மனமாற்றம் அவசியப்படுகிறது. மனமாற்றத்திற்கான கிரேக்க பதம் (Metanoeo) என்பதாகும். கடினமான இருதயத்தின் விளைவுதான் வருத்தப்படாத அல்லது துக்கப்படாத இருதயம். இந்த வருத்தப்படாத மனந்தான் மனந்திருந்தாத வாழ்க்கைக்கு வழிவகுக்கிறது. பவுல் வருத்தப்படாத மனம் உடையவர்களைப் பார்த்து கோபாக்கினை நாளிலே உனக்காக கோபாக்கினையை குவித்துக் கொள்ளுகிறாயே என்று சொன்னார்.

மனிதனுடைய மனக்கடினத்தைப் பற்றி யோபு சொல்லும் போது, அவர்கள் வெளிச்சத்துக்கு விரோதமாய் நடக்கிறவர்களின் கூட்டத் தார்: அவர்கள் அவருடைய வழிகளை அறியாமலும் அவருடைய பாதைகளில் தரிக்காமலும் இருக்கிறார்கள் என்று சொல்கிறார் (யோபு 24:13). அடுத்தது, நம் கவனத்திற்குரியது! அவருக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார்? (யோபு 9;4). இது நியாயமான கேள்வி!

மனிதனுடைய மனக்கடினத்தைப் பற்றி சங்கீதக்காரன் சொல்லும் போது, தேவன் நீதியுள்ள நியாயதிபதி; அவர் நாள்தோறும் பாவியின் மேல் சினங்கொள்ளுகிற தேவன் என்று சொல்கிறார் (சங்கீதம் 7:11). சங்கீதக்காரன் கடினமான இருதயத்தை உடையவர்களைப் பார்த்து பலவானே, பொல்லாப்பில் ஏன் பெருமை பாராட்டுகிறாய்?

சாலொமோன் ஞானி மனிதனுடைய மனக்கடினத்தைப் பற்றி சொல்லும் போது அவர் பயமுறுத்தும் உண்மையை வெளிப்படுத்து கிறார்.

நான் கூப்பிட்டும் நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள். நான் என் கைகளை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை. என் ஆலோசனையை நீங்கள் தள்ளி, என் கடிந்து கொள்ளுதலை வெறுத் தீர்கள். ஆகையால், நானும் உங்கள் ஆபத்துக் காலத்தில் நகைத்து, நீங்கள் பயப்படுங்காரியம் வரும் போது ஆகடியம் பண்ணுவேன். நீங்கள் பயப்படுங்காரியம் புசல்போல் வரும் போது ஆபத்து சூறாவளி போல உங்களுக்கு நேரிடும் போதும், நடுக்கமும் இடுக்கணும் உங்கள் மேல் வரும்போது ஆகடியம் பண்ணுவேன். அப்பொழுது அவர்கள் என்னை நோக்கி கூப்பிடுவார்கள், நான் மறு உத்தரவு கொடு க்கமாட்டேன். அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், நான் மறு உத்தரவு கொடுக்கமாட்டேன்; அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள். என்னைக் காணமாட்டார்கள். அவர்கள் அறிவை வெறுத்தார்கள். கர்த்தருக்குப் பயப்படுதலை தெரிந்து கொள் ளாமற்போனார்கள். என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை: என் கடிந்து கொள்ளுதலையெல்லாம் அசட்டை பண்ணினார்கள். ஆகையால், அவர்கள் தங்கள் வழியின் பலனை புசிப்பார்கள்; தங்கள் யோசனைகளினால் திருப்தியடைவார்கள் [நீதிமொழிகள் 1:24-3].

மேலும், சாலொமோன் ராஜா துரோகிகளின் மாறுபாடோ அவர்களைப் பாழாக்கும் என்று நிரூபிக்கிறார் [நீதிமொழிகள் 11:3].

எசாயா தீர்க்கதரிசி கூட மனிதனுடைய கடினமான மனதைப் பற்றி பேசுகிறார். தேவன் களைத்தவர்களை இளைப்பாறப்பண்ணும்படி அழைத்த போதிலும் இஸ்ரவேல் ஜனங்கள் கேட்கமாட்டோம் என்றார்கள் [ஏசாயா 28:12]. தேவன் அவர்களை முரட்டு இருதய முள்ளவர்களே என்று அழைத்தார் [46:12]. அதேபோல் கடினமுள்ளவர் களென்றும் அழைத்தார் [48:4] தேவன் பேசியும் அவர்கள் கேட்கவில்லை. தேவனுடைய பார்வைக்குப் பொல்லாப்பானதை அவர்கள் தொடர்ச்சியாக செய்தார்கள் [ஏசாயா 65:12]

வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், பலருக்கும் இன்று பாவத்தைக் குறித்து வருத்தமோ, துக்கமோ இல்லை [எபிரெயர் 12:17]. ஏசாயாவின் நாட்களில் வாழ்ந்தவர்களைப் போல் [ஏசாயா 6:9-10] இயேசுவின் நாட்களில் வாழ்ந்தவர்களைப்போல் [மத்தேயு 13:14-15] அதாவது காதாரக் கேட்டும் உணராதிருந்தார்கள், கண்ணாரக் கண்டும்

அறியாதிருந்தார்கள், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மக்களைப் பார்த்து தான் நம் ஆண்டவராகிய இயேசு விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாராக; இல்லாவிட்டால் நான் சீக்கரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில் உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன் என்று சொல்கிறார் (வெளி. 2:5).

மனம் வருந்தாத, மனந்திரும்பாதவர்களைப் பார்த்து தேவன் இவ்விதமாகச் சொல்கிறார்! எனக்குப் பயப்படாதிருப்பீர்களோ என்று கர்த்தர் சொல்லுகிறார். அலைகள் மோதியடித்தாலும் மேற்கொள்ளாத படிக்கும், அவைகள் இரைத்தாலும் கடவாதபடிக்கும், கடக்கக் கூடாத நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை எல்லையாய் வைத்திருக்கிறவராகிய எனக்கு முன்பாக அதிராதிருப்பீர்களோ? (எரேமியா 5:22). அல்லது தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு, பொறுமை, நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரித்தை அசட்டை பண்ணுகிறாயோ? உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காக கோபாக்கினையை குவித்துக் கொள்ளுகிறாயோ (ரோமர் 2:4,5). ✝

---

**வேண்டாம் என்று ஒத்தி வைத்தல்**

- வேத வசனங்களை கேட்க ஒத்தி வைத்தல்
- மனமாற்றம் அடையும் வாய்ப்பை ஒத்தி வைத்தல்
- மனமாற்றத்தை தவிர்த்தல்
- இரட்சிப்பின் சிலாக்கியத்தை ஒத்தி வைத்தல்
- ஆனால், இரட்சிப்பிற்குள் வராதவர்களால் நியாயத்தீர்ப்பின் நாளில் நித்திய நரகத்தை ஒத்தி வைக்க முடியாது.

## இரட்சிப்பு

# எல்லா அழைப்புகளையும் விட மேலான அழைப்பு

## The Invitation of all Invitations

Patrick morrison

**எ**ன் நல்ல நண்பரும் சகஊழியருமாயிருக்கிற சகோதரர் Glenn Hitchcock ஒரு நாள் தன்னுடைய முக நூல் பக்கத்தில் ஒரு சுவாரஸ்யமான துணுக்கு செய்தியை பதிவு செய்திருந்தார். அது எல்லோரோடும் பகிரப்படுவதற்கு ஏற்றபடியாக இருந்தபடியால் எல்லோரிடமும் அப்பதிவை பகிர்கிறேன். ஒருமுறை அநேகமாக உலக அறிவில், ஆசாரத்தில் கைத்தேர்ந்த Emliy Post எனும் பெண்மணிக்கு ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். அதில் அவர் ஒரு கேள்வி ஒன்று கேட்டிருந்தார். அக்கேள்வி என்னவென்றால் ஒருவருக்கு வெள்ளை மாளிகைக்கு அழைப்பு அனுப்பப்பட்டு அவருக்கு வேறு ஏதாவது பணி நிறைவேற்ற வேண்டி யிருந்தால் அத்தகைய சூழ்நிலையை அழைக்கப்பட்டவர் எப்படி சமாளிப்பார் என்பதாகும். இதற்கு அந்த Emliy Post என்பவர் வெள்ளை மாளிகைக்கான அழைப்பு தானாகவே மற்ற எல்லா அலுவல் அல்லது பணிகளையும் ரத்து செய்து விடுகிறது என்று பதிலளித்தார். வெள்ளை மாளிகையில் ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் பங்கெடுக்க உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதை சற்று கற்பனை செய்து பாருங்கள். அரசியல் மற்றும் கட்சி பேதங்களைத் தாண்டி அதை அந்த அழைப்பை ஏற்று வெள்ளை மாளிகைக்குப்போக நம் பொறுப்புகளை தள்ளி வைத்து விட்டு, கால அட்டவணையில் சில மாற்றங்களைச் செய்து, நம்மால் என்னென்ன செய்யமுடியுமோ அதை எல்லாம் செய்து வெள்ளை மாளிகை நிகழ்ச்சியில் கலந்து கொள்வோம்.

ஆனால், வெள்ளை மாளிகை அழைப்பை விட நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து வரும் அழைப்பு மகா பெரியது, முக்கியத்துவம் வாய்ந்தது, ஒப்பிட முடியாதது. நாம் காண்கிற எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர், நமக்கு ஆத்துமாக்களைத் தந்தவர், நம்மை போஷிப்பவர், நம் பாவங்களுக்கான பலி, கர்த்தாதி கர்த்தர், ராஜாதி இராஜா இவ்வாழ்க்கைக்குப் பிறகு நம் வாழ்வின் நம்பிக்கை இப்பூமியின் நியாயதிபதி அவருடைய விருந்தில் பங்கெற்கும்படி நமக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் அழைப்பை விட நம் முந்தைய அழைப்புகளை, பொறுப்புகளை, பணிகளை முக்கிய மானதாக, அவசரமானதாக யாரால் கற்பனை செய்து பார்க்க முடியும்? இருந்தபோதிலும், கிறிஸ்துவின் விருந்தில் பங்கெடுக்க மறுத்து எல்லாவித சாக்குபோக்குகளையும் சொல்லும் மக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதற்கு அவர்: ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி, அநேகரை அழைப்பித்தான். விருந்து வேளையில் தன் ஊழியக்காரனை நோக்கி: நீ அழைக்கப்பட்டவர்களிடத்தில் போய், எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, வாருங்கள் என்று சொல்லென்று அவனை அனுப்பினார். அவர்களெல்லாரும் போக்குச் சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன் ஒரு வயலைக் கொண்டேன். நான் அகத்தியமாய்ப் போய் அதைப் பார்க்க வேண்டும். என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்; ஐந்தேர்மாடு கொண்டேன், அதைச் சோதித்துப் பார்க்கப் போகிறேன். என்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன் பெண்ணை விவாகம் பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது என்றான். அந்த ஊழியக்காரன் வந்து இவைகளைத் தன் எஜமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்டெஜமான் கோபமடைந்து தன் ஊழியக்காரனை நோக்கி: நீ பட்டணத்தின் தெருக்களிலும், வீதிகளிலும் சீக்கிரமாய் போய், எழைகளையும், ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும், இங்கே கூட்டிக் கொண்டு வா என்றான். ஊழியக்காரன் அப்படியே செய்து: ஆண்டவரே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று, இன்னும் இடம் இருக்கிறது என்றான். அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நீ பெருவழிகளிலும், வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்கள் உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக் கொண்டுவா; அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசி பார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லு கிறேன் என்றான் என்று சொன்னார் [லூக்கா 14;16-24].

இயேசு கிறிஸ்துவின் அழைப்புக்கு துரித கவனம் அவசிய மாகிறது. அவர் எல்லாருக்காகவும் ஆயத்தமாக்கியிருக்கிற விருந்தில் பங்கெடுக்க நேரத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பரலோக அழைப்புக்கு பதிலளிப்பதை விட முக்கியமான வேலையோ அல்லது அவசரமான வேலையோ இவ்வுலகத்தில் இல்லை. பணப்பசியும், பொருளாசையும் பலருடைய ஆத்துமாக்களை கவர்ந்து விட்ட படியால் அவர்கள் அந்த அழைப்பை ஏற்று இயேசுவோடு மேஜையில் அமர்ந்து போஜனம் பண்ண மறுக்கிறார்கள். அந்த அழைப்பை தட்டிக் கழிக்கிறார்கள். வேறு சிலர் கிறிஸ்துவின் அழைப்பை முக்கியமான ஒன்றாக கருதுவார்கள். ஆனால், அதன் பெயரில் உடனடியாக செயல்படமாட்டார்கள். சிலர், இயேசு கிறிஸ்துவின் அழைப்பை ஏற்றுக் கொண்டு அதைவிட சிறப்பான அல்லது மேலான அழைப்புக்காக காத்துக் கொண்டிருப்பார்கள். இன்னும் சிலர் அந்த அழைப்புக்கு எப்போது வேண்டுமானாலும் பதிலளிக்கலாம், விருந்து எப்பொழுதுமே ஆயத்தமாயிருக்கும். எப்பொழுது வேண்டுமானாலும் அதில் கலந்துகொள்ளலாம் என்று எண்ணுகிறார்கள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவால் ஆயத்தமாக்கப் பட்டிருக்கிற இந்த மாபெரும் விருந்தில் பங்கெடுக்க் முடியாதபடி வாய்ப்பின் கதவு மூடப்படும் நேரம் வரும். இது கிறிஸ்துவோடு மேஜையில் அமர்ந்து போஜம்பண்ணும் வாய்ப்பை மட்டும் இழந்து போவதோடு நின்று நம்மை விருந்துக்கு அழைத்த கிறிஸ்து விடமிருந்து பிரிந்து நித்திய நித்தியமாக நகரத்திலே நாட்களை கழிப்பது என்று தான் பொருள்படும். உங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அழைப்பை உங்களுக்காக யாரும் ஏற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ முடியாது. மறுபடியும் ஒரு வாய்ப்பு இல்லை என்பதால் இந்த அழைப்புக்கு நீங்கள் உடனடியாக பதிலளிக்க வேண்டுமென்று உங்களை வேண்டிக் கொள்கிறேன். ✝

---

*நாம் நித்தியத்தை இழந்து போவதற்கான காரணங்கள்*

- *அவரவர் வரவுக்கத்தக்கதாக கொடுக்காமல் இருப்பதினால் (I கொரிந்தியர் 10:2)*
- *தேவனுடைய ஆலோசனைகள் எல்லாவற்றையும் அறிவிக்காமல் இருப்பதினால் (அப்போஸ்தலர் 20:26)*
- *ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற விசுவாசித்திற்காக தைரியமாகப் போராடாமல் இருப்பதினால் (யூதா 3)*
- *இடைவிடாமல் ஜெபிப்பதைத் தவிர்ப்பதினால் (I தெசலோனிக்கேயர் 5:17)*
- *வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்காததினால் ( அப்போஸ்தலர் 17:11)*
- *சபை கூடிவருவதை விட்டுவிடுவதினால் (எபிரெயர் 10:25)*

### வசன ஆராய்ச்சி

# I கொரிந்தியர் 9:9-27

Jerry Bates

- பவுல் தன்னைத்தானே எல்லோருக்கும்.............(வசனம் 19).
- எதற்காக பவுல் தன்னை எல்லோருக்கும் அடிமையாக்கிக் கொண்டார்? வசனம் 19).
- யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு யூதருக்கு..............
- நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு .........கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன் (வசனம்20).
- பவுல் ஒட்டுமொத்தமாக நியாயப்பிரமாணம் இல்லாதவரைப் போலாகிவிட்டாரா? (வசனம் 21).
- பவுல் எந்த பிரமாணத்தின் கீழ் உள்ளவராக இருந்தார்? (வசனம் 21)
- பவுல் எதற்காக நான் எல்லாருக்கும் எல்லாமானேன் என்று சொன்னார்? (வசனம் 22)
- பவுல் எதில் தான் உடன் பங்காளியாகும்படிக்கு அப்படிச் செய்தார்? (வசனம் 23).
- பந்தய சாலையில் எத்தனை பேர் பரிசைப் பெறுவார்கள் ? (வசனம் 24).
- பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும்.........ஏன்? (வசனம்25).
- நாம் தேடும் கிரீடத்திற்கும் பந்தயசாலையில் பங்கேற்றவர்கள் தேடும் கிரீடத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? (வசனம் 25)
- நாம் எப்படி ஓட வேண்டும் என்று பவுல் சொல்கிறார்? (வசனம் 26)
- பவுல் தன் சரீரத்திற்கு என்னச் செய்தார்? (வசனம் 27)
- பவுல் தான் மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணினாலும் கூட தான் ஆகாதவனாய் போவதற்கு வாய்ப்பு உண்டு என்று சொல்கிறார் இது சரியா அல்லது தவறா? (வசனம் 27).

# தனித்துவம் வாய்ந்த ஊழியம்

## A Unique Mission

**Bob Planket**

**யா**ரோ ஒருவர் மகா அலெக்சாண்டர் உலகத்தை வெல்ல சென்றார். சீசர் தன் எதிரிகளை அடக்கி ஆளச்சென்றார். சாக்ரடீஸ் மற்றும் பிளோடே ஆகிய இருவரும் அறிவைத் தேடி சென்றார்கள். கொலம்பஸ் புதிய உலகத்தை கண்டுபிடிக்கச் சென்றார். ஸ்டேன்லி ஆப்பிரிக்காவை ஆராய்ச்சி செய்ய சென்றார். போர் வீரர்கள் எதிரிகளை முற்றிலுமாக தோற்கடிக்க போயிருக்கிறார்கள். அவர்களுடைய பாதையில் அதிசயங்களை காணும்படியாகவும், கலை நினைவுச் சின்னங்களை காணும்படியாகவும் பல பயணங்களும், ஆராய்ச்சி களும் மேற்கொள்ளப்படுகின்றன. தாராளப்பிரபுகள், துயரத்தில் இருப்பவர்களும் சிறு பயணங்களை மேற்கொள்கிறார்கள்.

மனிதர்கள் சந்திரனுக்கும், வெகுதூர விண்வெளிக்கும் சென்று ஆராய்ச்சி செய்கிறார்கள். மனிதர்கள் நடுக்கடலில் எண்ணெய் கண்டுபிடித்தார்கள். இப்போது மனித மரபணு ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

மேற்சொல்லப்பட்ட ஆராய்ச்சிகள் எல்லாம் அரங்கேறினாலும் கூட மனித இனத்தின் முக்கியமான தேடல் ஒரே வரியில் இடம் பெற்றிருக்கிறது. இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் கிறிஸ்து வந்தார். [ லூக்கா 19:10]. அவர் இவ்வுலகத்தைத் மேற்கொள்ள வரவில்லை, உலகத்தை இரட்சிக்க வந்தார். அவர் அறிவைத் தேடிவரவில்லை. ஆனால் அதை கொடுக்க வந்தார். அவர் புதிய உலகத்தைத் தேடும்படி வரவில்லை. ஆனால், புதிய ஜீவனை தரும்படி வந்தார். அவர் இராணுவத்தை முற்றிலுமாக தோற்கடிக்க வரவில்லை. மாறாக, அவைகளைக் கலைத்துவிட வந்தார். அவர் பொக்கிஷங்களைத் தேடி வரவில்லை. நம்முடையதை எங்கே முதலீடு செய்ய வேண்டுமென்று சொல்லும்படி வந்தார். அவர் இவ்வுலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க வரவில்லை. ஆனால், உலகத்தை இரட்சிக்கும்படி வந்தார். அவர் இவ்வுலகத்தை அழிக்கும் படி வரவில்லை. ஆனால், இவ்வுலகத்தில் அவருடைய சபையைக் கட்டும்படி வந்தார்.

இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சபையின் பணி என்னவா யிருக்க வேண்டும்? இழந்து போனதைத் தேடவும் இரட்சிப்பதுமாகத் தானே இருக்க வேண்டும்? நம்முடைய ஊழியம் உலகத்தோடு கிறி ஸ்துவை ஒப்புரவாக்குவதாக இருக்கக் கூடாது. மாறாக, உலகத்தை

கிறிஸ்துவோடு ஒப்புரவாக்குவதாக இருக்க வேண்டும். நம்முடைய ஊழியம் வெறுமனே அறிவை பெருக்கிக் கொள்கிறதாக இருக்கக் கூடாது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கிறதாக இருக்க வேண்டம். சபையானது கிறிஸ்துவைப் போல் பசித்தோர்க்கு உணவளிக்க வேண்டும். வியாதியஸ்தரை சுகப்படுத்த வேண்டும், விதவைகளையும், அனாதைகளையும் பராமரிக்க வேண்டும். இழந்து போனவர்களை இரட்சிக்கும் விதமாக நாம் இப்படிச் செய்ய வேண்டும். பெரும்பாலான நேரங்களில் சபை இது போன்ற சமூக செயல் திட்டங்களில் ஈடுபட்டு, அதன் வளர்ச்சி தடைபடுகிறது. அதாவது, ஆத்துமாக்களுக்கு நல்ல ஆகாரமும், உடையும் கொடுக்கப்படுகிறது. ஆனால், அவர்கள் இழந்து போகிறார்கள். சபையானது உலகத்தின் ஆவிக்குரிய தேவைகளை குறித்து அக்கறைப்பட வில்லையென்றால் வேறே யார் அக்கறைப்படுவார்? அவருடைய பணியே நம்முடைய பணி. அதாவது, இழந்து போனதைத் தேடுவதும் இரட்சிப்பதும். ✝

---

## பெருமையின் அபாயம்

- ❀ *பெருமை ஜனங்களை கொடூரமான காரியங்களை செய்ய வைக்கிறது (எஸ்தர் 3,5,6)*
- ❀ *பெருமை ஒருவருடைய வெற்றியைக் குறித்து தவறான மதிப்பீட்டுக்குள் வழி நடக்கிறது (உபாகமம் 8,11,14)*
- ❀ *பெருமை அழிவைக் கொண்டு வருகிறது ( எஸ்தர் 6:11, நீதிமொழிகள் 16:18)*
- ❀ *பெருமை ஒருவர் தன்னுடைய சாதனைகளைக் குறித்து தம்பட்டம் அடிக்க வைக்கிறது ( தானியேல் 4:30)*
- ❀ *பெருமை பழிவாங்குதலுக்கு வழிவகுக்கிறது (யாத்திராகமம் 14:5)*
- ❀ *பெருமை உலகத்தன்மைக்கு வழிவகுக்கிறது ( I சாமுவேல் 8:19,20)*
- ❀ *பெருமை ஒருவர் ஐசுவரியத்தில் நம்பிக்கை வைக்க காரணமாகிறது (எசேக்கியேல் 28:4,5)*

# ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனும்
# One Flock and One Shepherd

**Cliff Holmes**

இந்த தொழுவத்திலுள்ளவைகளையல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். அவைகள் என் சத்தத்துக்கு செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாகும் (யோவான் 10:16). இவ்வசனத்தில் நான்கு சிறப்பான கருத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன.

## தொழுவத்தில் இல்லாத வேறே ஆடுகள்.

நல்ல மேய்ப்பனாகிய இயேசு கிறிஸ்துவின் மந்தையில் யார் ஆடுகளாயிருந்தார்கள்? அவருடைய சீஷர்கள், அப்போஸ்தலர்கள், பாவம், துக்கம், பாடுகள் மற்றும் உபத்திரவங்களிலிருந்து விடுதலையைத் தேடி கிறிஸ்துவிடம் வந்தவர்கள். மந்தைக்குள் வர இன்னும் அநேகருக்கு அவசியம் இருந்து. பெந்தேகொஸ்தே நாளிலே பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட பல தேசங்களைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் மந்தைக்குள் கொண்டுவரப்பட வேண்டும். இன்று உலகெங்கும் 34,000 மார்க்கப் பிரிவினைக் கூட்டங்களும், பிரிவு களும் உள்ளன. அப்பிரிவுகள் எல்லாமே தங்களுக்கு ஏதோ விதமான தொடர்பு இருப்பதாக சொல்லிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் 35 லட்சம் சபைகளை உருவாக்கியிருக்கிறார்கள். இம்மதப்பிரிவினைகள் தந்திரமான, துன்மார்க்கமான போதனைகளை போதிக்கிறார்கள். அவைகளை கிறிஸ்து ஒரு போதும் அங்கீகரிக்கமாட்டார். லட்சக் கணக்கான மக்கள் பொய்யான தெய்வங்களை வணங்குகிறார்கள். சாத்தானை கூட வணங்குகிறார்கள். இவர்களைப் பார்த்து இயேசு கிறிஸ்து இவர்களையும் நான் மந்தைக்குள் கொண்டு வர வேண்டு மென்று சொல்வாரா?

## நான் அவைகளையும் கொண்டு வர வேண்டும்

இயேசு கிறிஸ்து யாரைப் பார்த்து வேண்டுமானாலும் நான் இவர் களையும் மந்தைக்குள் கொண்டு வர வேண்டும் என்று சொல்வாரா? ஆம், சொல்வார். ஏனெனில், எல்லா மனுஷரும் மனந்திரும்பி, தங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டுமென்பது அவருடைய சித்தமாயிருக்கிறது. அவர்களெல்லாரும் இயேசுவின் சத்தத்திற்கு செவி கொடுத்தால் இது சாத்தியமே. அவரைக் குறித்து கேள்விப் படாதவர்கள் எப்படி விசு வாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லா விட்டால், எப்படி கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படா விட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள் ? (ரோமர் 10:14,15).

## அவைகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கும்

யாராவது அந்தக் குரலாக இருக்க வேண்டும். வரையறுக்கப்பட்ட கட்டளையில் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள் என்று சீஷர்களை இயேசு அனுப்பினார். அவர்கள் போய் போதித்து, பல அற்புத அடையாளங்களைச் செய்து ( மேய்ப்பனின் குரல்களாக) இருந்தார்கள். பலர் அதைக் கேட்டு மனந்திரும்பினார்கள். பின்பு, கிறிஸ்து பிரதானக் கட்டளையை அவருடைய சீஷர்களுக்கும் நமக்கும் தந்து உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கட்டளை யிட்டார் ( மாற்கு 16;15) நாமும் கூட அவருடைய சத்தத்திற்குச் செவி கொடுக்கும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். இது கர்த்தருடைய வேண்டுகோள் அல்ல, இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் பொருத்தக் கூடிய கட்டளையாகும்.

## ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பரும்

நாம் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளும் போது, அப்பணியைச் செய்வது, நன்றாகச் செய்வது நம்மேல் விழுந்த கடமையாகிறது. கிறிஸ்து கொடுத்த பணியை நாம் செய்து முடித்த பிறகு நாமெல்லாரும் ஒரே மந்தையாயிருப்போம். நம்மெல்லோருக்கும் ஒரே மேய்ப்பனாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இருப்பார். ✝

---

## கிறிஸ்தவர்கள்

- கிறிஸ்தவர் என்னும் பெயர் கிறிஸ்துவைத் தழுவி வருவதால் நாமெல்லாரும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாயிருக்கிறோம் ( II யோவான் 2:20).
- கிறிஸ்தவர் என்னும் பெயர் நன்மையானதும் நம்மை மற்றவர் களிடமிருந்து வித்தியாசப்படுத்துகி பெயராகவும் இருக்கிறது. ( II கொரிந்தியர் 7:1)
- கிறிஸ்தவர் என்னும் பெயர் அதை தரித்திருக்கிறவர் கிறிஸ்துவின் உடமை என்பதை மற்றவர்களுக்கு சுட்டிக் காட்டுகிறது (I கொரிந்தியர் 6:19,20) முதன் முதலில் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று (அப்போஸ்தலர் 11:26)

# சாஸ்திரிகள் (ஞானிகள்) இயேசுவை தேடி வந்தார்கள்

## Wise Men Came Seeking Jesus

Sunny David

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயா விலுள்ள பெதலகேமிலே இயேசு பிறந்த பொழுது கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து; யூதருக்கு ராஜாவாகப் பிறந்தி ருக்கிறவர் எங்கே? கிழக்கில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்'' (மத்தேயு 2:1–2). பெத்லகேமிலே இயேசுவின் பிறப்பு வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் அவர் பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பாக உரைக்கப்பட்ட தீர்க்க தரிசனங்களின் நிறைவேறுதலா யிருக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாகவே பிறப்பைப் பற்றி மீகா தீர்க்கதரிசனம் உரைத்தார். எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என் னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது (மீகா 5:2). தேவனுடைய மற்றுமொரு தீர்க்கதரிசியாகிய ஏசாயா இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி அதற்கு ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இயேசு என்று பேரிடுவாய் என்பதற்கு இம்மானுவேல் அதாவது தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இப்பூமியில் தேவனுடைய குமாரன் எனும் மாபெரும் அந்தஸ்த்தை விட்டுக் கொடுத்து மனுஷ குமாரனாக பிறக்கப்போகும் பிறப்பைப் பற்றி முன்னுரைத்தார்.

பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களெல்லாம் ஆரம்பத்திலே எபிரேய மொழியில் தான் எழுதப்பட்டது. பின்பு கி.மு 250ல் கிரேக்க மொழில் மொழிபெயர்க்கப்பட்டது. இயேசுவைப் பணிந்து கொள்ள வந்த சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து வந்ததாக நாம் பார்க்கிறோம். கிழக்கு தேசம் என்பது அநேகமாக அரேபியாவாக இருக்கலாம் (ஆதியாகமம் 25:6). இயேசுவைப் பணிந்து கொள்ள வந்த சாஸ்திரிகள் மேதைகளாக, தத்துவ ஞானிகளாக, வானசாஸ்திரம் தெரிந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். கிரேக்க வேதாகமம் இவர்களை கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக பாரசீக நாட்டின் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர்களாக விவரிக்கிறது. அவர்கள் கொண்டு வந்த வெகுமதிகளான பொன், தூபவர்க்கம், வெள்ளைப் போளம் போன்றவைகள் பாரசீக நாட்டைச் சேர்ந்தவைகளாகும். இந்த சாஸ்திரிகள் தங்கள் நாட்டில் இருந்த போது அவர்கள்

முன்னெப்போதும் பார்த்திராத நட்சத்திரத்தைக் கண்டார்கள். யூதேயா தேசத்தில் அசாதாரணமான நபர் ஒருவர் பிறந்திருக்கிறார் என்பதற்கு அடையாளமாக இருந்தது. அந்த நட்சத்திரம் பார்ப்பதற்கு சாதாரண நட்சத்திரம் போல் இல்லாமல் வால் நட்சத்திரம் அல்லது விண்கல் போன்று காட்சி அளித்தது. அன்றாடம் காணும் நட்சத்திரத்தைவிட முற்றிலும் வித்தியாசப்பட்டு காணப்பட்டபடியால் அசாதாரணமான, விசேஷமான ஒன்று நடக்கவிருக்கிறது என்பதில் அவர்கள் நம்பிக்கையாயிருந்தார்கள்.

பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை அவர்கள் படித்ததின் அடிப்படையில் ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும். ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும். (எண்ணாகமம் 24:17) எனும் வசனம் கிறிஸ்து பிறப்பைப் பற்றிய தீர்க்கதரிசனம் என்பதை புரிந்து கொண்டு தாங்கள் வேத வாக்கியங்களில் வாசிக்கின்ற யூதர்களின் ராஜாவாகிய இம்மானுவேல் யூதேயாவில் பிறந்திருக்கிறார் என்ற முடிவுக்கு வந்தார்கள். ஆகவே, அவர்கள் யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிற குழந்தையை சந்திக்க பிரயாணப்பட்டார்கள். இந்த சாஸ்திரிகள் எத்தனை பேர் என்பதைப் பற்றி நமக்கு தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், இயேசுவைப் பணிந்து கொண்ட போது மூன்று வெகுமதிகள் இந்த சாஸ்திரிகளால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்து பலர் மூவர் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். இந்த சாஸ்திரிகள் நிச்சயமாகவே ஞானிகளாகத்தான் இருந்திருக்கிறார்கள். ஏனென்றால், இவர்கள் வானில் விசேஷத்த நட்சத்திரத்தை பார்த்த உடனேயே நேரத்தை விரயம் செய்யாமல் புதிதாய் பிறந்திருக்கிற ராஜாவைக் காணும்படி பயணப்பட்டார்கள். மிருகங்கள் மீது அமர்ந்து கரடுமுரடான பாதைகள் வழியாக மலைப்பாங்கான இடங்களைத் தாண்டி நீண்ட தூரம் பயணித்திருக்கிறார்கள். ஆனால், அவர்களை எதுவுமே சோர்வடையச் செய்யவில்லை. அவர்கள் அப்படியே அந்த நட்சத்திரத்தைப் பின் தொடர்ந்து பயணம் செய்தார்கள். அந்த நட்சத்திரம் அவர்களை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்தியது அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது (மத்தேயு 2:9).

இன்றும் கூட இயேசுவைக் கண்டடைவதற்கும், மனிதர்கள் செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்த அவருடைய போதனைகளை அறிந்து கொள்வதற்குமான ஞானமான வழி புதிய ஏற்பாட்டுக்கு நேரடியாகச் சென்று கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்பது தான். மலைப்பிரசங்கத்தில் இயேசு இவ்விதமாக போதித்திருக்கிறார்: ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.

பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை; ஏனென்றால், அது கன் மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிற வன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில் லாத மனுஷனுக்கு ஒப்பிடுவான். பெருமழை சொரிந்து, பெரு வெள் ளம் வந்து, காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதின போது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார் (மத்தேயு 7:24–27).

ஒருவன் ஞானவானயிருப்பதற்கு கிறிஸ்துவைப் பற்றி கேள்விப் படுவதோ, அறிந்து கொள்வதோ போதுமானதல்ல. அவர் போதிக்கிற வைகளின்படி செய்கிறவர்களாயிருக்க வேண்டும். இங்கே மழை, வெள்ளம், பெருங்காற்று போன்றவைகள் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு நாளை விவரிக்கும் விதத்தில் உருவக நடையில் பயன்படுத்தப்பட்டி ருக்கிறது (யோவான் 12:48). கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய போதனைகள் பற்றியும் கற்றுக் கொள்பவர்கள் நிச்சயமாகவே ஞானவான்கள்.

இந்த சாஸ்திரிகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளும் மற்றுமெரு குறிப்பிடத்தக்க காரியம் என்னவென்றால், அவர்கள் கிழக்கில் கண்ட நட்சத்திரம் பிள்ளையாகிய இயேசு இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நின்ற உடனேயே, அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளை யையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு சாஷ்டாங்கமாய் விழுந்து குழந்தை இயேசுவைப் பணிந்து கொண்டார்கள் (மத்தேயு 2:11), இங்கே சாஸ்திரிகள் மரியாளை பணிந்து கொள்ளவில்லை என்பதை கவனிக்க வேண்டும்.

இந்த ஞானிகள் மரியாள் என்னும் சிறந்த பெண்மணியை தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை ஈன்றெடுப்பதற்கு பயன் படுத்தினார் என்பதை இவர்கள் அறிந்திருந்தார்கள் (மத்தேயு 1:18–25). எனவே தான், இந்த சாஸ்திரிகள் தேவனுடைய குமாரனாகிய இயேசுவைப் பணிந்துகொண்டு, அவர்கள் கொண்டு வந்த பொக்கி ஷங்களைத் திறந்து காணிக்கையாக வைத்தார்கள் அப்போஸ் தலனாகிய பவுல் எபேசியர் 5:15– 17–ல் இவ்விதமாய்ச் சொல்கிறார்.

ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்.

இன்றைய நாட்களில் ஞானமுள்ள ஆண்களும், பெண்களும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக சாஸ்திரிகளாகிய இந்த ஞானிகள் எப்படி இயேசுவைத் தேடினார்களோ அப்படியே தேடுகிறார்கள்.

## செயலில் கிறிஸ்தவம்

# அவருடைய கட்டளையே நமது பணி

# His Commission is Our Mission

**Darrell Surrette**

**நா**ன் என் வாழ்க்கையில் 22 வருடங்களை ராணுவத்தில் செலவழித்திருக்கிறேன். அந்த 22 வருடங்களில் பெரும்பாலான நேரங்கள் வீரர்களை பணியில் அமர்த்துவதிலும் நான் தனிப்பட்ட முறையில் பணிக்கு அமர்த்தப்படுவதிலும் கழிந்தது. அந்நாட்கள் ஒரு குறிப்பிட்ட பணிக்காக வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவதை நினைவுபடுத்துகிறது. அதுமட்டுமல்லாமல் எப்படி அப்பணிக்கு முதன்மைத்தவம் அல்லது முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டும் என்பதையும் நினைவுபடுத்துகிறது. சூழ்நிலைகளின் அடிப்படையில் அப்பணிகள் எல்லாம் மாறிவிட்டன. அதே போல் சபைக்குள்ளே, நமக்கு மிகப்பெரிய பணி இருக்கிறது. உலகப் பிரகாரமான பணிகளுக்கும் சபையில் கொடுக்கப்பட்டிருக்கும் பணிக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால் வருடந்தோறும் அல்லது நூற்றாண்டு தோறும் கூட மாறவில்லை. அது அப்பணியை நிறைவேற்ற எளிதாயிருக்கும். அப்படித்தானே?

புதிய ஏற்பாட்டுக்குள்ளேயே மத்தேயு, மாற்கு, லூக்கா போன்றோர் இப்பிரதான கட்டளையைக் குறித்து விவரிக்கிறார்கள் [ மத்தேயு 28:18 20]; மாற்கு 10:14-20; லூக்கா 24:46,47]. அதிலும் குறிப்பாக, மத்தேயு, இப்பிரதான கட்டளையை குறித்து எப்படி விவரித்திருக்கிறார் என்று பாருங்கள். அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா , குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும் படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

நம்முடைய பணி அல்லது ஊழியம் உலகெங்கும் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, பிரதான கட்டளை எனும் அடைமொழியை சபையில் சம்பாதித்து வைக்கிறது. இப்பிரதான கட்டளை நமக்குப் பெரிதாக இருந்தால், நாம் ஆராதனைக்காக கூடும் இடங்களிலே அது ஏன் பேசும் பொருளாக பெரும்பாலும்

இருப்பதில்லை? நாம் இப்பிரதான கட்டளையைக் குறித்து பேச அதிக நேரத்தை செலவழிக்க முடியும் [ எவ்வித சந்தேகமுமின்றி இதற்காக அதிக நேரத்தைக் செலவழிப்பது விண் போகாது]; உண்மையில் இப்பிரதான கட்டளையை குறித்து நாம் பிரசங்க பீடத்திற்கு பின்னால் இருந்து நாம் அதிகமாக பேசுவதால், தனிப்பட்ட முறையிலும் அதிகமாக இது விவாதிக்கப்பட வேண்டும். 19 ஆம் வசனத்தில் இடம் பெற்றுள்ள நீங்கள் புறபட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி எனும் வாக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாம் 20 ஆம் வசனத்தின் காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இங்கே 18-20 வசனங்களில் வலியுறுத்தின முதல் கருத்தைக் கவனியுங்கள். சகல அதிகாரமும் எனக்குத் கொடுக்கப் பட்டிருக்கிறது. இங்கே இயேசு நான் சொல்லப் போகிற காரியம் மதிப்பு மிக்க தாயிருக்கிறபடியால் அதைக் கவனியுங்கள் என்று செல்வது ஆழமாக சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும். நம்முடைய முதலாளி அல்லது உயர் அதிகாரி போன்றோரின் கட்டளைகளை நாம் லேசாக எடுத்துக் கொண்டால் நம் வேலையில் அதிக நாட்கள் இருக்க முடியாது. அப்படியென்றால், பிரதான கட்டளை ஏன் அதிகமாக வலியுறுத்தப் படுவதில்லை. இன்றைய நாட்களில் பிரதான கட்டளைகயைப் பற்றிய செய்தி பிரசங்க மேடைகளில் மாத்திரமே ஒலிக்கிறது. ஆனால், அது பிரசங்க மேடையோடு நின்றுவிடும்படியாகக் கொடுக்கப்படவில்லை! போங்கள் என்று சொன்னால் உண்மையாகவே போக வேண்டும்.

நான் ஒவ்வொரு பணிக்காக அழைக்கப்படும்போதும் கற்றுக் கொண்ட காரியம் என்னவென்றால் ஒரு பணியை ஒன்றிலே நாம் செய்து முடிப்போம் அல்லது செய்யத் தவறுவோம். அவ்வளவு தான் இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை என்று எதுவுமில்லை. நாம் நமது பணியை செய்யத் தவறும் போது அதன் விளைவுகள் கடுமையாகத் தான் இருக்கும். நம்முடைய தளபதியின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிற காரியத்தில் நாம் எந்நிலையில் இருக்கிறோம்? இக் கேள்வியாரையும் குற்றப்படுத்தும்படியாக கேட்கப்படவில்லை. இது செயல்படும்படியாக நம்மைத் தட்டி எழுப்பும்படியான கேள்வியாகும்.

பொதுவாக, சில தலைவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பணி இலக்காக ஒதுக்கப்படும் போது அதை செய்து முடிக்கும் தலைவர்கள் மீது நமக்கு எப்போதுமே ஒரு ஈர்ப்பு இருக்கும். அவர்களிடத்தில் நமக்கு எப்போதுமே ஒரு மரியாதையும் இருக்கும். புறப்பட்டுப் போங்கள் என்ற கட்டளைக்கு கீழ்ப்படியும் தலைவர்கள் சபையில் எங்கே?

நமக்குப் பரலோகத்தை விட்டுவிட்டு பூமிக்கு சுவிசேஷத்தைக் கொண்டு வரும்படியாக வந்த நம் தலைவராகிய இரட்சகர் ஒரு வழியைக் காட்டியிருக்கிறார். அவருடைய கட்டளை தான் நம் பணியாக இருக்க வேண்டும். நமக்கு இலக்காக கொடுக்கப்பட்ட பணியைச் செய்து முடிப்பதில் நம் தளபதி முற்றிலும் வெற்றி பெற்றிருக்கிறபடியால், அவருடைய பணியை நிறைவேற்றிடுவோம். கிறிஸ்துவே உங்களையும், என்னையும் இரட்சிக்கிறபடியால் நாம் நம் குடும்ப அங்கத்தினர்களிடமும், நண்பர்களிடமும், உடன் வேலை செய்பவர்களிடமும், கர்த்தருடைய சபை இல்லாத இடங்களிடமும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல வேண்டும். நாம் பிரதான கட்டளையை நிறைவேற்றும் விதமாக புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்க வேண்டும். ✝

---

**கிறிஸ்தவத்தை எப்படி வெளிப்படுத்துவது?**

| | | |
|---|---|---|
| **குடும்பத்தில்** | – | **அன்பாலும், தன்னலமற்ற தன்மையாலும்** |
| **வியாபாரத்தில்** | – | **நேர்மையினாலும், கவனத்தினாலும்** |
| **சமுதாயத்தில்** | – | **தயவாலும், தாழ்மையினாலும்** |
| **பாதிக்கப்பட்டவர்களிடத்தில்** | – | **கருணையினாலும், இரக்கத்தினாலும்** |
| **பெலவீனர்களிடத்தில்** | – | **பொறுமையினாலும், உதவியினாலும்** |
| **துன்மார்க்கரிடத்தில்** | – | **நிதானத்தினாலும், தீமையை வெல்வதினாலும்** |
| **தேவனிடத்தில்** | – | **அன்பாலும், கீழ்ப்படிதலினாலும்.** |

## செயலில் கிறிஸ்தவம்

# அரசாங்கமும், கிறிஸ்தவனும்: சபை மற்றும் கலாச்சாரத்தின் கண்ணோட்டம்

Goverment And The Christian A Perspective of Church Culture

Steve Higginbotham

வீதிகளில் வாழும் வீடில்லா ஒரு மனிதனை சற்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்த மனிதனிடம் தேவைக்கு அதிகமான பணம் இல்லை, தன்னிடமிருந்த கொஞ்ச பணத்தை வைத்துக் கொண்டு சமாளித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் வீதியில் இருக்கும் இந்த மனிதனின் இழிநிலையைப் பார்த்து ஒருவன் சகல வசதிகளுடன் ஒரு வீட்டை இந்த மனிதனுக்கு இலவசமாகக் கொடுத்து இரக்கம் காட்டினான். அதன் காரணமாக, இதற்கு முன்பு வீடில்லாமல் இருந்த மனிதன் சகல சௌகரியங்களுடன் வாழ ஆரம்பைத்தான்.

இருந்த போதிலும், காலப்போக்கில் அந்த தனவானுக்கு உதாரத்துவம் சம்மந்தமாக அவனுடைய மனதில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. அந்த வீடில்லா மனிதனிடத்தில் தனவான் காட்டிய தயவைக் குறித்து அவன் மறுபடியும் சிந்திக்கத் தொடங்கினான். ஒரு வேளை சூழ்நிலைகள் அதற்கு காரணமாக அமைந்திருக்கலாம். தனவானுடைய மனமாற்றத்தின் அடையாளமாக, முதலில் குளிரூட்டியை அகற்றினான். சில மாதங்களுக்குப் பிறகு தண்ணீர் இணைப்பை துண்டித்தான். கடைசியாக, மின் இணைப்பைத் துண்டித்தான். வீடில்லா மனிதனிடமிருந்து பழைய சௌகரியங்கள் எல்லாம் பறிக்கப்பட்டாலும் கூட, தொடர்ந்து அவ்வீட்டில் வசிக்கும் படியாக அனுமதிக்கப்பட்டான்.

இப்போது, என்னுடைய கேள்வி இதோ : இந்த வீடில்லா மனிதனுடைய மனநிலை எப்படியாக இருக்க வேண்டும்? தன்னிட மிருந்து வசதிகள் பறிக்கப்பட்டதைக் குறித்து கொதித்தெழ வேண்டுமா? அல்லது ஒரு குறிப்பட்ட காலத்திற்கு சகல வசதிகளை யும் அனுபவிக்க தனக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புக்காக நன்றியாய் இருக்க வேண்டுமா?

இந்த வீடில்லா மனிதனுக்கு சிலகாலம் தான் அனுபவித்த சௌகரியங்கள் தன்னிடமிருந்து பறிக்கப்பட்டதைக் குறித்து துக்கப் படுவதற்கு எல்லா உரிமையும் உண்டு. ஆனால், அதே நேரத்தில் இவன் தான் பெற்று அனுபவித்த ஆசீர்வாதங்களை ஒரு போதும் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால், அவன் அனுபவித்தவைகளில்

எதுவும் அவனுடையதாயிருக்கவில்லை. அவைகள் அவனுக்கு ஈவாக கொடுக்கப்பட்டன. அதற்காக அவன் நன்றியுள்ளவனாயிருக்க வேண்டும்.

ஒட்டு மொத்த வரலாற்றையும் புரட்டிப்பார்த்தால், அரசாங்கத்தின் தயவு கிறிஸ்தவத்திற்கு அரிதாகவே கிடைத்திருக்கிறது. கிறிஸ்தவம் பல இன்னல்களையும், உபத்திரவங்களையும் சகித்து நிலைத்திருக்கிறது. அரசாங்கம் கிறிஸ்தவத்தின் மீது தயவு காட்டி, அதற்கு ஓர் அந்தஸ்தையும் கொடுத்த காலக்கட்டங்களிலும் நாம் வாழ்ந்தோம். ஆனால், இப்போது காலங்கள் மாறிவருகிறது. பெரும்பாலான ஆசீர்வாதங்கள் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டன. நாம் அனுபவித்த பல சிலாக்கியங்கள் நம்மிடமிருந்து அகற்றப்பட்டு விட்டன. மனநிலை எப்படியாக இருக்க வேண்டும்? இக்கேள்விக்கான பதிலும், முதல் கேள்விக்கான பதிலும் ஒன்று என்று நான் நினைக்கிறேன்.

நண்பர்களே, கிறிஸ்தவம் நிலைத்திருக்கவும், செழித்திருக்கவும் அரசாங்க தயவு ஒன்றும் அவசியமில்லை. நாம் அனுபவித்த ஆசீர்வாதங்களும், நம் பெற்றோர் அனுபவித்த ஆசீர்வாதங்களும் நாளை நம்மிடமிருந்து எடுக்கப்பட்டு போகலாம். அப்படி ஒரு வேளை எடுக்கப்பட்டால் அது நம் துக்கத்திற்கான காரணமாக அமையலாம், ஆனால், நம்பிக்கையற்ற நிலைக்கான காரணமாயிருக்கக்கூடாது! உண்மையில், நம் ஆவிக்குரிய சோம்பலைப் போக்கி, தேவன் மற்றும் அவருடைய செயல்திட்டம் மீதான நம் வைராக்கியத்தையும் அர்ப்பணிப்பையும் தட்டி எழுப்ப மாபெரும் வைத்தியரால் ஆணையிடப்பட்ட அருமருந்துதான் உபத்திரவம் என்பதை தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த மருந்து இனிப்பானதல்ல, கசப்பானதுதான். ஆனால், இது நமக்கு அதிக நன்மை பயக்கும். இதைக்குறித்து சற்று யோசியுங்கள். ✝

---

**கசப்பின் கதவையும், பகையின்**
**கை விலங்கையும்**
**உடைத்தெறியும் சாவி மன்னிப்புதான்.**
**இச்சாவியை பலர் பயன்படுத்தாததால்**
**தான் இவ்வுலகம் சமாதானமும், சந்தோஷமும்**
**இல்லாமல் சிக்கித் தவிக்கிறது.**

ஆராதனை

## கர்த்தருக்கு நினைவுச் சின்னம்

## A Memorial to the Lord

**Gary C. Hampton**

உலகம் முழுவதும் இறந்து போன மனிதர்களுக்காக சிலைகள், கல்லறை கல்வெட்டுகள் மற்றும் பெயர்ப்பலகைகள் போன்ற நினைவுச் சின்னங்கள் அவர்களைக் கனப்படுத்தம் விதமாக வைக்கப் படுகின்றன அல்லது அமைக்கப்படுகின்றன. கர்த்தருடைய பந்தியும் கூட ஒரு ஞாபகார்த்த அல்லது நினைவு விருந்தாகத்தான் இருக்கிறது.

பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது: என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார் (லூக்கா 22:19, 20). மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் I கொரிந்தியர் 11:26 ல் ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் என்று சொல்கிறார். எனவே, ஒரு கிறிஸ்தவன் எப்போதெல்லாம் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கிறாரோ அப்போதெல்லாம் ஞாபகார்த்த விருந்தில் பங்கெடுக்கிறார்.

பஸ்கா கர்த்தருடைய பந்திக்கு நிழலாக இருந்தது. பஸ்கா விருந்தானது இஸ்ரவேல் ஜனங்களால் வருடந்தோறும் அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதின் நினைவாக புசிக்கப்பட்டது (யாத்திராகமம் 12:18;12;25-27), பவுல் நம் கர்த்தரை பற்றி விவரிக்கும்போது, ஏனெனில், நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே என்று விவரிக்கிறார் (I கொரிந் தியர் 5:7). இயேசு கிறிஸ்துவின் பலியின் மூலமாகத்தான் ஒரு மனிதன் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை ஆகிறார் ( எபேசியர் 1:7). அவர் நம்முடைய பஸ்காவாக இருக்கிறபடியால் அவருடைய எலும்புகளில் ஒன்றுகூட முறிக்கப்படவில்லை ( யோவான் 19:31-36).

கர்த்தருடைய பந்தி எனும் இந்த ஞாபகார்த்த விருந்தில் இரண்டு பொருள்கள் இடம் பெறும். ஒன்று **அப்பம்** மற்றொன்று **திராட்சை ரசம்**, (மத்தேயு 26:2628), மாற்கு 14:2325). இயேசுவும் அவருடைய சீஷர்களும் சற்று நேரத்திற்கு முன்பாகத்தான் பஸ்கா போஜனத்தை புசித்திருக்க வேண்டும் (யாத்திகமம் 12:15). உண்மையில், மத்தேயு புளிப்பில்லா அப்பண்டிகையின் முதல்

நாளிலே என்று அழைப்பதை நாம் கவனிக்க வேண்டும் ( மத்தேயு 26:17). இயேசு கிறிஸ்து இது சரீரமா யிருக்கிறது என்று சொன்னார். இதை வைத்து சிலர் அப்பமும், திராட்சை ரசமும் இயேசுவின் உண்மையான சரீரமாகவும், இரத்தமாகவும் மாறிவிடுகிறது எனும் தவறான உபதேசத்தை உபதேசித்து வந்தார்கள். இயேசு கிறிஸ்து இந்த விருந்தை ஏற்படுத்தின போது அவர் சரீரத்தில் இருந்தபடியால் அவர் உருவக நடையை பயன்படுத்தியிருக்கிறார் என்பது வெளிப் படையாகத் தெரிகிறது. உதாரணமாக சில வேளைகளில் நான் மிகவும் பசியாயிருக்கிறேன், விட்டால் ஒரு குதிரையை கூட தின்றுவிடுவேன் என்று சொல்வதில்லை. மாறாக, மிகப் பயங்கரமான பசியில் இருக்கிறோம் என்று சொல்கிறோம். அதேவிதமாக இயேசு கிறிஸ்து இங்கே உண்மையாகவே, அவருடைய சரீரத்தை புசிக்கச் சொல்லவுமில்லை. இரத்தத்தைக் குடிக்கச் சொல்லவில்லை. ஆனால், அப்பமும், திராட்சை ரசமும் அவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்துகிறது.




நாம் கர்த்தருடைய பந்தியில் வாரத்தின் முதல் நாள்தோறும் பங்கெடுக்க வேண்டும். லூக்கா ஆசிரியர், வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில் பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டு மென் றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து, நடு ராத்திரி மட்டும் பிரசங்கித்தான் என்று பதிவு செய்கிறார் (அப்போஸ்தலர் 20:7). பவுல் துரோவா பட்டணத்தில் ஏழு நாட்கள் இருந்தார் (வசனம்6) இயேசு வாரத்தின் முதல் நாளிலே உயிர்த் தெழுந்தபடியால் சீஷர்கள் அந்த நாளிலே ஒன்று கூடினார்கள் (மாற்கு 10:9; அப்போஸ்தலர் 2; லேவியராகமம் 23:15,16). ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசாரிக்க நினைப்பாயாக ( யாத்திராகமம் 20:8) ல் தேவன் சொன்னபோது அது வாரந்தோறும் என்று சொல்லி யூதர்களுக்குப் புரிந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் (I கொரிந்தியர் 16:2) ல் நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, வாரத்தின் முதல் நாள்தோறும் எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் என்று சொல்கிறார். இங்கே வாரத்தின் முதல் நாள்தோறும் காணிக்கை செலுத்த வேண்டுமென்று புரிந்து வைக்கிறோம். நாம் பணிபுரியும் டத்தில் முதலாளி வாரத்தின் முதல் நாள் சம்பள நாள் என்று சொன் னால் வாரத்தின் ஒவ்வொரு முதல் நாள் என்று மிக எளிதாக புரிந்து கொள்வோம். ஆனால், சபை அப்பம் பிட்கும் படி வாரத்தின் முதல் நாள்தோறும் கூடியது என்பதை நாம் ஏன் புரிந்து கொள்வதில்லை? நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங் களுக்காக மாபெரும் தியாகத்தை செய்திருக்கிறார். அதை எண்ணி அதன் நினைவாக வாரத்தின் முதல் நாள்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுப்போம்.

# பாடலில் தேவனை ஆராதித்தல்!

## Worshiping God in song!

Mark N. Posey



**பு**திய ஏற்பாட்டில் பாடல் பாடுவதற்கான அதிகாரம் கீழ்க்காணும் வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

மத்தேயு 26:30
அப்போஸ்தலர் 16:25
ரோமர் 15:9
I கொரிந்தியர் 14:15
எபேசியர் 5:19
கொலோசெயர் 3:16
எபிரெயர் 2:12˙13:15
யாக்கோபு 5:13
வெளிப்படுத்தல் 5:8-4:13;15:2–3

இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் வசனப்பகுதிகள் ஒவ்வொன்றும் இசைக்கருவி பயன்படுத்தப்படாத பாடலை – வாய்ப்பாட்டை – புதிய ஏற்பாட்டு சபையின் ஆராதனையின் ஓர் அங்கமாக கொண்டிருப்பதை நாம் காண முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வசனப்பகுதிகள் கிறிஸ்துவின் சபை ஆராதனையில் வாய்ப்பாட்டை அல்லது வாய் வாயிலான குரல் இசையைப் பயன்படுத்துவதற்கான உறுதியான அதிகாரம் பெற்ற வசனப்பகுதிகளாகும். இவ்வசனப்பகுதிகளின் பிரிவுகளை கவனியுங்கள்.

நேரடியான கட்டளை : எபிரெயர் 13:15; யாக்கோபு 5:13; எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16

அப்போஸ்தலர்களின் உதாரணம் : மத்தேயு 29:30 அப்போஸ்தலர் 16:25; I கொரிந்தியர் 14:15.

தேவன் தாம் எப்படித் துதிக்கப்படவேண்டுமென்று நமக்கு தெளிவாகவும் வெளிப்படையாகவும் சொல்லியிருக்கிறார். நாம் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை ஏறெடுத்து அவருடைய பரிசுத்த நாமத்தை போற்றித் துதிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நம்முடைய சிறந்தவைகளுக்கு அவர் பாத்திரராயிருக்கிறார். நாம் தேவனைப் பாடலில் எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதில் அவர் குறிப்பாயிருக்கிறார். கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழ்பவர்களுக்கு அவர் வாய் வழியிலான குரல் இசையை கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய விருப்பத்திலிருந்து நாம் ஒரு போதும் தூரம் போகாமலிருப்போமாக! அது நம்முடைய கடமையாகவும் இருக்கிறது.

# பொழுதுபோக்கும், உண்மையான ஆராதனையும்

## Entertainmant and True Worship

**Basil Overton**

**பொ**ழுதுபோக்குகளில் நல்ல வகையும் உண்டு. மோசமான வகையும் உண்டு. நல்ல பொழுது போக்கு அம்சங்கள் கூட அதிகப்படியாகும் போது அலுப்புத்தட்டி விடுகிறது. நாம் வாழும் காலம் பொழுதுபோக்கு காலம் என்றழைக்கப்படும்

அமெரிக்க தொலைகாட்சி நிலையத்தில் இரவு நேர நிகழ்ச்சி களைத் தொகுத்து வழங்கிய தொகுப்பாளர் ஒருவர் அங்கிருந்து மற்றொரு தொலைக்காட்சிக்கு தாவி இங்கே தொகுப்பாளராக பணியாற்றினார். ஊடகங்களில் அவரைப் பற்றிய வந்த செய்தி என்னவென்றால், முந்தைய தொலைக்காட்சி நிலையத்தில் அவருக்கு 7மில்லியன் டாலர்கள் சம்பளமாகக் கொடுக்கப் பட்டதாகவும், புதிதாக வேலையில் சேர்ந்துள்ள தொலைக்காட்சி நிலையத்தில் அவருக்கு 14 மில்லியன் டாலர்கள் சம்பளமாக கொடுக்கப்படுவதாக தகவல்கள வெளிவந்தன. அமெரிக்க ஜனாதிபதி யின் ஒரு வருட சம்பளம் இரண்டு லட்சம் டாலர் ஆகும். இதற்கு வரு மான வரி செலுத்த வேண்டும். ஜனாதிபதியின் பணி அதிக அழுத்த முள்ளதும், பரப்பரபான ஒன்றாகவும் இருக்கும். எனவே, அவர் கடினமாக உழைத்துத்தான் இந்த சம்பளத்தை பெறவேண்டிய தாயிருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதியின் சம்பளம் வரி செலுத்துபவர்களால் கொடுக்கப்பட்டாலும் கூட, ஒரு தொலைக்காட்சி தொகுப்பாளருக்கு வருடத்துக்கு 14 மில்லியன் டாலர்கள் சம்பளமாக கொடுக்கப்படுகிற தென்றால் அமெரிக்க மக்கள் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு எவ்வளவு முக்கியதுவம் கொடுக்கிறார்கள் என்பது நமக்குப் புரிகிறது. போகிற போக்கைப் பார்த்தால் ஜார்ஜ் வாஷிங்டனிலிருந்து கடந்து இருநூறு வருடங்களாக எவ்வளவு சம்பளம் பெற்றுக்பொண்டார்களோ அதைவிட அதிகமாக இந்த தொலைக்காட்சி தொகுப்பாளர் இன்னும் இரண்டு வருடங்களில் சம்பாதித்து விடுவார் போல் தெரிகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்தத் தொலைக்காட்சி தொகுப்பாளர் செலுத்தும் வருமான வரியிலிருந்தே ஜனாதிபதிக்கு சம்பளம் கொடுத்துவிடலாம் போல் தெரிகிறது.

Evander Holly Field எனும் அமெரிக்க துத்துச் சண்டை வீரர் 1990 களிலேயே 60 மில்லியன் டாலர்கள் சம்பளமாக பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், JoE Montann எனும் கால்பந்துவீரர் மூன்றரை மில்லியன் டாலர்களை 1991 களில் ஊதியமாகப் பெற்றதாகவும் சொல்லப்படுகிறது, இத்தனைக்கும் அவர் முழங்காலில் ஏற்பட்ட

காயம் காரணமாக பல போட்டிகளில் பங்கெடுக்கவில்லை. அதிக ஊதியம் பெறும் விளையாட்டு வீரர்களின் பட்டியலை வெளியிட இப்புத்தகதில் இடம் போதாது.

**பொழுதுபோக்கு சபையின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.**

பொழுது போக்கு மீதான மக்களின் மோகமும், நாட்டமும் சபையின் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எல்லா இடங்களிலும் பொழுதுபோக்கு அம்சங்கள் சூழ்ந்து நிறைந்து மக்களை கட்டுப்படுத்துகிறபடியால் சபையில் சிலர் ஆராதனை நேரத்திலும் பொழுது போக்கு அம்சங்கள் இருக்க வேண்டுமென்று எதிர்ப்பார்க்கிறார்கள். சிலர் பொழுதுபோக்கு காரியங்களுக்கு கொஞ்சம் இடைவேளை விட்டாலும் கூட தங்களுக்கு அலுப்பு ஏற்படுவதாக சொல்கிறார்கள். அவர்கள் பல சந்தர்ப்பங்களில் எங்களுக்கு ஆராதனையிலிருந்து எதுவும் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் ஆராதனையில் எதையும் கொடுப்பதில்லை. எனவே, அவர்கள் அதிலிருந்து எதையும் பெற்றுக் கொள்ளுவதில்லை. மேலும், கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிப்பதினால் தங்களுக்கு என்ன கிடைக்கும் என்கிற மனநிலை யோடு ஆராதனையில் பங்கெடுக்கக்கூடாது. மாறாக, ஆராதனை நேரத்தில் துதிக்கவும், அவரைப் பிரியப்படுத்தவும் தங்கள் சிறந்ததை கொடுப்போம் எனும் மனநிலையோடு ஆராதனையில் பங்கெடுக்க வேண்டும்.

சிலர் பிரசங்கியார்கள் துடிப்புள்ளவராக இல்லையென்றால் தங்களுக்கு அலுப்பு ஏற்படுவதாக சொல்கிறார்கள். ஜனங்கள் கேட்க வேண்டிய செய்தியை, அவர்களுக்கு அவசியமான செய்தியை ஒரு பிரசங்கியார் தேவனுடைய வார்த்தையிலிருந்து பிரசங்கிக்கும் போது அது சிலருக்கு பொழுது போக்காக இருப்பதில்லை. ஒருவர் பிரசங்கத்தில் சுவாரஸ்யமான சம்பவம், உலகப்பிரகாரமாள கதைகள் போன்றவற்றை சொல்லவில்லை என்பதற்காக சிலர் அவருடைய பிரசங்கத்தில் ஆர்வமில்லை, அலுப்பு ஏற்படுகிறது என்று சொன்னால் அது கேலிக்கூத்தான ஒன்றாகும்.

எனக்குத் தெரிந்த பிரசங்கியார் ஒருவர் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் பட்ட பாடுகளை ஜனங்களுக்கு கொண்டு செல்ல முயற்சித்து கொண்டிருந்தார். ஆனால், தன் பிரசங்கத்தை ஜனங்கள் கவனிக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டார். சிலர் தூங்கிவிட்டார்கள். அதைக் கண்ட பிரசங்கியார் ஒரு நாய் கொல்லப்படுவதைப் பற்றி தான் உருவாக்கின கதையைச் சொல்ல ஆரம்பித்தார். ஜனங்கள் தங்கள் இருக்கையின் நுனிக்கு வந்து பிரசங்கியாரை கவனிக்கத் தொடங்கினார்கள். அப்பொழுது

பிரசங்கியார் ஜனங்களைப் பார்த்து, நம் அருமையான இரட்சகர் தம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்ததை பற்றி உங்களிடம் பிரசங்கித்தேன். நீங்கள் யாருமே கண்டு கொள்ள வில்லை. ஆனால், நான் நாயைப் பற்றிய ஒரு பொய்க்கதையை உங்களிடம் சொன்னபோது உங்கள் கவனம் சிதறவேயில்லை இவ்விதமாக உங்களை நான் மகிழ்வித்தேன் என்றார்.

அமெரிக்காவில் ஒரு புகழ் பெற்ற பிரசங்கியாருடைய ஒலிப் பேழையை நான் கேட்டேன். அதை என்னால் பிரசங்கம் என்று அழைக்க முடியாது. அவர் பெரும் திரளான கூட்டத்தின் மத்தியில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அவர் பல கேலிக்கூத்தான காரியங் களைச் சொல்லிவிட்டு ஆராதனை என்பது பொழுது போக்கு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஏனென்றால், ஜனங்கள் யாரும் உபதேசத்தில் விருப்பம் காட்டுவதில்லை என்று உரத்த சத்தமாகச் சொன்னார். ஆனால், அவர் சரியான உபதேசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் புதிய ஏற்பாட்டு வசனப்பகுதி எதையும் குறிப்பிடவேயில்லை. அப்பிரசங்கியார் சரியான உபதேசம் முக்கியமற்றது என்பதை வலியுறுத்த தவறான உபதேசத்தை பயன்படுத்திக் கொண்டிருந்தார். மேலும், அவர் ஆராதனைக்கு அதிக ஜனங்களை ஈர்க்க வேண்டுமென்றால் பொழுது போக்கு அம்சங்கள் அவசியம் என்பதை தெளிவுபடுத்திவிட்டார்.

### உண்மையான ஆராதனை

கடந்த பல வருடங்களாக நான் பிரசங்கியார்கள் உட்பட பலரிடம் கவனித்த காரியம் ஆராதனையிலிருந்து எனக்கு என்ன கிடைக்கும் என்னும் மனநிலைதான். நிச்சயமாகவே, உண்மையாக ஆராதிப்பவர் களுக்கு ஆராதனையிலிருந்து அதிக நன்மைகள் கிடைக்கிறது. ஆனால், அது நம்முடைய முதன்மையான கவலையாக இருக்க கூடாது. நம் பிரதான நோக்கமெல்லாம் நம் சிருஷ்டிகராகிய பிதாவை நோக்கித் துதிகளை ஏறெடுக்கும் போது, நம் இருதயங்களை அவருக்கு நேராக செலுத்தி, நம் இருதயத்தை ஊற்றுகிறோமா? ஆராதனையில் நம் உதவியற்ற நிலையையும், வெறுமையையும் தேவனிடத்தில் வெளிப்படுத்துகிறோமா?

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டுமென்று சொன்னார் (யோவான் 4;24) புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி நாம் பார்க்கும் போது இதன் பொருள் நாம் தேவனை சரியான மனநிலையுடனும், ஆவியுடனும் ஆராதிக்கும்படியாக கட்டளையிட்டாரோ அவ்விதமாக ஆராதிக்க வேண்டும் என்பதாயிருக்கிறது. தேவன் எப்படி தம்மை ஆராதிக்க வேண்டுமென்று சொன்னாரோ அப்படிச் செய்ய ஒருவருக்கு அலுப்பு ஏற்படுகிறது என்றால் அந்த நபர் தாழ்மையாகவும் இல்லை. ஆவியில் எளிமையாகவும் இல்லை. ✝

## உபவாசத்தைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது? அது இன்றைய கிறிஸ்தவர்களுக்கானதா?

What Does the bible Teah about Fasting? Is it for Christians Today?

Eric obeng Asante

**வே**தாகம அடிப்படையில் பார்த்தால், உபவாசம் என்பது ஆவிக்குரிய காரணத்திற்காக ஆகாரத்தையும், பானத்தையும் தவிர்ப் பதாகும். பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதர்கள் அடிக்கடி உபவாசம் இருந்திருக்கிறார்கள். ஆனால், நியாயப்பிரமாணத்தில் ஒரே ஒரு உபவாசம்தான் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. வருஷத்திற்கு ஒரு முறை பாவநிவர்த்தி செய்யப்படும் நாளிலே எபிரெயர்கள் தங்கள் ஆத்து மாக்களை தாழ்மைப்படுத்தும்படியாக கட்டளையிடப்பட்டார்கள் (லேவி யராகமம் 16:31) அதன் பொருள் உபவாசம் இருப்பதாகும் (ஏசாயா 58:3).

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் கட்டாயமாக உபவாசிக்க வேண்டுமென்று கட்டளைகள் எதுவும் கொடுக்கப்படாவிட்டாலும் கூட தேவனுடைய பிள்ளைகள் அவ்வப்போதாவது, உபவாசம் இருக்க வேண்டுமென்று புதிய ஏற்பாட்டு வசனங்கள் உற்சாகப்படுத்துகின்றன. கர்த்தருடைய சீஷர்கள் உபவாசிக்காத காரணத்தால் கடும் விமர்சனங் களுக்கு ஆளான போது, மணவாளனாகிய தாம் அவர்களோடு இருக்கும்போது அவர்கள் உபவாசிப்பது பொருத்தமாயிராது ஆனால், மணவாளன் அவர்களைவிட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள் என்றார் நம் கர்த்தர் (லூக்கா 5:35).

அதுமாத்திரமல்ல, ஆராதனையில் தவறான நோக்கத்தை குறித்து எச்சரித்தபோது **நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரனைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்** என்றார் (மத்தேயு 6:16). இங்கே இயேசு கிறிஸ்து நீங்கள் உபவாசித்தால் என்று சொல்லவில்லை, நீங்கள் உபவாசிக்கும்போது என்று சொல்கிறார். அதன் உட்பொருள் அவர்கள் உபவாசிப்பார்கள் என்பது அவருடைய எதிர்ப்பார்ப்பு என்பதை கவனிப்பது முக்கியமானதாகும்.

இன்றைய நாட்களில், கிறிஸ்தவர்களுக்கு உபவாசம் என்பது தன்னார்வமாக, தன்னிச்சையாக செய்யப்படும் ஒரு காரியமா யிருக்கிறது. அது ஒரு சடங்காச்சாரமாக செய்யப்படக்கூடாது.

### உபவாசத்தின் மதிப்பு என்ன?

எப்போது உபவாசம் மதிப்புள்ளதாயிருக்கும்? துக்க சமயங் களில் உபவாசிப்பது ஆவிக்குரிய பிரகாரமாக அதிக நன்மை பயக்கும். தாவீதும் அவனோடிருந்த மனுஷரும் சவுலின் மரணத்தைக் கேள்வி

பட்டபோது துக்கித்து உபவாசமிருந்தார்கள் [II சாமுவேல் 1:12]. அதே போல் நெகேமியா எருசலேமின் பரிதாபகரமான நிலையை கேள்விப்பட்டபோது துக்கித்து, உபவாசித்திருந்தார் [நெகேமியா 1:4].

உபவாசமும், ஜெபமும் நமக்குப் பிரியமானவர்கள் மிகுந்த சுகவீனத்தில் இருக்கும்போது நிச்சயமாக பொருத்தமானவைகளாக இருக்கும் [II சாமுவேல் 12:16]. தேவனுக்கு விரோதமாக ஒருவர் பாவம் செய்யும்போது மனந்திரும்புதலுடன் உபவாசிப்பது ஆவிக்குரிய முதிர்ச்சியின் மெய்யான அடையாளமாயிருக்கும் [I சாமுவேல் 7:6] நினிவே பட்டணத்து மக்கள் தங்கள் பாவங்களை உணர்ந்தபோது உபவாசஞ்செய்யும்படி கூறினார்கள் [யோனா 3:5].

உபவாசமானது மிக முக்கியமான மத சம்மந்தமான நிகழ்ச்சியில் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது. மோசே நியாயப்பிரமாணத்தை பெற்றுக் கொள்ளும் அந்த நாட்களிலே உபவாசம் இருந்தார் [யாத்திராகமம் 34: 28]. கிறிஸ்து வனாந்திரத்தில் பிசாசை எதிர்கொள்வதற்கு முன்பாக உபவாசமிருந்தார் [மத்தேயு 4:2].

அபாயகரமான முதல் சுவிசேஷப் பிரயாணத்தின்போது சபை பர்னபாவையும், சவுலையும் அனுப்புவதற்கு முன்பாக ஜெபித்தார்கள் அப்போஸ்தலர் [13:2-3]. பவுலின் சுறுசுறுப்பான ஊழியத்தின் ஒரு பகுதியாக உபவாசம் இருந்திருக்கிறது [II கொரிந்தியர் 6:5 ; 11:27].

**உபவாசிப்பவர்களுக்கு எச்சரிக்கை**

ஏசாயா தீர்க்கதரிசி உலகப்பிரகாரமாக தங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படியாக உபவாசித்த ஜனங்களை கடுமையாகக் கடிந்து கொள்கிறார் [ஏசாயா 58].

மேலும், உபவாசமானது ஒருவர் தன் மனத்தை அல்லது மார்க்கத்தை தம்பட்டம் அடித்து விளம்பரப்படுத்துகிற ஒன்றாக இருக்கக் கூடாது. பரிசேயர்கள் இந்த காரியத்தை வெகு விமரிசையாக செய்தார்கள் [மத்தேயு 6:16-18].

கடைசியாக, உபவாசத்தை கடுமையாக கடைபிடிப்பது மத சம்மந்தமான மெத்தனப்போக்குக்கும், சுயநீதிக்கும், வழிவகுத்துவிடக் கூடாது. இதுவும் ஒரு வகையான சோதனையாகக் கூட இருக்கக் கூடும் [லூக்கா 18:9-14].

உபவாசம் ஆழமாகவும், நேர்மையாகவும், அர்ப்பணிப்புடனும் கடைபிடிக்கப்படும்போது தேவன் அதை கனப்படுத்துகிறதாக வேத வாக்கியங்கள் ஆலோசனை வழங்குகின்றன.

மருத்துவர்கள் மிதமான உபவாசம் ஆரோக்கியத்திற்கு நல்லது என்று சொல்கிறார்கள். உபவாசத்தினால் நம் உடலுறுப்புகள் சுத்தமாக்கப்படுவதாகவும் சொல்கிறார்கள்.

உபவாச நாட்களில் மனது ஆழ்ந்த சிந்தனைக்குள் சென்று விடுவதாக சொல்லப்படுகிறது.

உபவாசமானது சுயக்கட்டுப்பாட்டு திறன்களை கூர்மையாக்கப் பெரிதும் உதவிடும்.

உபவாச நாட்களில் நாம் புசியாமலும், குடியாமலும் உடலை வருத்தும்போது நாம் பரிபூரணமாய் அனுபவித்த உணவுகளின் மதிப்பை அந்நாட்களில் அதிகமாக அறிந்துகொள்ள முடியும். ✝

**விழித்திருங்கள்**

*உன் பக்தி வாழ்க்கையில்*

*நீ உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்தைத்*

*தான் எதிராளியாகிய பிசாசு உனக்கு எதிராகத் திட்டமிடுகிறான்*

*தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்,*

*ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன்*

*கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ*

*என்று வகைத் தேடிச் சுற்றித்திரிகிறான்*

*(1 பேதுரு 5:8)*

## பூமிக்குரிய செல்வமும், புகழ்ச்சியும் என்னிடத்தில் ஒருபோதும் வராமல் போகலாம்

*Earthly Wealth And Fame May Never Come To Me*

**Don Myers**

**வே**தாகமத்தில் மத்தேயு ஆசிரியர் மலைப் பிரசங்கத்தை பதிவு செய்திருக்கிறார். அதிலே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமிக்குரிய உடைமைகளைக் குறித்தும், பூமிக்குரிய கவலைகளைக் குறித்தும் அதிகமாகச் சொல்லியிருக்கிறார். நம் ஆவிக்குரிய பயணத்தின் மிகப்பெரிய ஆபத்துக்களில் ஒன்று நாம் பண ம் ம ற் று ம் உடைமைகளை கையாளும் விதத்தில் இருக்கிறது. மலைப் பிரசங்கத்தில் பல போதனைகளும், எச்சரிப்புகளும் இடம் பெற்றிருக் கின்றன.

- மனித புகழ்ச்சிக்காக பிறருக்கு கொடுக்கக் கூடாது (6:3) உபவாசித்தல் (6:18)
- பூமியிலே பொக்கிஷங்களை சேர்த்து வைக்கக்கூடாது (6:19)
- உலகப்பொருளை அல்ல தேவனை சேவித்தல் (6:24)
- வாழ்க்கையின் தேவைகளுக்காக கவலைப்படாதிருத்தல் (6:25) பணம் சம்பாதிப்பது செல்வங்களை சேர்ப்பது போன்றவைகளில் மூழ்கியிருக்கும் ஜனங்களோடு கலவாதிருத்தல் (6:32)
- நாளைக்காக கவலைப்படாதிருத்தல்; நாளைய தினம்
- தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் (6:34)

### இயேசுவின் வார்த்தைகளைக் பற்றி சில எண்ணங்கள்

முதலாவது, நம் வாகனங்களிலுள்ள அடையாளங்காட்டும் கருவிகளைப் போல (வெப்பமானி, எரிபொருளைக் காட்டும் கருவி, சீட் பெல்ட் எச்சரிக்கை ) நாம் ஆவிக்குரிய பயணத்தில் எங்கே இருக்கிறோம் என்பதை பரிசோதிதக்க சில காரியங்கள் நம் வாழ்க்கையில் இருக்கின்றன. பல வேளைகளில் நாம் மற்றவர் களுக்கு உதவி செய்யும் போது அது பலரால் அறியப்பட்டு அவர்கள் நம்மைப் புகழ வேண்டுமென்று விரும்புகிறோம். நாம் நம்முடைய உடைமைகளிலிருந்து மற்றவர்களுக்குக் கொடுக்கிறதாக நினைக்கி றோம். ஆனால், உண்மையில் நம்முடையதென்று எதுவுமே இல்லை. எல்லாமே தேவனிடத்திலிருந்து வந்ததுதான். தேவனுடையவைகளி லிருந்து மற்றவர்களுக்கு உதவிட நமக்கு எதற்கு புகழ்ச்சி?

இரண்டாவது, என்னுடைய அனுதின ஆகாரத்திற்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்த மறக்கும் அளவுக்கு நாளைக்கு நான் எதை புசிப்பேன், குடிப்பேன், உடுப்பேன் என்று சிந்தனையில் மூழ்கலாமா? நான் என் மனைவி, மற்றும் பேரனோடு சாப்பிட உட்காரும் போதெல்லாம், இது தான் வாழ்க்கை தேவன் நமக்கு இந்த ஆகாரத்தை தந்தமைக்காக அவருக்கு நன்றிகளை ஏறெடுக்க வேண்டும் என்று சொல்வேன். ஏனென்றால், ஒரு தட்டு நிறைய சாப்பாடு தான் என்னால் சாப்பிட முடியும். அடுத்த நாள் ஆகாரத்திற்காக நாம் கவலைப்பட வேண்டிய தேவையில்லையே. ஒருவர் ஒரு புதிய வாகனத்தையோ அல்லது பழைய வாகனத்தையோ வாங்கும்போது அடுத்த நாளே மற்றொரு வாகனத்தைப்பற்றி பேசுவோமா? நாளைக்கு நாம் எதைப் புசிப்போம் என்பதைப் பற்றி கவலைப்படாமல் உங்களுக்கு முன் இருக்கும் ஆகாரத்தை புசியுங்கள் ஒரு நாளைக்குத் தேவைப்படும் மன்னாவை விட அதிகமாக மன்னாவை சேகரித்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு எந்தப் பிரயோஜனமும் ஏற்படவில்லை.

மூன்றாவது, இயேசு கிறிஸ்து நீங்கள் உபவாசித்தால் என்று சொல்லவில்லை. மாறாக, நீங்கள் உபவாசிக்கும் போது என்று சீஷர்களிடம் சொன்னார். அதாவது, தம்முடைய சீஷர்கள் உபவாசிப் பார்கள் என்று கிறிஸ்து யூகித்தார். யாரெல்லம் உபவாசிக்கும் போது மனுஷர்கள் கானும்படியாக உபவாசிக்கக்கூடாது என்று கர்த்திட மிருந்து கட்டளையை பெற்றிருக்கிறோம். உபவாச நேரங்களில் நாம் இப்பூமிக்குரிய தேவைகளைத் தவிர்த்து, நம்மை நாமே அர்ப்பணித்து, ஜெபத்திலே அதிக நேரத்தை செலவழித்து, தேவனுடைய பராமரிப்பை நாம் இவ்வளவாக சார்ந்திருக்கிறோம் என்று நினைப்பூட்டப் படுகிறோம். தேவன் நீதியுள்ளவர். மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். நீதிமான்கள் தங்கள் கண்களை பரலோகத்திற்கு நேராக ஏறெடுத்து, தங்கள் இருதயத்தி லிருந்து தேவனாகிய கர்த்தாவே, உமக்கு நன்றி என்று சொல்ல வேண்டும்.

நான்காவது, உங்கள் வாழ்க்கையில் திருப்திகரமாக போது மென்கிற மனதுடனே இருக்கிறீர்களா? நாம் பல வேளைகளில் போது மென்கிற மனதுடனே இருந்தாலும் கூட சில தொலைக்காட்சி விளம்பரங்களில் நீங்கள் ஓய்வு பெற ஆயத்தமா- என்று கேட்டவுடனே அதிருப்தியாகி விடுகிறோம். நம் வாழ்க்கையில் அதிருப்தியை உருவாக்கும்படி திறமைமிக்க வல்லுநர்களால் அத்தகைய விளம் பரங்கள் உருவாக்கப்படுகின்றன. இதற்கு கோடிக்கணக்கான பணம் செலவழிக்கப்படுகின்றன. உலகப்பிரகாரமான உடமைகளைக் குறித்து நாம் சதா சிந்தித்துக் கொண்டிருக்கிறோமா? நாம் விரும்பக் கூடாத நபர்களுக்கு இணையாக வாழும்படியாக நம் தகுதியை மீறி பொருட்களை வாங்குகிறோமா?

ஐந்தாவது, உணவு அல்லது ஆடை தீர்ந்துவிடும் என்று கவலைப்படுகிறீர்களா? இயேசு கிறிஸ்து பூமிக்குரிய தேவைகளைக் குறித்து கவலைப்படவேண்டாமென்று நமக்கு கட்டளை யிட்டிருக்கிறார். நீங்கள் எப்போதாவது பசியாக இருந்திருக்கிறீர்களா? நம்மை நேற்று பராமரித்த அதே தேவன் தான் இன்றும் நமக்கு அனு தின ஆகாரத்தைத் தருகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்கு நாம் சரணடைந்து விட்டால் நம் தேவைகள் எல்லாவற்றையும் தேவன் சந்திப்பார். மேற்சொல்லப் பட்டவைகளைக் குறித்த கவலைகள், தேவனே உண்மையாகவே உம்மை நம்ப வில்லை என்று சத்தமிடுகின்றனவா!

ஆறாவது, நாம் பேராசை கடலிலே மூழ்கிவிட்டோமென்றால் பூமிக்குரிய பொருள்களை நம் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது கடினமாகும். இவ்வுலகில் இன்னும் வேண்டும், அதிகமாக வேண்டு மென்று பொருள்களை குவிப்பவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள். இவ்வுலகப் பொருள்களால் நிச்சயமாகவே நம்மை திருப்திபடுத்தவே முடியாது. நம்மைக் கட்டிவைத்தருக்கின்ற பேராசை எனும் சங்கிலியை உடைத்து விடுதலையானால் எவ்வளவு அருமையா யிருக்கும்? உணவு, உடை போன்றவைகளில் நாம் திருப்தி யடைந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

நாம் இவ்வுலகத்தில் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இங்கிருந்து ஒன்றையும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். நாம் நாளையதினத்தை அறிந்து அதிகமாக கவலைப்பட வேண்டாம். நாளைய தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும் [மத்தேயு:34] நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமிக்குரிய வாழ்க்கையை பற்றி நன்றாக அறிந்திருக்கிறார். இப்போது ஒரு கேள்வி, இவ்வுலகில் இவ்விதமாகத்தான் இயங்கும் என்பதை தேவன் அறிந்திருந்தும் எதற்காக இவ்வுலகத்தை உண்டாக்கினார். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் மனித அவதாரம் எடுத்து நம் மத்தியிலே வாசம் பண்ணினார். இந்த இயேசு தாம் பிறந்த ஊரிலிருந்து 100 மைல்கள் கூட பயணம் செய்யவில்லை அவருக்கு இப்பூமியில் இருந்த ஒரே உடைமை அவருடைய உடைகள்தான். அவருடைய பூமிக்குரிய ஊழியத்தில் அவர் வாசம் செய்வதற்கு அவருக்கு வீடு இருந்தது என்று எங்காவது நாம் வாசிக்க முடியுமா? அவருடைய வாழ்க்கை முறைதான் இப்பூமியிலே நாம் சமாதானத்தோடும், மனரம்மியமாகவும் இருப்பதற்கான இரகசியமாக இருக்கிறது.

மேற்சொல்லப்பட்ட இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் மனப்பாடம் செய்வதற்காக அல்ல, வாழ்வதற்கான வார்த்தைகள். அவ்வார்த்தையின்படி உண்மையாகவே வாழ கற்றுக் கொள்ளும்படி நான் தேவனிடம் ஜெபிக்கிறேன்.

# புருஷர்களே தயவுசெய்து படியுங்கள்

## Husbands, Please Read

Samuel Mathews

**புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்** (எபேசியர் 5:25-27). அன்பானவர்களே, திருமணமான ஆண்களுக்கு, தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் இவ்வசனப்பகுதியில் விடுத்திருக்கும் சவாலைவிட பெரிய சவால் எதுவும் இருக்க முடியாது. மனைவிகளில் அன்பு கூருவது எளிதானதுதான். ஆனால், கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்தது போல் மனைவிகளில் அன்புகூருவது தான் கடினம். ஏனென்றால், அது உயரிய அளவுகோல். அதற்கேற்ப வாழ்வது சற்று கடினம். ஆனால், கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்தது போல் மனைவிகளில் அன்பு கூருவது அவசியம். நாமும் மனைவிகளில் அன்புகூரவில்லையென்றால், நாம் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றவில்லை என்றால், திருமணங்கள் இருக்க வேண்டிய அளவுக்கு இருக்காது. எனவே, இந்த கட்டுரையில் கிறிஸ்து எப்படி சபையில் அன்புகூர்ந்தார் என்று பார்த்து, அதன் பிறகு கர்த்தருடைய உதவியால் நம் மனைவிகளிடத்தில் கர்த்தர் கட்டளையிட்டபடி நடந்து கொள்வோம்.

### கிறிஸ்து சபையை தியாகப் பூர்வமாக நேசித்தார்

மேலுள்ள வசனங்கள் கிறிஸ்து சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார் என்று சொல்கிறது. சபை தமக்கு என்ன செய்தது என்கிறதாக அல்ல, அவரால் சபைக்கு என்னச் செய்ய முடியும் எனும் எண்ணத்தில் நம் கர்த்தர் சபையில் அன்பு கூர்ந்தார். (லூக்கா 22:27) ல் கிறிஸ்து **நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்** என்று சொன்னார். மேலும், அவர் சொல்லும்போது **மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்** என்று சொன்னார் (மத்தேயு 20:28). கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்தது போல நாம் மனைவிகளில் அன்பு கூர வேண்டுமென்றால், தியகப்பூர்வமான மனப்பான்மை நமக்கு அவசியமாகிறது. நாம் நம் மனைவிகளுக்காக ஜீவனைவிட வேண்டிய அவசியமில்லை. ஆனால், அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். மெய்யாகவே, உண்மையான அன்பு தற்பொழிவை நாடாது. கணவன்மார்களாக நம் மனைவிமார்களின் தேவைகள்

நம்முடைய தேவைகளிலிருந்து வேறுபடுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அத்தேவைகளை பூர்த்தி செய்வது நம் கடமை யாயிருக்கிறது. பெண்கள் வேத பாட வகுப்பில் பெண்களிடம் அவர்கள் தங்கள் கணவன்மார்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார்கள் என்று ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது அவர்கள் தங்கள் தேவை களாக வெளிப்படுத்தினவைகளை இப்போது கீழ்கண்டவாறு காண்போம்.

அவர்களுடைய முதலாம் தேவை, தங்கள் கணவன்மார்கள் ஆவிக்குரிய தலைமைத்துவத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாயிருக்கிறது. உண்மையாகவே, ஆய்வு நடத்தப்பட்ட 91% பெண்கள் தங்கள் அவசரத் தேவையாக இதைத்தான் சொன்னார்கள். கணவன்மார்களே உங்கள் மனைவிமார்கள் நீங்கள் உங்கள் குடும்பத்தை நித்தியத்திற்கு ஆயத்தப்படுத்த வேண்டுமென்று விரும்பு கிறார்கள். அதாவது, ஆராதனை மற்றும் வேதபாட வகுப்பில் உங்கள் பங்களிப்பு உட்பட எல்லாவற்றிலும் நீங்கள் தலைமைத்துவத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது மனைவிகளின் அவசரத் தேவையாயிருக்கிறது.

ஆய்வு நடத்தப்பட்டவர்களின் அடுத்த அவசரத்தேவை குடும்ப அர்ப்பணிப்பு. குடும்பத்தை அச்சுறுத்தும் எல்லா சக்திகளிடமிருந்தும் தன் குடும்பத்தை ஒரு கோட்டைபோல் அர்ப்பணிப்புடன் பாது காத்து வரும் தன்னைப்போல் தன் கணவனும் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டுமென்பது மனைவிமார்களின் எதிர்பார்ப்பா யிருக்கிறது.

**அடுத்ததாக மனைவிகளின் பட்டியலில் பிரதானமாக இருப்பது உரையாடலும், தகவல் பரிமாற்றமும்**

தன் கணவன் தன்னிடம் ஒரு தோழியைப்போல் பேசாமலிருப்பது அவர்களை அதிகமாக காயப்படுத்துகிறது. சில வேளைகளில் கணவன் தன் மனைவியை முக்கியமற்றவளாக பார்க்காவிட்டாலும் கூட மனைவியால் அவ்விதமாக பார்க்கப்படுகிறது. மனைவி உங்கள் வாழ்க்கைத் துணையாக இருக்கிறபடியால் உங்கள் எண்ணங் களையும், திட்டங்களையும் அவளிடம் பகிரப்படுவதற்கு அவள் பாத்திரமாயிருக்கிறாள்.

**தன் கணவன் தன்னிடம் பாசத்தையும், அன்பையும் வெளிப்படுத்த வேண்டுமென்பது மனைவிகளின் எதிர்பார்ப்பாயிருக்கிறது**

இது கணவன்மார்களின் விருப்பபட்டியலில் இருந்தாலும் கூட, மனைவிமார்களின் எதிர்பார்ப்பு சற்று வித்தியாசப்படுகிறது. கணவன்மார்களாக நாம், மனைவிகள் மீதான நம் அன்பையும், பாசத்தையும் வெளிப்படுத்த சில வழிகளை கண்டுபிடிக்க வேண்டும்.

**மனைவிகளின் விருப்பப்பட்டியலில் பொருளாதாரப் பாதுகாப்பும் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது**

இது பணம் அல்லது ஐசுவரியத்தை அள்ளிக்குவிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கான விருப்பப்பட்டியல்ல. மாறாக, கணவன் குடும்பத்தை பாராமரிக்கின்ற காரியத்தில் பொறுப்புள்ளவனாக இருக்க வேண்டும் எனும் விருப்பப்பட்டியலாயிருக்கிறது. இங்கே இரண்டு மித மிஞ்சிய நிலைகள் தவிர்க்கப்பட வேண்டும். ஒன்று கணவன் தன் குடும்பத்தை பாராமரிக்கத் தவறுவது, மற்றொன்று குடும்பத்தைப் பாராமரிக்க சாக்கில் பணத்தை அள்ளிக்குவிப்பது. இவ்விரண்டுமே அபாயகரமானது.

**கிறிஸ்து சபையைப் பிரத்யேகமாக நேசிக்கிறார்**

இயேசு கிறிஸ்து தம் பிதாவாகிய தேவனைப்போல் உலக முழுவதையும் நேசித்தாலும் கூட (யோவான் 3:16); கிறிஸ்து சபையை தன் மணவாட்டியாக பரிசுத்தமாக்கினார் (எபேசியர் 5:26,27). இதன் பொருள் அவர் சபையை உலகத்திலிருந்து பிரித்தெடுத்திருக்கிறார். அதேப்போல் திருமண உறவிலும் பரிசுத்தம் அவசியமாயிருக்கிறது. கணவன் மனைவியின் உடைமையாயிருக்கும்படி தனியாகப் பிரித்தெடுக்கப்படுகிறாள். இந்த தேவனுடைய ஏற்பாட்டில் தலையிடுவது பாவமாகும்.

வேறு இடங்களில் சிலவேளைகளில் ஆண்களுக்கு பெண் களோடு சற்று நெருக்கமாக வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இத்தகைய சூழ்நிலையில் கணவன் வேறு சிலரும் தன்னோடு இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அப்போதுதான், மனைவியின் மனதில் சந்தேகமும் நீங்கும். வீண் குற்றச்சாட்டு களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம்.

**கிறிஸ்து சபையில் மிகவும் அக்கறையோடு அன்பு கூர்ந்தார்**

அந்தப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தானே அன்பு கூருகிறான். (எபேசியர் 5:28). ஒருவர் தன் மனைவிக்கு சிறந்ததை செய்யும்போது, தனக்கு சிறந்ததைச் செய்கிறான். அதேபோல் தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையை போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தை போஷித்து காப்பாற்றுகிறான் (வசனம் 29). கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை ஜீவ அப்பம் கொண்டு போஷிக்கிறார்.(யோவான் 6:48-51)

நமக்குப் பிரியமானவர்களை நாம் அன்புடனும், அக்கறையுடனும் நடத்தி அவர்களைப் போஷித்து காப்பாற்றுவோம். ஒரு ஞானமுள்ள கணவன் தன் மனைவியைப் போஷித்து காப்பாற்றுகிறான்.

**கிறிஸ்து சபையில் சகிப்புத் தன்மையோடு அன்புகூர்ந்தார்**

**நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாகவும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்.** [வசனம் 30]. **இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்** [வசனம் 31]. கிறிஸ்து ஆதியாகமம் 2:24 யை மேற்கோள்காட்டி விவாகத்தின் பிரிக்க முடியாத தன்மையைப் போதித்தார். தேவன் ஆணையும் பெண்ணையும் ஒரே மாம்சமாக இணைத்தார். தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் [மத்தேயு 19:6]. ஒரு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவனுக்கு விவாகரத்து என்பது தன் சரீரங்களை துண்டு துண்டாக வெட்டுவது தன் சிந்தைக்கு எவ்வளவு தூரமாயிருக்குமோ, அதேபோல் தூரமாயிருப்பதாக.

கிறிஸ்து சபையை நேசித்த விதம் ஒரு கிறிஸ்தவன் தன் மனைவியின் மதிப்பை அதிகமாக உணர அவனைத் தூண்ட வேண்டும். ஒரு கிறிஸ்தவன் தன் மனைவியை மனிதனுடைய தேவையை அறிந்த சர்வ சிருஷ்டிகரிடமிருந்து வந்த ஈவாகப் பார்க்க வேண்டும். ஆகவே தான், ஞானி மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயையும் பெற்றுக் கொள்ளுகிறான் என்றார். [நீதிமொழிகள் 18:22].

**நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?**

**கர்த்தரை நம்பி நன்மை செய்: தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்து கொள் கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு: அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார். உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு: அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார். உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உன் நியாயத்தை பட்டப்பகலைப் போலவும் விளங்கப் பண்ணுவார். கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்கு காத்திரு; காரிய சித்தியுள்ளவன் மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன் மேலும் எரிச்சலாகாதே. கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு; பொல்லாப்புச்செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம். பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள்: கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். இன்னுங் கொஞ்ச நேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை. சாந்த குணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள் (சங்கீதம் 37:3-11).**

# மனைவிகள்

# Wives

Betty Burton Choate

நம்முடைய நாட்களில் சாத்தான் எப்படிப்பட்ட கலாச்சார சீர்குலைவை ஏற்படுத்தியிருக்கிறான் என்று பாருங்கள்! சாத்தான் ஆண்கள் பற்றியும் (இந்த நவநாகரிக உலகில் பெண்களுக்கு ஆண்கள் அவசியமில்லாதவர்களென்றும், சண்டை சச்சரவுகளுக்கு இவர்கள் தான் காரணம் என்றும்) பெண்கள் பற்றியும், இன்னும் குடும்பம், திருமணம், விவாகரத்து, ஓரினச்சேர்க்கை, கருகலைப்பு, தேவன், அவருடைய படைப்பு, பக்தி போன்றவை பற்றியும் தன் எண்ணங்களைச் செயல்படுத்த வைக்க நாம் சாத்தானை அனுமதித்து விட்டோம். மேற்சொல்லப்பட்ட காரியங்களைப் பற்றி பெரும்பாலான உலக மக்களின் எண்ணங்கள் முன்னாட்களில் இருந்தவைகளுக்கு எதிரானதாகவும், வேதவாக்கியங்களின் போதனைகளுக்கு எதிராகவும் உள்ளது.

நாம் தேவபக்தியற்ற காரியங்களை செயல்படுத்தியதால் இவ் வுலகம் ஒரு சிறந்த இடமாக மாறியிருக்கிறதா? நிச்சயமாக இல்லை. பெருங்குற்றம், தற்கொலை, விவாகரத்து, மனநோய், மற்றும் பல விதமான கொடுமைகள் கடந்த ஐம்பது வருடங்களில் பெருகி யிருக்கின்றன. முற்காலத்தில் ஒரு குழந்தையின் மனதில் ஏற்படும் மிகப்பெரிய பயம் சம்மந்தமாக நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் இருள், சூறாவளி, பள்ளியில் சரியாகப் படிக்காமல் இருப்பது போன்றவை கள்தான் பட்டியலிடப்பட்டன. ஆனால், இன்றைய நாட்களில் குழந்தைகள் எதிர்கொள்ளும் பயங்கள் என்னென்ன? தவறாக நடத்தப் படுதல், விவாகரத்து, தீவிரவாதம் போன்றவைகளாயிருக்கின்றன. உலகம் எப்படி மாறியிருக்கிறது என்று பாருங்கள்!

இந்த ஆபத்தான நிலைக்கு மனிதக்கொள்கை பிரதான காரணமாயிருக்கிறது. ஆனால், இவ்வுலகம் சுய அழிவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறது. நம்மை இந்நிலைக்கு கொண்டுவரப் பயன்படுத்திய சக்தி வாய்ந்த கருவிகளுள் ஒன்று நவீன ஏவாள் மீது தாக்குதலை நடத்துவதுதான். ஆம், அவள் அந்த சர்ப்பத்திற்கு செவி சாய்த்து அவனுடைய பொய்களை இன்னும் நம்பிக் கொண்டிருக் கிறார்கள். தடைசெய்யப்பட்ட கனியைப் புசிப்பதினால் நிச்சயமாக வரும் மரணத்திலிருந்து தன் மனைவியையும், இல்லத்தையும் பாதுகாக்கும் பொறுப்பை ஆதாம் அவளோடு இருந்தும் நிறை வேற்றாமல் போனான்.

## பொய்களின் பட்டியல்
## பெண்கள் வேலைக்குப் போவது நல்லது

சுமார் நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக சாத்தான், மனைவிமார்கள் வீட்டுக்கு வெளியே வேலைக்குப் போக முடியும், போக வேண்டும், கட்டாயம் வேலை செய்ய வேண்டும் என்று கணவன்மார்களையும், மனைவிமார்களையும் சம்மதிக்கச் செய்தான். அப்படிப்பட்ட சில சூழ்நிலைகளில் இப்படித்தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் இருப்பது உண்மைதான். ஆகவே, அவர்கள் சம்பாதிக்க வேண்டும், பெண்கள் வேலைக்குப் போக வேண்டும், இல்லை யெனில், குடும்பம் பட்டினியால் வாடும் எனும் எண்ணம் உருவாக்கப் பட்டது. ஆனால், பெரும்பாலும் இவ்வுலகப் பொருட்கள் அதிகமாக வேண்டும் என்கிற ஆசையாலே பெண்கள் வேலைக்குப் போகிறார் கள். தேவைக்கு அதிகமாக ஆசைப்பட்டு வாங்கக்கூடிய பொருள் களுக்காக வருமானத்தின் ஒரு பகுதியானது கணவன், மனைவி உறவு, தாய் பிள்ளை உறவு, குடும்ப நலன், குடும்பத்தின் ஆவிக்குரிய வாழ்க்கை இவைகளை தியாகம் செய்வதால் வருகிறதாயிருக்கிறது!

பொதுவாக, ஓர் உறவை மேம்படுத்துவதற்கு சிறிதுகாலம் எடுக்கும். ஆனால், வீட்டுக்கு வெளியே முழுநேர வேலை என்று வரும்போது அந்த உறவை மேம்படுத்துவதற்காக காலம் விரயமாகிறது. வேலை செய்யும் இடங்கள் சில வேளைகளில் தவறான உறவுக்கான இடங்களாக மாறிவிடுவதால் குடும்ப உறவுகள் விவாகரத்திலும், முடிவில்லா துக்கத்திலும் போய் முடிகிறது.

## பெண் விடுதலை நல்லது

பெண்களை மிக மோசமான முறையில் இழிவுபடுத்தும் விதம் **சமத்துவம்** என்னும் பொய்யினால் அரங்கேறி வருகிறது. பெண்கள் தேவனுடைய சிருஷ்டிப்பில் இரண்டாந் தரமானவர்களல்ல. ஆனால், பலர் இவ்விஷயத்தில் மனித உபதேசம் மற்றும் கலாச்சாரத்தை பின்பற்றிட; தங்களைத் தாமே தரம் தாழ்த்திக் கொணடார்கள். இன்றைய நாட்களில் பெண்கள் ஆண்களுக்கு எல்லாவிதத்திலும் சமமானவர்கள் என்று சொல்லி பிரத்யேகமாக ஆண்களுக்கென்றே ஒதுக்கப் பட்டிருந்த கடினமான வேலைகளைக் கூட செய்யும்படியாக பெண்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் தங்கள் சமநிலை மனப் பான்மையாலும், ஒழுக்ககேட்டை தங்கள் வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொள்ளும் விருப்பத்தாலும் தங்கள் வாழ்நாள் முழுவதும் அதின் விளைவுகளாகிய கரு கலைப்பு அல்லது தாங்களே தனியாக குடும்ப பாரத்தை ஏற்பது, பிள்ளைகளின் ஆவிக்குரிய உணர்வுப்பூர்வமான பொறுப்புகளை ஏற்பது போன்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

**நவநாகரீகமாக, அசிங்கமாக ஆடை அணிவது நல்லது**

பெண்களின் இத்தகைய சிந்தையின் முட்டாள்த்தனத்தால் அசிங்கமான விளம்பரங்களில் உடலைக்காட்டி தங்களை வியாபார பொருள்களாக்குகின்றார்கள். பலர் தங்கள் அன்றாட வாழ்வில் அரைகுறையாக உடை அணிந்து வலம் வந்து நாங்கள் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு ஆயத்தமாயிருக்கிறோம்? என்பது போல் நடந்து கொள்ளும் முறைக்கு ஆண்கள் தக்க பதிலடி கொடுக்கும்போது **இது அநியாயம், அக்கிரமம்** என்று போராட்டத்தில் குதிக்கிறார்கள்.

**குழந்தைகளை பகல் நேரக் காப்பகங்களில் விடுவது நல்லது**

தாய்மார்கள் தங்கள் விலையேறப்பெற்ற செல்வங்களாகிய குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை தட்டிக் கழித்து, அதை அந்நியர்களுக்கு விட்டுக்கொடுத்து விடுகிறார்கள். ஆம், வேறுவழி இல்லையென்றாலும் கூட இப்படிப்பட்ட காரியம் நெஞ்சை நெகிழச் செய்கிறது. விடுமுறை நாட்களிலும் கூட சில தாய்மார்கள் கூச்சலிடும் குழந்தைகளின் தொந்தரவிலிருந்து விடுபட பகல் நேரக் காப்ப கங்களில் அவர்களை விட்டு விடுகிறார்கள்.

**ஆண் நண்பரோடு தவறான வாழ்க்கை வாழ்வது நல்லது**

எந்த பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள எதிர்பார்க்காத சோம் பேறியான அந்த ஆண் நண்பர் பல கால தவறான வரவுக்குப் பிறகு ஒரு கட்டத்தில் அப்பெண்ணை விட்டுவிடும்போது அந்த நவீன ஏவாள் எப்படிப்பட்ட விலையைக் கொடுத்திருக்கிறாள் பாருங்கள்.

**நான் விரும்பாத ஒருவரோடு வாழ்வதை விட விவாகரத்தே நல்லது**

இந்த திருமண வாழ்வு சரியாகப் போகவில்லையென்றால் எந்நேரமும் விவாகரத்து பெற்றுக் கொள்ளலாம் எனும் மனநிலையுடன் திருமணத்தில் இணையும் ஆண்களும் இன்றைய நாட்களில் அதிக மாகிவிட்டனர். இம்மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை கட்டினால் எத்தனை விவாகங்கள் வாழ்க்கையின் சவால்களுக்கும், வாழ்க்கையில் வீசும் புயலுக்கும் எதிர்த்து நிற்கும்? மேலும், விவாகரத்துக்குப் பிறகு வழக்கமாக யாருடைய வாழ்க்கை கடினமானதாக இருக்கிறது? தேவன் விவாகரத்தை அல்லது தள்ளி விடுதலை தடைசெய்கிறார் (மாற்கு 10:4-9).

**இதற்கான தீர்வு என்ன?**

உண்மையாகவே, இது மிகவும் எளிதானது. முதலாவதாக, மனிதக் கொள்கையினால் நம் கலாச்சாரத்தில் புரட்டி போடப்பட்டுள்ள

மேற்சொல்லப்பட்ட காரணிகளை மறுமதிப்பீடு செய்ய வேண்டும். அப்படி மறுமதிப்பீடு செய்ய வேண்டுமானால், ஒரு பெண் இதற்கான தீர்வுகளைக் கண்டுபிடிக்கத் தேவனுடைய வார்த்தையிலே தன்னை மூழ்கடித்துக்கொள்ள வேண்டும். தேவனே ஸ்திரீயை உண்டாக்கினவர் அவரே திருமணத்தை ஏற்படுத்தியவர்; அவரே வீட்டைக் கட்டினவர், அவருடைய புத்தகத்திலுள்ள வழிமுறைகள் தான் நம்மை வனையும் அல்லது உருவாக்கும். அதனால் நாம் இவ்வுலகில் பாதுகாப்பாகவும், சந்தோஷமாகவும் வாழமுடியும் என்று முடிவுக்கு வருவதே நியாயமானது.

**மிக முக்கியமான முதல் காரியம் தேவனுக்கு முற்றிலுமாக அர்ப்பணிப்பதுதான்**

தேவபக்தியுள்ள பெண்களும், நிலையான திருமணங்களும், மகிழ்ச்சியான குடும்பங்களும்தான் தேவனால் விரும்பப்படுகிறவைகளாயிருக்கின்றன. தேவனுக்கான அர்ப்பணிப்பு என்பது மனைவியானவள் இந்த வழிமுறைகளை மீற முடியாது என்பதையும் அல்லது இந்த குறிக்கோள்களை விட்டு விட முடியாது என்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ளும்.

**இரண்டாவது காரியம் தன் கணவனுக்குத் தன்னை அர்ப்பணிப்பதாகும்.**

ஆதியாகமம் 2:23,24 மற்றும் எபேசியர் 5:22–31 வசனங்களின்படி தேவனுடைய திட்டமானது மனைவியானவள் தன் தேவபக்தியுள்ள கணவனுக்குத் தானாகவே முன்வந்து கீழ்ப்படிய வேண்டுமென்பதாயிருக்கிறது. புருஷன் தன் மனைவியை பாதுகாத்து, பராமரிக்க வேண்டும்.



**அவள் தன் குடும்ப நலனுக்காக தியாகம் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும்**

தேவ பக்தியுள்ள மனைவி தன் கணவன் மற்றும் குடும்பத்தின் தேவைகளையும், சந்தோஷத்தையும் முதன்மைப்படுத்தி, அதற்கு அடுத்து தன் காரியங்களை செய்ய வேண்டும். அதன் விளைவாக அவள் வாழ்க்கை மகிழ்ச்சிகரமான ஒன்றாயிருக்கும்.

**அவள் தன் நடத்தை, மனப்பான்மை மற்றும் ஆடையை தேவனுடைய வார்த்தை ஆளுகைசெய்ய அனுமதிக்க வேண்டும்**

தன் கணவனிடத்தில் கவனத்தையும், அக்கறையையும், இரக்கத்தையும், அன்பையும் காட்டும் மனைவி, கணவனுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறவளாக இருக்கிறபடியால் அவள் ஐசுவரியமுள்ளவளாக இருப்பாள். ✝

கிறிஸ்தவ இல்லம்

# நம் விளையாட்டு வீரர்களை வளர்க்கிறோமா அல்லது கிறிஸ்தவர்களை வளர்க்கிறோமா?

*Are we Raising Athletes or Christians?*

Wes MC Adams

நீங்கள் என்னையும், என் குடும்பத்தையும் தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தால் என் ஒன்பது வயது மகன் **Base ball** (அடிப் பந்தாட்டம்) விளையாட்டை விரும்புவான் என்பதை அநேகமாக அறிந்திருப்பீர்கள். அவன் தன் அபிமான அணிக்காக தொலைக் காட்சியை தொடர்ந்து பார்த்து, சந்தோஷத்தில் கூச்சலிடுவான் (சில வேளைகளில் மெத்தைகளில் படுத்துக் கொண்டு வானொலி மூலமாக வர்ணனையை கேட்டுக் கொண்டு இருப்பான்). அவன் தன் அபிமான அணிக்கு ஆதரவாக ஆர்ப்பரித்துக் கொண்டிருப்பான். அது மட்டுமல்ல அவன் அந்த பேஸ்பால் அல்லது அடிப்பந்தாட்டத்தைக் குறித்து பலமணி நேரம் பேசிக்கொண்டே இருப்பான். அவன் வீட்டில் கூட கையில் ஏதாவது பந்தில்லாமல் இருப்பானானால் அது அரிதான காட்சியிருக்கும். இருந்தபோதிலும், கிறிஸ்தவ குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விளையாட்டுத் திறமையும், விளையாட்டில் அதீத விருப்பமும் இருந்தாலும் கூட அவர்களை தீவிரமாய் கண்காணிக்க வேண்டுமென்று உறுதியாக நம்புகிறேன்.

### விளையாட்டு எனும் விக்கிரக ஆராதனை

நம் வாழ்க்கையில் எதுவும் விக்கிரகமாக ஆக முடியும் என்று நான் நம்புகிறேன். தேவனைப் பற்றி ஒருவர் எப்படி ஆழமாக உணர்வாரோ அதேபோல் வேறொன்றிற்காக ஒருவர் ஆழமாக உணரும்போது அது விக்கிரக ஆராதனையாகி விடுகிறது. வேறு விதமாகச் சொன்னால், இந்த விக்கிரக ஆராதனையே ஒருவரை இப்பூமியில் வாழும்படியான ஆசையைத் தூண்டுகிறது. நாம் எப்படி விளையாட்டை விக்கிரக ஆராதனையாக்குகிறோம் என்பதை பார்ப்போம்.

- நாம் கட்டும் மிகப் பிரமாண்டமான விளையாட்டரங்கங்கள் பழங்கால கோயில்களிலிருந்து வித்தியாசப்படுகிறதா?
- நாம் விளையாட்டுப் போட்டிகளை பக்திப் பூர்வமாக பார்ப்பதில்லையா, கேட்பதில்லையா?
- நம் அபிமான அணி விளையாடுவதைக் காண்பது வாழ்க்கையில் எல்லாவற்றையும் விட முக்கியமாக நமக்கு இருக்கிறதா?
- நம் உணர்வுப்பூர்வமான நிலை நம் அபிமான அணியின் செயல்திறனைச் சார்ந்திருக்கிறதா?

பெரும்பாலானவர்கள் விளையாட்டுப் போட்டிகள் தங்களை வாழத்தகுதியானவர்களாக மாற்றுகிறது என்று நினைப்பது உண்மைதானே?

நான் என் மகன் **Base ball** விளையாட்டை ஒரு விக்கிரமாக கொண்டிருப்பதை விரும்பவில்லை. அதேபோல் **Base ball** விளை யாட்டை காண்கிறதற்காகவே உயிர்வாழ விரும்புவது போன்ற மன நிலையை அவன் பெற்றிருக்க நான் விரும்பவில்லை. அதேபோல் **Base ball** இல்லையென்றால் வாழ்க்கை முழுமை பெறாது என்னும் மனநிலையையும் அவன் பெற்றிருக்க நான் விரும்பவில்லை. மேலும், **Base ball** விளையாட்டு ஒரே இரவில் மறைந்து போனாலும் வாழ்க்கை யில் எல்லாம் நன்றாகத்தான் இருக்கும் என்பதை அவன் அறிய விரும்புகிறேன்.

இப்படி எல்லாம் நான் சொல்வதினால் என்னை யாரும் தவறாக எண்ண வேண்டாம். என் மகன் அந்த **Base ball** விளையாட்டை ஆசைதீர விளையாடட்டும் ஆனால், ஒரு நாளின் முடிவில் அது வெறும் விளையாட்டு தான், அது கடவுள் அல்ல என்பதை அவன் நினைவில் கொள்ள ஆசைப்படுகிறேன்.

## இயேசுவுக்கு முதன்மைத்துவம்



நான் சிறுவனாக இருந்தபோது,என் தாய் நீ வாழ்க்கையில் ஒன்றைத்தான் முதன்மைப்படுத்த வேண்டுமென்று சொல்வதுண்டு. ஒருவருடைய வாழ்க்கையில் ஏதோ ஒன்றுதான் முதன்மை யாயிருக்க முடியும். ஏதோ ஒன்றுதான் எல்லா வற்றையும் விட முக்கியத்துவம் பெற முடியும். ஒரு தகப்பனாக நான் (**Base ball**) எங்கள் குடும்பத்தில் வேறெதும் முதன்மைத்துவம் பெறக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறேன்.

மத்தேயு 10:37–39 வசனங்களில் இயேசு கிறிஸ்து தம்மைப் பின் பற்றுபவர்களைப் பற்றி சொல்லும்போது இவ்விதமாகச் சொல்கிறார் **தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக் கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்கு பாத்திரன் அல்ல. தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்** என்று இயேசு நம்மிடம் பேசினால் அடிப்பந்தாட்டம் (**Base ball**) அல்லது கால்பந்தாட்டத்தை என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல என்று சொல்ல மாட்டாரா? இயேசுவும் அவருடைய ராஜ்யமும்தான் நம் வாழ்க்கையில் முதன்மைத்துவத்தை

கொண்டிருக்க வேண்டும். அதோடு ஒப்பிடுகையில் மற்றவை களையெல்லாம் குப்பைகளாகக் கருதப்பட வேண்டும்.

### மிக முக்கியமான உண்மை

ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் விளையாட்டு தங்கள் இல்லங்களில் விக்கிரகமாக மாறாதபடி தீர்மானம் எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய இருதயங்களில், நம் பிள்ளைகளின் இருதயங்களில் இயேசு கிறிஸ்து இருக்க வேண்டிய சிங்காசனத்தில் ஒரு விளையாட்டு பொம்மையை இருக்க வைக்கக் கூடாது என்று நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு விளையாட்டு நம் வாழ்க்கையை ஆளுகை செய்ய, நம் கால அட்டவணையின் மீது ஆதிக்கம் செலுத்த, நம் உணர்வுப் பூர்வமான நிலையை தீர்மானிக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. நாம் குடும்பமாக சேர்ந்து, **ஒரு விளையாட்டு எங்கள் இல்லத்தில் மிக முக்கியமான ஒன்றாக இருக்காது** என்று வாயைத் திறந்து அறிவிக்க வேண்டும்.

நாம் ஆச்சரியமூட்டும் வகையில் ஆர்வமுடன் அதிக நேரத்தையும், பணத்தையும், ஆற்றலையும் விளையாட்டுக் காரியங்களுக்கு செலவழிப்பதற்கு பதிலாக இயேசுகிறிஸ்துவின் காரியங்களுக்கு செலவழிக்கும்போது அது பிள்ளைகள் மீது நேர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். பிள்ளைகள் தங்கள் வீடுகளில் எவைகள் முக்கியமானவைகள் என்பதை தாங்களாவே புரிந்து கொள்வார்கள். அவர்கள் வீட்டில் எதற்கு முதன்மைத்துவம் கொடுக்கப்பட வேண்டும். என்பதை பெற்றோர்களுடைய பேச்சை வைத்தும், குறிப்பாலும் அறிந்து கொள்வார்கள். விளையாட்டும், இன்னும் வேறு காரியங்களும் ஆராதனை, வேத பாட வகுப்பு, சுவிசேஷ ஊழியம் போன்றவற்றை விட முக்கியமானது என்றால் அவர்கள் சொல்லிவிடுவார்கள். வெறுமனே நாம் பிரசங்கிக்கும் பிரசங்கங்கள் மட்டும் நம் குழந்தைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. நம் பணத்தாலும், நேரத்தாலும், நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பது தான் நம் பிள்ளைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்.

என் பிள்ளைகள் என்று வரும்போது பதிலை கேள்வியிலேயே கொண்டுள்ள கேள்வியான நான் விளையாட்டு வீரர்களை வளர்க்கிறேனா அல்லது கிறிஸ்தவர்களை வளர்க்கிறேனா எனும் கேள்வியை எனக்கு நானே கேட்டுக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம் – உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபேசியர் 6:1–4).

# அதிகாலை
## Early Morning

Betty Burton Choate

என் தலைக்குள் சாவு மணி அடிப்பது போல

சோகச் சம்பவம் என்னை சோர்வடையச் செய்து

சித்திரவதைகள் என்னை சின்னாபின்னமாக்க

திடீர் திகில்களில் நான் திக்குமுக்காட

மக்களிடமிருந்து பிரிந்து மனமுறிந்துபோனேன்.

சகலமும் ஸ்தம்பித்துப்போன நிசப்தமான வேளைகளிலேயே
நான் மரித்துக்கொண்டிருக்கிறேன்!



நான் அசையட்டும்!

நான் வரட்டும்!

சுகம் பெறும்படியான ஓர் அடியை நான்

முன்னே எடுத்து வைக்கட்டும்

பெலனை நோக்கி ஓர் அடி
எடுத்துவைத்தே ஆக வேண்டும்.

நான் நடக்கட்டும்!

நான் அசையட்டும்!

நான் வேலை செய்யட்டும்!

எல்லா வேதனைகளையும்அழுது, களைத்து

இந்த ராத்திரியிலே நான் ஓய்வெடுக்கட்டும், உறங்கட்டும்

தேவனுடைய இருதயத்திலிருந்து இறங்கிவரும் சமாதானத்தை

பெற்றுக் கொள்ளட்டும்.




# லூக்கா புத்தகம் மூலமாக தேடுதல் வேட்டை

## Scavenger Hunt Through Luke

Rebecca Rushmore

- ☛ லூக்கா இந்த புத்தகத்தை யாருக்கு எழுதுகிறார்?
- ☛ யோவான் பிரசங்கிக்க ஆரம்பித்தபோது பிரதான ஆசாரியர்களாக குறிப்பிடப்பட்டிருக்கும் இவருடைய பெயர்களை எழுதுக?
- ☛ இயேசு கிறிஸ்து தம்முடைய பொது ஊழியத்தை எந்தப் பகுதியில் தொடங்கினார்?
- ☛ தங்கள் வலைகளை விட்டு விட்டு மனுஷரைப் பிடிப்பதற்காக புறப்பட்ட மூன்று மீனவர்களின் பெயர்களை எழுதுக?
- ☛ இயேசு கிறிஸ்து பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்து கொள்வதற்கு முந்தையை இரவில் என்ன செய்தார்?
- ☛ இயேசு இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று யாரைப் பார்த்து சொன்னார்?
- ☛ மறுரூப மலைக்காட்சியில் இயேசுவோடு தோன்றின மனிதர்களின் பெயர் என்ன?
- ☛ குஷ்டரோகத்திலிருந்து சுகமானவர்களில் இயேசுவுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்த வந்தவன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்?
- ☛ இயேசு கிறிஸ்து தாம் கைது செய்யப்படுவதற்கு முன்பாக எங்கே ஜெபம் பண்ணினார்?
- ☛ இயேசு கிறிஸ்து எங்கேயிருந்து பரமேறினார்?

## வேதாகம கதாப்பாத்திரம்

# David'S Charge to Solomon
# சாலொமோனுக்கு தாவீதின் கட்டளை
**Therman Hodge**

என் குமாரனாகிய சாலொமோனே நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்ததர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார். நீ அவரைத் தேடினால் உனக்கு தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார். இப்போதும் எச்சரிக்கையாயிரு; பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னை தெரிந்து கொண்டார். நீ திடன்கொண்டு, அதைநடப்பி என்று சொன்னான் [I நாளாகமம் 28:9,10] தாவீது ஜனங்களை தேவனுக்கு பயப்படும்படி புத்திமதி சொன்னார். சாலொமோனுக்கு தாவீதின் மற்றுமொரு கட்டளை [I ராஜாக்கள் 2:1–4] ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

தாவீது மரணமடையும் காலம் சமீபித்தபோது, அவன் தன் குமாரனாகிய சாலொமோனுக்கு கட்டளையிட்டுச் சொன்னது: நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியிலே போகிறேன்; நீ திடன் கொண்டு புருஷனாயிரு நீ என்ன செய்தாலும், நீ எங்கே போனாலும், எல்லாவற்றிலும் புத்திமானயிருக்கிறதற்கும், கர்த்தர் என்னைக் குறித்து: உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்கும் தங்கள் வழியை காத்துக் கொண்டால், இஸ்ரவேலின் சிங்கா சனத்தின் மேல் வீற்றிருக்கத்தக்க புருஷன் உனக்கு இல்லாமற் போவதில்லை என்று சொன்ன தம்முடைய வார்த்தையைத் திடப் படுத்துகிறதற்கும், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதி யிருக்கிறபடி, நீ உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளையும், கற்பனைகளையும், நியாயங்களையும், சாட்சியங்களையும் கைக் கொள்ள, அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக [I இராஜாக்கள் 2:1–4].

### I தேவனுடைய ஊழிக்காரன் தேவனை அறிந்திக்க வேண்டும்.

சாலொமோன் தன் பிதாவாகிய தேவனை அறிந்துகொள்ளும்படி கட்டளைப் பெற்றிந்தார் [I நாளாகமம் 28:9]. அப்போஸ்தலனாகிய யோவான் தேவ ஆவியினால் ஏவப்பட்டு ஒருவர் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதன் மூலமாகத் தான் அவரை அறிந்திருக்கிறதை நிரூபிக்க முடியும் என்று எழுதுகிறார். தேவனு டைய கற்பனைகளை கைக்கொள்வது தான் அவரை அறிந்து கொள்வதற்கு ஆதாரமாயிக்கிறது.

## II சாலொமோன் தேவனை சேவிக்க வேண்டியதாயிருக்கிறது.

சாலொமோன் தேவனை உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும் சேவிக்கும்படி கட்டளைப் பெற்றிருந்தார். வசனம் [I நாளாகமம் 28:9,10] கிறிஸ்தவர்களாகிய நாமெல்லாரும் கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாக நிலைத்திருக்க வேண்டும் [அப்போஸ்தலர் 11:23]. நாமும் சாலொமோன் ஞானியைப்போல் உத்தம இருதயத்தோடும், உத்தம மனத்தோடும் தேவனை சேவித்தாலொழிய அவர் நம் சேவையை ஏற்றுக்கொள்ளவே மாட்டார். நாம் பயத்துடனும், நடுக்கத் துடனும் கர்த்தரை சேவிக்க வேண்டும் [சங்கீதம் 2:11; எபிரெயர் 12:28]. நாம் யாருக்கு சேவை செய்கிறோம் [ரோமர் 6:16-18] கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கிறபடியால் நாம் அவரை எப்படிச்சேவிக்க வேண்டும் - மனப்பூர்வமாக சேவிக்க வேண்டும் [கொலோசெயர்3:23,24]

தாவீது தன்னுடைய குமாரனாகிய சாலொமோன் தாமதிக்க கூடாது என்று புத்திமதி சொல்கிறார். நாமும் அதிகாலேமே தொடர்ந்து கர்த்தரைத் தேடுகிறவராக இருக்க வேண்டும். நீங்கள் கர்த்தரோடி ருந்தால், அவர் உங்களோடிருப்பார் நீங்கள் அவரைத் தேடினால் உங்களுக்கு வெளிப்படுவார் அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார் [II நாளாகமம்15:2]. அதேபோல், நாமும் எச்சரிக்கையாயிருந்து. தேவனைத் தொடர்ந்து தேட வேண்டும் உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு இவைகளில் நிலை கொண்டிரு; இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய் [I தீமோத் 4:16].கிறிஸ்தவர்கள் குறிப்பாக விழாபடிக்கு எச்சரிக்கை யாயிருக்கக்கடவன் [Iகொரிந்தியர் 10:12,13].

## III தாவீது சாலொமோனிடம் திடன் கொண்டு அதை நடப்பி என்று சொன்னார்

ஒழுக்க ரீதியாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் பெலன் மிகவும் அவசியமானது. தேவனுடைய பிள்ளைகள் கர்த்தரில் பலப்பட வேண்டும் [எபேசியர் 6:10] நாம் தேவனால் கொடுக்கப்பட்ட பொறுப்பு களை நிறைவேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும். செயல்பாடு மிகவும் அவசியமாயிருக்கிறது [யாக்கோபு 1:27]. கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய கிரியையிலே பெருகுகிறவர்களாக இருக்க வேண்டும். [I கொரிந்தியர் 15:58]. பரபரப்பாக வேலை செய்கிறவர்களைத்தான் அழைக்கிறார். உதாரணமாக, மோசே யெத்திரோவின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிந்தார், கிதியோன் கோதுமையை தூற்றிக் கொண்டிருந்தான், தாவீது தன் தகப்பனின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார், நெகேமியா ராஜ அரண்மனையிலே பானபாத்திரக் காரனாக இருந்தார், பேதுருவும், அந்திரேயாவும் வலைகளை கொட்டுக் கொண்டிருந்தார்கள். கர்த்தருடைய சேவையில் சோம் பேறிகளுக்கோ அல்லது சும்மா இருப்பவர்ளுக்கோ இடமே இல்லை. ✝

## வேதாகம கதாப்பாத்திரம்
## Stephen : A Faithful Witness To The End
# ஸ்தேவான் : இறுதிவரை ஓர் உண்மையுள்ள சாட்சி
**Brian . R. Kenyon**

அமெரிக்க ஐக்கிய தேசத்தில் நினைவு நாள் என்று ஒன்று வருடந்தோறும் அனுசரிக்கப்படுகிறது. நாட்டுக்காக உயிர் நீத்த ராணுவ வீரர்களின் நினைவாக இந்த நினைவு நாள் அனுசரிக்கப் படுகிறது. சுதந்திரத்திற்காக தங்கள் உயிரை தியாகம்செய்த வீரர் களுக்காக நன்றி என்று மட்டும் தான் சொல்ல முஜயும். சுதந்திரத் திற்காக அந்த ராணுவ வீரர்கள் தங்கள் உயிரை விடுவதற்கு உண்மைத் தன்மை தான் காரணமாயிருந்திருக்கிது. இருந்த போதிலும், அரசியல் விடுதலையை விட விலையுயந்த ஆவிக்குரிய விடுதலைக்காக உயிர் நீத்த சில வீரர்களை நாம் வேதாகமத்தின் பக்கங்களில் பார்க்க முடியும். அப்படிப்பட்ட வீரர்களில் ஒருவர்தான் ஸ்தேவான். அவர் வெளிப் படுத்திய குணாதிசயங்கள் நாம் கர்த்தருக் காக இவ்வுலகில் வாழத் தூண்டுகோலாக இருப்பது மாத்திரமல்லாமல்; நம் உண்மைத் தன்மைக்காக உயரிய விலையான உயிரைக் கொடுத்ததாவது கர்த்தருக்காக வாழ வேண்டுமென்கிற ஆர்வத்தை நமக்குள் ஏற்படுத்தும். ஸ்தேவானைப் போல் நாம் எப்படியெல்லாம் இருக்க முடியும் என்று பார்ப்போம்.

### பந்தி விசாரனை செய்ய ஆயத்தமாயிருந்தார்.

ஸ்தேவான் முதன் முதலில் அப்போஸ்தலடைய நடபடிகள் புத்தகம் ஆறாம் அதிகாரத்தில் அறிமுகமாகிறார். எருசலேம் சபையானது தேவையில் இருந்தவர்களைக் குறித்து அக்கறை உடையதாக இருந்தது. இப்படிதான் எல்லா கிறிஸ்தவர்களும் இருக்க வேண்டும் (யாக்கோபு 1:27; கலாத்தியர் 6:10) எருசலேம் சபையால் கிரேக்க விதவைகளை சரியாக விசாரிக்க முடியவில்லை என்கிற சூழ்நிலை ஏற்பட்டது. (அப்போஸ்தலர் 6:1). அப்போஸ்தலர்களால் தேவ வசனத்தை போதியாமல், விட்டுவிட்டு பந்தி விசாரணை செய்ய முடியவில்லை ( அப்போஸ்தலர் 6:2) எனவே தான், அப்போஸ்தலர்கள் சபையாரைப் பார்த்து, ஆதலால் சகோதாரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெயம் பண்ணுவதிலும் தேவ வசனத்தை போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள் (அப்போஸ்தலர் 6:3,4).

ஸ்தேவான் சபையாரால் பந்தி விசாரணை செய்ய தெரிந்தெடுக்கப்பட்ட ஏழு நபர்களுள் ஒருவராக இருந்தார் [அப்போஸ்தலர் 6:5]. அவர் எல்லா தகுதியம்சங்களுக்கும் உட்பட்டிந்தார். முதலாவது, ஸ்தேவான், நற்சாட்சி பெற்றவராக இருந்தார் [அதாவது, இவரை குறித்து நேர்மையான அறிக்கை கொடுக்கப்பட்டது.] இராண்டாவது, இவர் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராய் காணப்பட்டார். எனவே, இவர் பெரிய அற்புத அடையாளங்களைச் செய்திருக்கிறார் [அப்போஸ்தலர் 6:3]. ஸ்தேவான் மனமுவந்து செய்ய விரும்பிய பந்தி விசாரணை செய்யும் வேலை இன்றைய நாட்களில் பலரால் இழிவான வேலையாக பார்க்கப்படுகிறது. கிறிஸ்துவின்நிமித்தம் நாம் இந்த வேலையைச் செய்ய விரும்புவோமா? ஸ்தேவானுக்கு இருந்த அதே தகுதியம்சங்களை பெற்றிருந்தால் நாமும் விரும்புவோம். நாம் நற்சாட்சி பெற்றவர்களாயிருக்க வேண்டும் [III யோவான் 12] இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் அற்புத அடையாளங்கள் செய்யும்விதமாக பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதில்லை என்றாலும்கூட ஆவியினால் நிறைந்து காணப்பட வேண்டுமென்று தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் [எபேசியர் 5:18]. ஸ்தேவானுக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் விதமாக ஞானத்தைப் பெற்றிருந்தார். ஆனால், நாம் தேவனிடம் ஞானத்தைக் கேட்டு பெற்றிருக்கிறோம் [யாக்கோபு 1:5]. கர்த்தர் நம்மிடம் அவசியம் என்று கேட்டுக் கொண்டால் நாம் பந்தி விசாரணை செய்ய நம் குணாதிசயம் அனுமதிக்குமா?

**தேவனுடைய வார்த்தையை பயமின்றி போதித்த போதகர்.**

ஸ்தேவான் பந்தி விசாரணை செய்ய தெரிந்தெடுக்கப் பட்டுருந்தாலும் கூட தேவனுடைய வார்த்தையை மற்றவர்களுக்குப் போதிக்கும் வாய்ப்பு தனக்கு கிடைத்தபோது அதை பயன்படுத்திக் கொள்ள தயக்கம் காட்டவில்லை. அதாவது, ஸ்தோவான் பந்தி விசாரணையில் ஈடுபட்டபடியால் ஜனங்களோடே நேரடியாக இடைபடும் வாய்ப்பை அவர் பெற்றார். அதை பயன்படுத்திக் கொண்டு ஜனங்களுக்கு தேவனுடைய வார்த்தையை போதித்தார். அவருடைய போதனை வெளிப்படையாகவும், தெளிவாகவும், குற்றப்படுத்த முடியாததாகவும் இருந்தது. ஜெப ஆலயத்தில் இருந்த நன்கு கற்றுத்தேர்ந்த மனிதர் களால் கூடதேவனை எதிர்க்க கூடாமற் போயிற்று [அப்போஸ்தலர் 6:10] சமரசமில்லாத அவருடைய போதனையின் காரணமாக சத்தியத்தை நேசிக்காதவர்களிடமிருந்து எதிர்ப்பை சம்பாதித்தார்.

அப்பொழுது அவர்கள் மோசேக்கும், தேவனுக்கும் விரோதமாக இவன் தூஷண வார்த்தைகளைப் பேசக்கேட்டோம் என்று சொல்லும்படியாக மனுஷரை ஏற்படுத்தி ஜனங்களையும் மூப்பரையும், வேதபாரகரையும் எழுப்பிவிட்டு அவன் மேல் பாய்ந்து, அவனைப்

பிடித்து, ஆலோசனை சங்கத்துக்கு முன்பாக இழுத்துக்கொண்டு போய் பாய்ந்து, பொய்சாட்சிகளையும் நிறுத்தினார்கள். இவர்கள் இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப் பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான் எப்படி யென்றால், நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப் போட்டு, மோசே நமக்கு கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக் கேட்டோம் என்றார்கள் [அப்போஸ்தலர் 6:11– 14].

இருந்தபோதிலும், ஸ்தேவான் அவர்களுடைய கேள்விகளுக்கு தக்க பதிலடி கொடுத்தார், அவர்களுக்கு பதிலளிக்கும்போது தேவனுடைய ஜனங்களின் நீண்ட வரலாற்றை சுருக்கமாகச் சொன்னார் [அப்போஸ்தலர் 7:2 –36]. மேலும், மோசே என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை தேவன் உங்களுக்காக எழும்பப்பண்ணுவார் என்று சொன்ன தீர்க்கதரிசியை இயேசு கிறிஸ்துவே என்று காட்டினார் [அப்போஸ்தலர் 6:37–38]. இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் இந்த ஸ்தேவானைப் போல பயமில்லாமல் தேவனுடைய வார்த்தைகளை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கின்றவர்களாக இருக்க வேண்டும்.

நாம் ஒருவேளை கூட்டங்களில் பேசாமல் இருக்கலாம், நாம் வேத வல்லுநர்களாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், நாமெல்லோருமே தேவனுடைய வார்த்தையைப் பேசும் வாய்ப்பு கிடைத்தால் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பெற்றோர்கள் என்னும் நிலையில் பிள்ளைகளுக்கு தேவனுடைய வார்த்தையை நாம் போதிக்க வேண்டும் [எபேசியர் 6:4]. இதன் பொருள் தேவனுடைய வார்த்தையை முதலில் நாம் அறிந்திருக்க வேண்டும் [II தீமோத்தேயு 2:15].


### மரணபரியந்தம் உண்மையாயிருந்தார்

ஸ்தேவான் சத்தியத்தை தைரியமாகப் பேசினார். ஆனால், அதைக் கேட்டவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டு நாங்கள் என்னச் செய்ய வேண்டுமென்று கேட்பதற்குப் பதிலாக [அப்போஸ்தலர் 2:37] , இவைகளை அவர்கள் கேட்டபொழுது, மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்து பல்லைக் கடித்தார்க்கள் [7:54]. ஸ்தேவானின் மரணம் அவருடைய பிரசங்கத்தின் நேரடி விளைவாகும். சில பிரசங்கங்கள் கேட்பவர்களை தூங்கச் செய்யும். ஆனால், ஸ்தேவானின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் அவரை நிரந்தரமாக தூங்கச் செய்து விட்டார்கள் [அதாவது கிறிஸ்துவின் வருகை வரை] I தெசலோனிக்கேயர் 4:15–17]. ஸ்தேவானின் பிரசங்கம் அவரைத் தனிப்பிட்ட ரீதியில் பாதித்து, அவருக்கு விரோதமாக பொய் சாட்சிகளை ஏற்படுத்தி பிரதான ஆசாரியனுக்கு முன்பாகக் கொண்டு நிறுத்தியது. [6:13,14:17:1]. ஸ்தேவான் கொடூரமாக இரக்கமற்ற முறையில் கொலை செய்யப்பட்டார் [அப்போஸ்தலர் 7: 54– 60]; அவருடைய மரணம் சபையை வெகுவாக பாதித்தது. ஸ்தேவானின் மரணம் சபையில் மிகுந்த துக்கத்தை ஏற்படுத்தி [8:2]

சபை வெளிநாடுகளுக்கு சிதறும் படி செய்தது (அப்போஸ்தலர் 8:3–4; 11:19).

ஸ்தேவானின் மரணம் காரணமாக அப்போஸ்தலர்கள் தவிர மற்ற கிறிஸ்தவர்கள் எல்லாரும் எருசலேமை விட்டு மற்ற தேசங்களுக்கு சிதறிப் போனார்கள். சபைக்கு முடிவு வந்து விட்டது போல் ஆரம்பத்தில் தெரிந்தாலும் உண்மையில் சபை விரிவடைந்தது.

கிறிஸ்தவர்கள் பல நாடுகளுக்கு சிதறிப் போனார்கள். அவர்கள் பிரசங்கிக்கவும், போதிக்கவும் சபைகளை ஸ்தாபிக்கவும் செய்தார்கள் (அப்போஸ்தலர் 8:4) ஸ்தேவானுடைய மரணத்தில் அவர் கண்டதும் சொன்னதும் முக்கியத்துவம் பெறுகிறது. அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான் (7:56). இது கிறிஸ்து தம்முடைய சீஷர்கள் பாடுபடுவதைக் பார்த்து அவர் எவ்வளவு அக்கறையும், ஈடுபாடும் கொண்டிருக்கிறார் என்பதையும் தான் காட்டுகிறது. மேலும், ஸ்தேவான் இயேசுவை நோக்கி இயேசுவே என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்றும் இவர்கள் மேல் இந்த பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னது தேவனுடைய கிறிஸ்துவைப் போன்ற மனநிலையைக் காட்டுகிறது (லூக்கா 23:34).



ஸ்தேவானின் மரணம் இயேசுவின் வாக்கியத்தை மேலும் தெளிவாக்குகிறது. நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் ( வெளி 2:10). இது வெறுமனே நாம் மரிக்கும் நாள் வரை உண்மை யாயிருக்க வேண்டும் என்று பொருள் படாது. மாறாக, நாம் உண்மையாயிருப் பதினால் நம் ஜீவன் நஷ்டடப்பட்டாலும் உண்மையாயிருக்க வேண்டும் என்று பொருள்படுகிறது.

**முடிவுரை**

ஸ்தேவான் கிறிஸ்துவின் நிமித்தம் தன் ஜீவனையே கொடுத்தார். அவர் நமக்கு மிகச் சிறந்த உதாரணமாக இருக்கிறார். கர்த்தர் நம்மிடம் கேட்டு கொண்டால் பந்தி விசாரணை செய்யும் அளவுக்கு நம் குணா திசயம் இருக்கிறதா? நாம் தேவனுடைய வார்த்தையை பயமின்றி போதிக்கிறோமா? நாம் மரணபரியந்தம் உண்மையாயிருப்போமா? நாம் நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்பதற்கும், அவர் கட்டளைக்கு எப்பொழுதும் கீழ்ப்படியவும், அவருக்காக நம் ஜீவனைக் கொடுப்பதற்கும் கர்த்தர் தாமே நமக்கு பெலனைத் தருவாராக (கலாத்தியர் 6:9) ✝

# வேதாகம கேள்விகள்

## இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார்?

## WHY WAS JESUS BAPTIZED?

**Jerry A. Jenkins**

இன்றைய நாட்களில் ஜனங்கள் எண்ணற்ற காரணங்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறார்கள். உதாரணமாக:

1. அவர்கள் குழந்தைகளாயிருந்த போது பெற்றோர்கள் அவர்களை ஞானஸ்நானப்படுத்தியிருக்கிறார்கள்.
2. சுற்றிலும் உள்ளவர்கள் ஞானஸ்நானம் பெற்றக் கொண்டபடியால், அதினால் உந்தப்பட்டு அந்தக் குழுவில் தன்னையும் இணைத்துக்கொள்கிறார்கள்.
3. தாங்கள் புதிய பிறப்பின் அனுபவத்திற்குள்ளாக கடந்து வந்தவர்கள் என்பதை மற்றவர்களுக்கு காட்டுவதற்காக.



4. அவர்கள் தேவனுடைய கிருபையால் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டுவிட்டதை வெளிப்படையாக உறுதிப்படுத்துவதற்காக
5. அவர்கள் இரட்சிப்பின் நிலை அது தான் என்று விசுவாசிக்கிறார்கள். ஜனங்கள் இரட்சிக்கப்படுவதற்கு அநேகமாக வேறு சில காரணங்களும் இருக்கலாம்.

இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார்? யோவான்நானன் ஞானஸ்நானங் கொடுத்து கொண்டிருந்த யோர்தான் நதிக்கு இயேசு ஏறத்தாழ 70 அல்லது 80 மைல்கள் தூரம் பயணம் செய்திருக்கிறார் என்றால் ஞானஸ்நானத்தை அவர் முக்கியமான ஒன்றாகத் தான் கருதியிருக்க வேண்டும். யோவான் ஞானஸ்நானங் கொடுக்கிறார் என்பதற்காக இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெறவில்லை. இதைக் குறித்து தேவ ஆவியினால் ஏவப்பட்ட புதிய ஏற்பாட்டு ஆசிரியர் யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங்கொடுத்து, பாவமன்னிப்புக் கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தான் என்று சொல்கிறார். (மாற்கு1:4)

யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்து பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற தேவையில்லை என்பதை அறிந்திருந்தார். அதனால் தான் யோவான் அவருக்குத் தடை செய்து; **நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியிருக்க, நீர் என்னிடத்தில்**

**வரலாமா என்றான்** [மத்தேயு 3:14] எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும் யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் யோவான் ஸ்நானனிடத்தில் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்; அதற்காக இவர்களோடுகூட இயேசுவும் ஞானஸ்நானம் பெற்றாரா? நம் கர்த்தரே இதற்கான விடையைத் கொடுக்கிறார், **இப்பொழுது இடங்கொடு இப்படி எல்லா நீதியையும் நிறை வேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார்** [மத்தேயு 3:15]. மாபெரும் மெதடிஸ்ட் வேத வல்லுநர் ஒருவர் எல்லா நீதியையும் நிறை வேற்றுவது எனும் சொற்றொடரைப் பற்றி வியாக்கியானம் செய்யும் போது, அதாவது ஒவ்வொரு நீதியான சட்டத்தையும் நிறை வேற்றுவது அவருக்கு ஏற்றதாயிருக்கிறது என்று கூறுகிறார்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஞானஸ்நானக் கட்டளை க்குக் கீழ்ப்படிய மறுத்திருந்தால் பரிசேயர் மற்றும் நியாயசாஸ்திரி களின் பட்டியலில் இவரும் வந்திருப்பார். இதைப் பற்றி லூக்கா ஆசிரியர் சொல்லும் போது பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்கு கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள் என்று சொல் கிறார் [லூக்கா 7:30] மோசேயின் பிரமாணத்தில் ஞானஸ்நானம் கட்டளையாக கொடுக்கப்படவில்லை, ஆனால், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்பதைப் பிரசங்கிப்பதற்காகவும், பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் கொடுப்பதற்காகவும் தேவன் யோவான் ஸ்நானனை அனுப்பினார்.

இந்த 21 ஆம் நூற்றாண்டில் ஜனங்கள் எதற்காக ஞானஸ்நானம் பெறவேண்டும்? சில காரணங்கள் இதோ:

1. ஏனென்றால், இயேசு அதைக் கட்டளையிட்டார் [மாற்கு 16:16, மத்தேயு 28:18-20].
2. ஞானஸ்நானம் விசுவாசத்தோடு கூடியதாகும். படியாகவும், கிறிஸ்துவின் போதனையில் ஞானஸ்நானம் இரட்சிப்போடு தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது. [மாற்கு 16:16].
3. ஞானஸ்நானம் என்பது அப்போஸ்தலருடைய உபதேசத்தில் மனந்திரும்புதல் மற்றும் பாவ மன்னிப்போடு தொடர்பு உடைய தாயிருக்கிறது. [அப்போஸ்தலர் 2:38].
4. ஞானஸ்நானத்தில் தான் ஒருவர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறார். பவுல் ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக்கழுவப்படு என்றார் [அப்போஸ்தலர் 22:16].
5. ஏனென்றால், ஞானஸ்நானத்தில் தான் ஒருவர் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறார் [ரோமர் 6:3].
6. ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவின் மரணத்தின் சாயலிலும், அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப் பட்டிருக்கிறோம் [ரோமர் 6:34].

# கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வருகிறார்.

Christ Coming with All His Saints

**Kevin L.Moore**

**நா**ம் I தெசலோனிக்கேயர் 3:13ல் இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவராய் இருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக என்று வாசிக்கிறோம். பின்பு யூதா 14,15 வசனங்களில் **ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக் குறித்து: இதோ, எல்லோருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்து வந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும் தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும் ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்** என்று வாசிக்கிறோம்.



நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களுக்காக வருகிறார். பரிசுத்தவான்களோடு அல்ல என்று மற்ற வசனங்கள் சொல்கிறபடியால் முரண்படுகிறது போல் தோன்றும். இந்த வசனத்துக்கு கூடுதல் விளக்கம் தேவைப்படுகிறது. சில மொழியாக்கங்களில் கிரேக்க பதமான hagioi பரிசுத்தவான்கள் என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் உண்மையான பொருள் பரிசுத்தவான்கள் என்பதாகும்.

பரிசுத்தவான்கள் யார்? இதற்கான தெளிவான விளக்கத்தை வேதாகமம் கொடுக்கிறது. **அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்** (மத்தேயு 25:31). எனவே, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவரோடுகூட வருபவர்கள் பரிசுத்த தூதர்கள்தான் (மத்தேயு 13:39;I தெச 1:7) கர்த்தரை நடுவானில் சந்திக்கப்போகும் உயிரோடிருக்கிறவர்களோ அல்லது உயிர்த்தெழுந்த உண்மையுள்ள வர்களோ அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

# மனந்திரும்புங்கள் அல்லது கெட்டுப்போங்கள்

Repent or Perish

Dennis Gulledge

சுவிசேஷப் பிரசங்கியர்கள் இந்த வார்த்தைகளை எண்ணற்ற முறை மனந்திரும்புதலின் அவசியத்தை வலியுறுத்துவதற்காக தங்கள் பிரசங்கங்களில் பயன்படுத்தியிருக்கிறார்கள். பாவத்திலிருந்து திரும்புதல் அல்லது மனந்திரும்புதல் மனமாற்றத்தில் இன்றியமையாத ஒன்று என்பது எவ்வித கேள்விக்கும் இடமில்லாமல் உண்மை யாயிருக்கிறது [அப்போஸ்தலர் 17:30,31]. மேலும், நாம் கைக் கொள்கிற நம்புகின்ற எல்லாவற்றிற்கும் தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தை நாம் வலியுறுத்துகிறோம் என்பதில் எந்த சந்தேக முமில்லை [I தெச. 5:21]. எவ்வித ஆதாரமுமின்றி பிரசங்கங்களை செய்து வரும் இந்த நாட்களிலே தேவனுடைய புதிய உடன் படிக்கையின் அதிகாரத்தை, நாம் செய்கின்ற, போதிக்கின்ற எல்லா வற்றிலும் நிலைநிறுத்த வேண்டும் [II தீமோத்தேயு 4:8].

**லூக்கா 13:1 – வசனங்களின் சூழ்நிலையை கவனியுங்கள்**

பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்: அந்த வேளையிலேயே அங்கே இருந்தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவருக்கு அறிவித்தார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக: அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே மற்ற எல்லா கலியேரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர் களா? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்கிறேன; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள். சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதை; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்ற வாளிகளாயிருந்தார்கள் என்று நினைக்கிறீர்களோ? அப்படியல்ல வென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியேவென்று உங்களுக்குச் சொல்லு கிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்றார்.

மேற்சொல்லப்பட்ட வசனப் பகுதியின் பின்னணி சம்பவம் என்னவென்றுப் பார்த்தால் அங்கே இயேசு கிறிஸ்து திரளான ஜனங்களுக்கு போதித்துக் கொண்டிருந்தார் (லூக்கா 12:1–13:9). இவ்வசனப்பகுதியில் மாயமாலத்தைப் பற்றிய அவருடைய போதனை (லூக்கா 12:1–12), பொருளாசை (13–34), விழித்திருத்தல் (35–48) வரவிருக்கின்ற சோகச் சம்பவங்கள் (49–59) மனந்திரும்புதல் (லூக்கா 13:1–9) போன்றவைகள் உள்ளடக்கம் 13:1ல் லூக்காவால் மேற்கோள் காட்டப்பட்டிருக்கும் சம்பவம் வேதாகமத்தில் எங்கும் பதிவு செய்யப் படவில்லை. யூதர்கள் மத்தியில் கலகம், அமளி போன்றவைகள் சர்வசாதாரணமாக காணப்பட்டிருக்கின்றன. பிலாத்துவின் கொடூர குணம் இங்கே ஆதாரப் பூர்வமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.


யோபு புத்தகம் ஒருவர் பாவம் செய்வதனால் தான் பாடுகளை அனுபவிக்கின்றனர் எனும் எண்ணம் அவர்களுடைய ஆழ்மனதில் பதிந்திருக்கிறது. இத்தவறான எண்ணத்திற்கு எதிராக இயேசு ஏற்கனவே தம்முடைய சீஷர்களுக்கு போதித்திருக்கிறார் (யோவான் 9:3). அதோடு கூட நம் கர்த்தர் சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டு பேர் சொல்லப்பட்ட சம்பவத்தையும் சேர்க்கிறார் (வசனம்4). இயேசு கிறிஸ்து இந்த சம்பவங்களைக் கொண்டு இஸ்ர வேல் ஜனங்களுக்கு மனந்திரும்புதலுக்கான பாடத்தை போதித் திருக்கிறார் (வசனம் 3,5) இந்த சம்பவங்கள் இஸ்ரவேலில் இயேசு கிறிஸ்துவின் மனந்திரும்புதலுக்கான அழைப்புக்கு வலு சேர்க்கிறது (மத்தேயு 4:17). எருசலேமுக்கு எதிராக தேவ கோபாக்கினை அல்லது தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஆயத்தமாக இருந்த காலக்கட்டத்தில் நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்று அந்த ஜனங்களைப் பார்த்து மன்றாடியதில் புதுமை ஏதாவது இருக்கிறதா? அந்த சீலோவாம் சம்பவம் அதாவது அந்த வரலாற்றுப் பூர்வமான உண்மை ஜனங்கள் தங்கள் பாவங் களிலிருந்து மனந்திரும்பாமற்போனால் நரகத்தில் என்றென்றும் அமிழ்ந்து போவார்கள் என்னும் அடிப்படைத் தேவையை எடுத்துப் போடவே இல்லை என்பது உறுதி. ✝

---

**சத்தியமானது ஏற்றுக் கொள்ளப்படும் சூழ்நிலை வரும்வரை அறிவிக்காமல் காத்திருப்பதைக் காட்டிலும், ஏற்றுக் கொள்ளப்படாமல் தள்ளப்பட்டாலும் அறிவிப்பது நல்லது.**

## திருமறை தியானம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**



நம்பிக்கை TV வெள்ளி காலை 7:30 – 8.00 மணி

தமிழன் TV சனி காலை 7:00 – 8.00 மணி

**மாத இதழ் : திருமறை ஆசான்**

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

<u>தொடர்புக்கு</u>

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.ஓப. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.


பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382
P.R. **சுவாமி** : 098440 70763
P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420
B. **அர்ஜுனன்** : 994435 58041

## சத்திய வழி

❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி**
❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763


## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**
❖ தமிழன் TV : செவ்வாய் மாலை 6:00 – 6:30 மணி
❖ நம்பிக்கை TV : வெள்ளி 8:00 – 8:30 மணி
❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்தலகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**
❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 காலை 7.00 மணி
அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
❖ நம்பிக்கை TV : ஞாயிறு மாலை 3:30 காலை 4.00 மணி
❖ **Good News TV** : செவ்வாய் இரவு 7:30 – 8.00 மணி
❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி
<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________

# ✯ சத்தியத்தின் குரல் ✯


## Editorial Team

Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Kingsly rajah
Abel R. Nayagam

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**


# 5 நிமிட வேத பாடம்

## பரிசுத்தவான்களும், சகோதரர்களும்

Paula Bates

1. யோவான் வனாந்திரத்தில் ஞானஸ்நானம் கொடுத்தது பாவ மன்னிப்புக்கென்று ................ ஞானஸ்நனத்தைக் குறித்து ................. பண்ணிக் கொண்டிருந்தான் (மாற்கு 1:4)

2. இயேசு அதைக் கேட்டு : பிணியாளிகளுக்கு ............. வேண்டியதேல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார் (மாற்கு 2:11)

3. அது முதல் இயேசு : ...................... பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று ........................ தொடங்கினார் (மத்தேயு 4:17).

4. அதுபோல, ................... அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களை குறித்து .................. உண்டாக்கியதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் ................... மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (லூக்கா 15:7).

5. அன்றியும் மனந்திரும்புதலும் .................... எருசலேம் தொடங்கி சகல கோத்திரத்தாருக்கும் அவருடைய .................... பிசங்கிக்கப் படவும் வேண்டியது ( லூக்கா 24:47).

6. பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் ................ ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்று கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் ......... நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் ................ யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி (அப்போஸ்தலர்கள் : 2:38,39)

For Further Information, Please Contact :